கலை
இலக்கிய
மாத
சஞ்சிகை

100/-

# ஜீவநதி

91 பிரதம ஆசிரியர் : க.பரணீதரன் சித்திரை 2016






**நேர்காணல்**

- கேஷாயினி எட்மண்ட் -



**தஜிகிஸ்தானின் மக்கள் கவி ரஸூல் கம்ஸதோவ் இன் கவிதைகளை நயந்து...**

- கெகிறாவ ஸுலைஹா -



**போரில் பாதிக்கப்பட்ட சிறுவர்களை மையப்படுத்திய படங்கள்**

- ரதன் -

# ஜீவநதி

கட்டுரைகள்


**சிந்தி மொழிக் கவிதைகள் சில குறிப்புகள்**
இப்னு அஸ்மாத் .............................. 03

**தகிஸ்தானின் மக்கள் கவி ரஸூல் கம்ஸதோவ் இன் கவிதைகளை நயந்து**
கெகிறாவ ஸ்லைஹா.............................. 11

**"எனக்குப் பசிக்கிறது" போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களை மையப்படுத்திய படங்கள்**
ரதன்.............................. 17

**வடமராட்சி வட்டார மொழியில் தமிழ் சினிமாவின் தாக்கம்**
இ.சு.முரளிதரன்.............................. 24

**புன்னியாமீன் என்னும் எழுத்தாளுமை**
ஏ.எச்.எம். நவாஸ்.............................. 42

**நிழல்கள் - 4**
**செரயாவுக்குக் கல்லெறிதல்**
**(116 நிமிடம், பாரசீக மொழி - 2008)**
அ.யேசுராசா .............................. 45


## சிறுகதைகள்


கிண்ணியா சபருள்ளா .............................. 07
மூதூர் மொகமட் ராபி .............................. 26
அலெக்ஸ் பரந்தாமன்.............................. 40


## நேர்காணல்


கேஷாயினி எட்மண்ட்.............................. 30


## கவிதைகள்


க.சட்டநாதன்.............................. 06
மன்னார் அமுதன்.............................. 10
ச.திருச்செந்தூரன்.............................. 33
மஞ்சு.............................. 39
புலோலியூர் வேல்நந்தன்.............................. 39
அல்வாயூர் சிவ.சிவநேசன்.............................. 39


## நூல் மதிப்பீடு


இ.சு.முரளிதரன்.............................. 48


## பேசும் இதயங்கள்



**புன்னியாமீன் என்னும் எழுத்தாளுமை**

- ஏ.எச்.எம் நவாஸ் -



**நேர்காணல்**

- கேஷாயினி எட்மண்ட் -



**அட்டை ஓவியம்**

நன்றி இணையம்

# ஜீவநதி

**2016 சித்திரை இதழ் – 91**

**பிரதம ஆசிரியர்**
க.பரணீதரன்

**துணை ஆசிரியர்கள்**
வெற்றிவேல் துஷ்யந்தன்
ப.விஷ்ணுவர்த்தினி

**பதிப்பாசிரியர்**
கலாநிதி த.கலாமணி

**தொடர்புகளுக்கு :**
கலை அகம்
சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் வீதி
அல்வாய் வடமேற்கு
அல்வாய்
இலங்கை.

**ஆலோசகர் குழு:**
திரு.தெணியான்
திரு.கி.நடராஜா

**தொலைபேசி** : 0775991949
0212262225

**E-mail** : jeevanathy@yahoo.com

**வங்கித் தொடர்புகள்**
K.Bharaneetharan
Commercial Bank, Nelliady
A/C - 8108021808 - CCEYLKLY



இச்சஞ்சிகையில் இடம்பெறும் அனைத்து ஆக்கங்களின் கருத்துக்களுக்கும் அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்புடையவர்கள்.



## ஜீவநதி சந்தா விபரம்

தனிப்பிரதி – 100/= ஆண்டுச்சந்தா – 1500/=
வெளிநாடு – $ 60U.S
மணியோடரை
அல்வாய் தபால் நிலையத்தில்
மாற்றக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.
அனுப்ப வேண்டிய பெயர்/முகவரி
**K.Bharaneetharan,**
**Kalaiaham ,**
**Alvai North west, Alvai.**
வங்கி மூலம் சந்தா செலுத்த விரும்புவோர்
K.Bharaneetharan Commercial Bank - Nelliady Branch
A/C No.- 8108021808 CCEYLKLY



# ஜீவநதி

**(கலை இலக்கிய மாத சஞ்சிகை)**


அறிஞர் தம் இதய ஓடை
ஆழ நீர் தன்னை மொண்டு
செறி தரும் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றி...
புதியதோர் உலகம் செய்வோம்.!
– பாரதிதாசன்–

# பண்பாடு பேணல்

“பண்பாட்டுச் சீரழிவு” இன்று பரவலாகப் பேசப்படுகின்றது. “எமது பண்பாடு” என்பதனால் எதனைக் கருதுகிறோம்; “எமது” என்ற பதத்தினுள் அடங்குபவர்கள் யார் - ஒரு சமயத்தினரா, இனத்தவரா, அல்லது சமூகக் குழுமத்தினரா? “எமது” என்பதனை நன்கு வரையறை செய்கின்றபோதே எமது பண்பாடு என்பதையும் நாம் வரையறை செய்து கொள்ள முடியும். ஏனெனில் ஒவ்வொரு குழுமத்துக்கும் அதற்கேயுரிய, தனிச்சிறப்பான பண்பாட்டு அம்சங்கள் உண்டு. இப்பண்பாட்டு அம்சங்கள் பேணப்பட வேண்டும் என ஒரு குழுமம் அவாவுவது நியாயமானதே.


ஆனால், இன்று பல்பண்பாட்டுச் சமூகம்(Multi Cultural Society) பற்றிய சிந்தனை வளர்ச்சி பெற்றுவருகின்றது. இன்றைய உலகின் துரித வளர்ச்சி இந்த எண்ணக்கருவைச் சாத்திய மாக்கியுள்ளது; ஒரே நிறுவனத் திலேயே பல்வேறு புண்பாட்டுப் பின்னணியினரும் ஒன்றாகப் பணியாற்றும் நிலை உருவாகியுள்ளது. இதனால் குறித்த ஒரு நிறுவனம் அந்நிறுவனத்தில் அதிக எண்ணிக்கையிலுள்ள ஒரு குழுமத்தை முதன்மைப்படுத்துவதாக, அக்குழுமத்தினரின் பண்பாட்டு நடைமுறைகளை அனைவரையும் அனுசரிக்குமாறு பணிக்க முடியாது. இன்றைய பல்பண்பாட்டுச் சமூகத்தின் உறுப்பினர்கள் தத்தமது பண்பாட்டு நடைமுறைகளை அனுசரிப்பது நியாயமானது. ஆனால் இன்று வலியுறுத்தப்பட வேண்டியது “மனிதப் பண்பாட்டு அம்சங்களை அனைவருமே கடைப்பிடிக்க வேண்டும்” என்பதே. இவ்வாறு மனிதப்பண்பாட்டுப் பேணலுக்கு அனைவருமே முன்வருவார்களெனின், “வேற்றுமை யில் ஒற்றுமை” (Unity in diversity) என்பது சாத்தியமாகும்.

- க.பரணீதரன்

## ஜீவநதியின் பிரதி கிடைக்கும் இடங்கள்

யாழ்- பூபாலசிங்கம் புத்தகசாலை, புக்லப் - திருநெல்வேலி,
கொழும்பு வெள்ளவத்தை - பூபாலசிங்கம் புத்தகசாலை,
படிப்பகம் - ஆரியகுளம்,
பரணி புத்தகக் கூடம் - நெல்லியடி

இப்னு அஸூமத்





# சின்தி மொழிக் கவிதைகள் சில குறிப்புகள்

பல தசாப்தங்களாக பிரித்தானிய காலனித்துவ ஆட்சியின் கீழிருந்து இந்தியா 1947ம் வருடம் சுதந்திரமடைந்தது. இந்தியா சுதந்திர மடைந்ததன் பின்னர் இனவாதக் கலவரங்கள் ஏற்படலாயின. இதன் காரணமாக இந்தியா இரண்டாகப் பிரிந்தது. பாகிஸ்தான் என்ற பெயரில் புதியதொரு நாடு உருவாகியது. இவ்வாறு இந்தியா இரண்டாகப் பிரிந்ததையடுத்து, மிகுந்த கஷ்டங்களுக்கும், வேதனைகளுக்கும், விரக்திக்கும் உட்பட்ட ஒரு மக்கள் சமுதாயமாக சின்தியர்களைக் குறிப்பிடலாம்.

இந்து பாரம்பரியத்தில் சுமார் 500 வருடங்களுக்கு மேலான பண்டைய பண்பாடுகளைக் கொண்டுள்ள சின்தியர்களுக்கு 1947ன் சுதந்திரமானது எத்தகைய சுதந்திரத்தையும் கொண்டு தரவில்லை என்றே தெரிய வருகிறது. இந்தச் சுதந்திரமானது அவர்களது சொந்த இடங்களில் இருந்து அவர்களை இடம்பெயர வைத்தது சின்தியர்களும் ஏனைய இந்தியர்களைப் போன்றே தேசிய போராட்டங்களில் கலந்து கொண்டவர்கள். இவர்கள் மகாத்மா காந்தியின் "பிரித்தானியர்களே! இந்தியாவில் இருந்து வெளியேறுங்கள்" எனும் கோஷத்தை முன்னெடுத்திருந்தனர். எனினும் அதன் பின்னணியில் இருந்த துரதிஷ்ட நிகழ்வுகள் குறித்து அவர்கள் தெரிந்திருக்கவில்லை. இது "சின்தியர்களே! இந்நாட்டை விட்டு வெளியேறுங்கள்" என்ற அர்த்தத்தையே அவர்களுக்குக் கொண்டுதந்திருந்தது.

நாடு பிளவுபட்டதையடுத்து இலட்சக்கணக்கான சின்தியர்கள் உடுத்த உடுப்புடன் இந்தியாவிற்கு இடம்பெயர நிர்ப்பந்திக்கப்பட்டனர். இவர்கள் பாழடைந்த இராணுவ முகாம்களில் வைக்கப்பட்டனர். இங்கு அவர்கள் துணிகளால் மூடப்பட்ட மறைவிடங்களை அமைத்து தங்கி இருந்தனர். இவ்வாறான மிகவும் கடினமானதொரு வாழ்க்கை நிலைக்குத் தள்ளப்பட்ட பலர் விரக்தி காரணமாக மனநிலைப் பாதிக்கப்பட்டவர்களாக மாறினர். தங்களது மூதாதையர்கள் பல நூற்றாண்டுகளாக வாழ்ந்து வந்த சொந்த இடங்கள் பறிக்கப்பட்டதையிட்டு மிகவும் வேதனையடைந்தனர். மொகெஞ்ஜதாரோ பண்பாடு வரையிலான நீண்ட வரலாற்றைக் கொண்ட கடந்த காலங்களை அவர்கள் இழந்தனர்.

எனவே இம்மக்கள் பிறரால் மேற்கொள்ளப்பட்ட அரசியல் தவறை தம் மீது சுமந்தவாறே சிதைந்த மனதுகளுடன் வசிப்பதற்கு பாதுகாப்பான இடங்களைத் தேடி அங்குமிங்கும் அலைந்து திரிந்தனர். இந்த நிலையில் சின்தியர்கள் முகங் கொடுத்துள்ள பாரிய வேதனைகள் இயல்பாகவே எழுத்தாளர்களின் அவதானங்களுக்கு உட்பட்டன. இதற்கு பல உதாரணங்கள் உண்டு.

இவ்வாறான பாரிய கஷ்டங்களுக்கு மத்தியிலும்

இவர்கள் போதுமான அளவிலும் சிறந்த தரத்திலுமான உயர் இலக்கியத்துறையொன்றைக் கட்டி எழுப்பினர். 1948 முதல் 1956 வரையிலான காலகட்டத்தில் படைப்பிலக்கியத் துறையில் ஈடுபட்டிருந்த எழுத்தாளர்களில் பெரும்பாலானவர்கள் தங்களது படைப்புக்களை சமூகக் கருத்துக்களை முன்வைத்தே படைத்தனர்.

சின்தி இலக்கியத்தின் இந்தத் தன்மையை உணர்ந்து கொள்ள வேண்டுமாயின் அதன் பரிமாணத்தைப் பற்றிக் குறிப்பிடுதல் அவசியமாகும். பல்வேறு வரலாற்று ரீதியிலான காரணங்களால் சின்தி இலக்கியத்தின் பிறப்பு 16வது நூற்றாண்டிலேயே நிகழ்ந்துள்ளது. சுமார் மூன்று தசாப்த காலமாக நிலவிய அர்குன், துர்கான், மோகல் மற்றும் கல்ஹொராஸ் போன்றவர்களது ஆட்சி காலங்களின் போது சின்த் தேசத்தில் க்வாஸிவடான், அப்துல் கரீம், ஷா அப்துல் லத்தீன், ஷடால், சாமி போன்ற மிகச் சிறந்த கவிஞர்கள் வாழ்ந்துள்ளனர். இக்கால கட்டத்தில் ஷா, ஷடால், சாமி ஆகிய மூவரும் மிகவும் புகழ்பெற்ற கவிஞர்களாக விளங்கினர். இவர்கள் சூபி தத்துவத்தையும் வேதாந்தத்தையும் அடிப்படையாகக் கொண்டு கவிதை இலக்கியத்தில் ஈடுபட்டு வந்தனர். உளம் சார்ந்ததும் மனிதாபிமானதுமான "பல்வகையில் ஒற்றுமை" என்ற எண்ணக்கருவை அவர்கள் கொண்டிருந்தனர்.

அதிசிறந்த சின்தி கவிஞர்கள் சின்ந் மண்ணுடன் பலமாகப் பிணைந்திருந்தமை இங்கு குறிப்பிட்டாக வேண்டியதொரு விடயமாகும். அதே நேரம் இவர்களது கற்பனையும், வெளிப்பாடும் சின்ந் மண்ணுக்கு உரிய தனித்துவமாகவும் மிளிர்கின்றது. கவிதைகளின் உள்ளடக்கம், சூழல், மொழிநடை, காட்சி, படிமங்கள், பாத்திரங்கள் என்பன யாவும் தேசியத் தன்மை பெற்றவைகளாகும். இந்தக் கவிஞர்கள் எழுதிய கவிதைகள் "தொஹா" ரகக் கவிதைகளாகும்.

19ம் நூற்றாண்டில் இந்த நிலைமையில் மாற்றம் ஏற்பட்டது. இதன் பிரகாரம் கஸல், முக்ஷாதான், மஸ்னாவி, ரூபாய் போன்ற பாரசீக கவிதை வடிவங்கள் பிரபலமடைய ஆரம்பித்தன. 1893ல் பிரித்தானியர்களால் சின்த் தேசம் அடிமையாக்கிக் கொள்ளப்பட்ட போது சின்தி அரிச்சுவடி மறுசீரமைப்புச் செய்யப்பட்டுள்ளது. இதன்படி இவை அரபு சின்தி எழுத்துக்களின் வடிவத்தைக் கொண்டமைந்தன. இக்கால கட்டத்தில் தொஹா, பயித் போன்ற தேசிய கவிதை வடிவங்கள் நடைமுறையில் இருந்து புறந்தள்ளப்பட்டிருந்தன. பாரசீக வடிவங்களில் கவிதைகளை எழுதுவதுதான் பண்பாடு என்ற நிலை இக்காலத்தில் தோன்றியிருந்தது. இந்த அனைத்து கவிதை வடிவங்களிலும் உயர்ந்த மட்ட பிரபலத்தை அடைந்திருந்த கவிதை வடிவம் கஸலாகும். பல கவிஞர்கள் இத்துறையில் நாட்டம் கொண்டிருந்தனர்.

கஸல் கவிதைப் படைப்புக்கள் இருவேறு வகையில் எழுதப் பெற்றன. ஒன்று, முழுமையாக பாரசீக சம்பிரதாயங்களைப் பின்பற்றிய மாயை, உவமானங்கள் மற்றும் காட்சிகளைப் பயன்படுத்தும் முறையாகும். இரண்டாவது, பாரசீக பாதிப்பில் இருந்து விடுபட்ட முறைமையாகும். இக்கவிஞர்களது அனுபவங்கள் அனைத்துமே சின்த் மண்ணில் இருந்து பிறந்தவையாகும்.

இதே நேரம் "குல்" சம்பிரதாயத்தின் பிடிக்குள் சிக்குண்ட கஸல் கவிதைகள் இன்னுமொரு திசையை நோக்கிப் பயணிக்க ஆரம்பித்தன. பாரசீக கஸலை அடிப்படையாகக் கொண்டு கட்டியெழுப்பப்பட்ட சின்தி கஸல் கவிதைகள் தேசிய மட்டத்தில் பரீட்சித்துப் பார்க்கப்பட்டன. எனினும் பல கவிஞர்கள் பாரசீகமயத்திற்கு உட்பட்ட ஓசையிலும் மொழியிலும் கஸல் கவிதைகளைப் படைப்பதிலேயே அதிக நாட்டம் கொண்டிருந்தனர்.

எனினும், ஒரு குறுகிய காலத்திற்குள் பாரசீக சொற்களை அதிகம் பயன்படுத்தாமல் சின்தி சொற்களை அதிகம் பயன்படுத்தும் நிலை தோற்றம் பெற்றது. இந்த மாற்றத்தை பொதுமக்களும் அறிவுஜீவிகளும் வெளிப்படையாகவே வரவேற்றனர். ஏனைய பல இந்திய மொழிகளைப் போன்றே சின்தி மொழியிலும் சமஸ்கிருத மொழியின் ஆதிக்கம் பலமாகவே உண்டு. பாரசீக மற்றும் அரபு மொழியின் ஆதிக்கம் பல நூற்றாண்டுகளாக இருந்து வந்ததால் இவை கிரமமாக சின்தி மொழியில் கலந்து விட்டன.

20வது நூற்றாண்டின் ஆரம்ப காலப் பகுதியில். கவிஞர் கிஷின்சான்த் பிவாஸ், சின்தி கவிதைகளை புதியதொரு யுகத்தை நோக்கி இட்டுச் செல்வதில் வெற்றி கண்டார். இவர் பல்வேறு சமூக, அரசியல் மற்றும் பொருளாதார காரணிகளைக் கருப்பொருளாக்க கொண்ட கவிதைகளை எழுதினார். ஏழைகள் சுரண்டப்படுவதை எதிர்க்கும் ஆவேசமானதும் உணர்ச்சிப் பூர்வமானதுமான கவிதைகளும் இதில் அடங்கின. இக்காலகட்டத்தில் கஸலின் உள்ளடக்கங்கள் பரந்தளவில் அமையப் பெற்றன. காதல், காமம் கொண்ட கவிதை அலைகள் மெல்ல, மெல்ல ஒதுங்கிக் கொண்டன. எனினும் இதுகால வரையில் கஸல் கவிதைகள் இவற்றையே கொண்டிருந்தன.

இதே நேரம் 20ம் நூற்றாண்டின் நான்காவது தசாப்தத்தில் அஷாத் நஸ்மியின் சுதந்திர கவிதை வடிவங்கள் தோற்றம் பெற்றன. இது நீண்டகாலம் நிலைக்கவில்லை. எனினும் இக்கவிதை வடிவத்தின் குணவியல்புகள் ஏற்றுக் கொள்ளப்பட்டன. இதன் பின்னர் ஓசை நயமில்லாத நயின் கவ்தாவின் கவிதை வடிவங்கள் ஆறாம் தசாப்தத்தில் வெளிவந்தன.

இந்தியாவிற்கு அரசியல் சுதந்திரம் கிடைத்து ஒரு வருடம் கழிந்த நிலையில் நாடு பிளவுபடும் போது சின்தி கவிதைகள் இவ்வாறான பின்னணியையே கொண்டிருந்தன. பஞ்சாப், வங்காளம், சின்த் ஆகிய மாநிலங்களை கதிகலங்க வைத்த மனிதப் படுகொலைகள் உலக வரலாற்றிலேயே முன்னெப்போதும் நடந்திராத வடுக்களாக சித்திரிக்கப்படுகின்றன. அச்சத்தினால் நடுங்கிய மக்கள் இந்தியாவில் இருந்து பாகிஸ்தானுக்கும்

பாகிஸ்தானில் இருந்து இந்தியாவிற்குமாக தப்பி ஓடினர். நாடு பிரிக்கப்பட்ட போது வங்காளத்திற்கும் பஞ்சாப் பிற்கும் தங்களது மாநிலங்களில் பாதி கிடைத்திருந்த போதிலும் சொந்த இடங்களை முழுமையாக விட்டு இடம்பெயர வேண்டிய நிலைக்கு சின்தி மக்கள் முகங்கொடுத்திருந்தனர்.

இந்த வேதனைகளும் இழப்புக்களும் ஒருவித அந்நியத் தன்மையும் சின்தி கவிஞர்களின் படைப்பு களில் மிகத் தெளிவாகவே எடுத்துக் கூறப்படுகின்றன. இவ்வாறு சுய கலாசார, வரலாற்று, பூகோள மற்றும் சமூகத் தனித்துவங்களை இழந்த சின்தியர்களின் வேதனைமிக்க விதி சின்தி கவிதைகளின் முக்கிய கருப்பொருட்களாகின.

சின்த் மாநிலம் பகிரப்படுவதற்கு முன்னர் தங்களுக்கே உரித்தான கௌரவமான சமூக நிலைமை யொன்று சின்தியர்களுக்கு இருந்தது. இவர்கள் அரசியல் செயற்பாட்டிலும் மிக முக்கிய பங்கு வகித்தனர். அரசாங்கத்தை அமைப்பதில் அழுத்தங் கொடுக்கத்தக்க சக்தியாக இருந்தனர். முழுமையான அரசியல் அதிகாரத்தில் சுமார் 26 வீதம் இவர்களுக்கு உரித்தாகி இருந்தது.

அதிர்ஷ்ட வசமாக இம்மக்களுக்குள் இயல் பான சுய பலம் இருந்ததனால் முழுமையாக அழிந்து போவதில் இருந்த தங்களைக் காப்பாற்றிக் கொண்டனர் என்றே கூற வேண்டும். இவர்களின் வாழ்விடங்கள் பிரிக்கப்பட்ட போது அதற்கு இவர்கள் மிகுந்த வேதனையுடன் முகங்கொடுத்திருந்தனர். இறக் காமல் வாழ்வதே இவர்கள் அப்போது முகங்கொடுத் திருந்த உடனடித் தேவையாக இருந்தது. கடினமான உழைப்பின் மத்தியில் பின்னடைவுகளை வெற்றி கொண்ட சின்தியர்கள், பொருளாதார ரீதியிலும் படிப்படியாக முன்னேற்றம் கண்டனர். நிறுவன மற்றும் வர்த்தக அனுபவங்கள் தொடர்பிலான முன்னேற்ற மான வரலாற்றைக் கொண்டிருந்த இவர்கள் வர்த்தகத் துறையில் உயர்ந்த இடத்தை எட்டிப் பிடித்தனர். ஒரு சிலர் கலை மற்றும் தொழில்சார் துறைகளில் நிபுணத்துவம் பெற்று உயர் பதவிகளில் அமர்ந்தனர். இந்த வளர்ச்சியானது இளம் சந்ததியினர் வரையில் பரவியது. இவர்களில் ஒருசாரார் கல்வி மற்றும் சமூகப் பணிகளில் மிகவும் சிறந்த செயற்பாடுகளை முன் னெடுத்து தங்களது தியாகங்களின் மகிமையை வெளிக் காட்டினர். பாடசாலைகள், விஞ்ஞான கூடங்கள், தர்ம நிலையங்கள், மருத்துவமனைகள் என்பன இதற்கான சில உதாரணங்களாகும். அனைத்து சின்தியர்களும் நிதி நிலைமைகளில் தன்னிறைவு கண்டுள்ளனர் என்றதொரு கருத்தும் நிலவியது. இவர்களில் பெரும் பாலானவர்கள் நடுத்தர மற்றும் கீழ்வர்க்க மக்களா கவே இருந்தனர். எனினும் தைரியம், சிரமம் பாராது உழைத்தல் போன்றவற்றில் அனைத்து சின்தியர்களும் சமமானவர்களாகவே தென்பட்டனர்.

நாடு பிளவுபட்டதையடுத்து சின்தியர்களின் முதலாம் இரண்டாம் பரம்பரையினரிடையே உள்ளார்ந்த ரீதியிலான தொடர்புகள் நிலவி வந்தன. எனவே இவர்களது கலாசார விழுமியங்களை இரண்டாவது பரம்பரையினரிடம் ஒப்படைப்பதற்கான வாய்ப்புக்கள் ஏற்பட்டிருந்தன. எனினும் மூன்றாவது பரம்பரையினருக்கு இரண்டாவது பரம்பரையினரின் தாக்கங்கள் மிகவும் குறைவாகவே ஏற்பட்டுள்ளன. எனவே இவர்கள் பாரம்பரிய உரிமைகளை முற்றாக இழக்க வேண்டிய அச்சுறுத்தலுக்கு உட்பட்டனர். இவர்களும் இவர்களது எதிர்கால சந்ததியினரும் சுயமான கலாசார விழுமியங்களில் இருந்தும் அந்நியப்படலாயினர். இந்தியாவில் (ஏனைய நாடுகளிலும்) பரந்த நிலையில் வாழ்வதன் காரணமாக இவர்கள் பல்வேறு கலாசார சம்பிரதாயங்களை நோக்கி ஈர்க்கப்படலாயினர். இவர்களது மொழியும் பிரதேச மொழிகளுடன் கலந்தன. இவ்வாறு பல்வேறு இந்திய மாநிலங்களில் பரந்துபட்டு வாழ நேரிட்டதால் சின்தி மொழி மூலமான பாடசாலைகளும் மூடப்பட்டு வந்தன. ஆங்கிலமொழி பாடசாலைகளில் சின்தி மொழி ஒரு பாடமாகக் கற்பிக்கப்படவில்லை. எனினும் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் ஏனைய மொழிகளுக்கு பாதுகாப்பு நிலை இருந்து வந்தது. ஆங்கில மொழி பாடசாலைகளில் பிரதேச மொழிகள் கற்பிப்பதானது கட்டாயமாக்கப்பட்ட போதிலும் சின்தி மொழிக்கு அந்த வாய்ப்பு கிட்டவில்லை. பல் இன சமுதாயங்கள் வாழுகின்ற ஒரு நாட்டில் அனைத்து சமுதாயங்களும் தங்களது மொழி மற்றும் கலாசாரம் தொடர்பில் பாரிய அபிமானத்துடன் வாழ்ந்து வருகின்றன. எனினும் சின்தி மொழிக்கு அவ்வாறானதொரு தனித்துவம் கிட்டவில்லை. பூகோள ரீதியில் பரந்துபட்டு வாழ்ந்து வந்ததாலும், முற்காலத்தைய பிணைப்பு இழக்கப்பட்டு விட்டதாலும் இந்தியாவில் சின்தியர்கள் தனிமைப்படுத்தப்பட்டனர். ஏனையவர்களுடனான தொடர்பாடல்களும் மிகவும் வரையறுக்கப்பட்ட நிலையிலேயே வாழ்ந்து வரலாயினர்.

நாடு பிளவுபட்டதன் பின்னர் சின்தி இலக்கியத்தில் மிகவும் முக்கியமான பல்வேறு குண இயல்புகள் வெளிப்படலாயின. இவை அனைத்தும் எழுத்தாளர்களது கடின உழைப்பால் கட்டி எழுப்பப்பட்டவையாகும்.

தற்காலத்தில் கூட இந்திய சின்தி எழுத்தாளர் களுக்கும் பாகிஸ்தானிய சின்தி எழுத்தாளர்களுக்கும் இடையில் நெருங்கிய தொடர்புகள் இருப்பதைக் காண முடியும். சின்தி கவிஞர்களில் பெரும்பாலானவர்கள் தங்களது கவிதைகளில் தாய்நாடு பற்றிய ஞாபகங்களை சின்தி மொழியிலேயே எடுத்துக் கூறியுள்ளனர். தற்போது இந்தியாவில் இருக்கின்ற இளம் சின்தி கவிஞர் களிடையே கலாசார வெற்றிடம் தொடர்பிலான உணர்வு தென்பட ஆரம்பித்துள்ளது. இழக்கப்பட்ட உரிமைகள் தொடர்பில் அறிந்து கொள்ளும் வேட்கையும் அவர் களிடம் அதிகமாகவே தென்படுகிறது. அன்ஜு மகீஜா மற்றும் மேனகா ஷிவ்தாசனி போன்றவர்கள் பிறப்பில் சின்தி இனத்தவர் எனினும் இவர்கள் ஆங்கில

மொழியிலேயே கவிதைகளை எழுதி வருகின்றனர். இவர்கள் சிந்தி மொழியுடனான தொடர்பை இழந்த பரம்பரையின் உறுப்பினர்களாக இனங்காணப்படுகின்றனர்.

“ஹைதராபாத் சிந்த்” எனும் தலைப்பில் இம்தாத் ஹூசைனி எழுதிய சிந்தி கவிதை ஒன்றின் தமிழ் வடிவம் இது:

இது எனது தாய் நாடா? அல்லது
எனது எதிரிகளின் தாய்நாடா?
முகமூடிகளுக்குப் பின்னால்
மறைந்திருப்போர் யார்?
அவர்கள்
மத நூல்களை
கையிலேந்தி உள்ளனர்,
எனினும் அவற்றுக்குக் கீழாக
வாள்களை ஏந்தியுள்ளனர்.
இரத்த வெறியால்
இரவு பகல் அலைந்துத் திரியும்
இவர்கள் யார்?
அவர்கள் எங்களது மொழியை
பேசவில்லை!
எங்களது குழந்தைகளுக்கான
தாலாட்டைக் கேட்பதில்லை!
எங்களைத் தாக்குகிறார்கள்,!
அவர்கள் குடித்த தாய்ப்பால்
இரத்த நாளங்களில் -
விஷமாக மாறியுள்ளது!
ஒரு காலத்தில்
தேவலோகமாக இருந்த
இந்த மண் -
இப்போது நரகமாகியுள்ளது!
எல்லா இதயங்களும் அழுகின்றன!
இது எனது தாய்நாடா? அல்லது
எதிரிகளின் தாய்நாடா?

வாசுதேவ் நிர்மால் “குரல்” எனும் தலைப்பில் எழுதியுள்ள கவிதை இது:

இந்த அரபிக் கடற்கரையில்
அடித்து வரும் அலைகள்,
அவற்றின் பேரிரைச்சல்கள்...
இந்த அலைகள் தொடர்ந்து
கரையை ஏன் தாக்குகின்றன?
இவை
எங்கிருந்து வருகின்றன?
இவற்றுக்கு
என்ன கூற வேண்டி இருக்கிறது?

பல வருடங்களுக்கு முன் நான்
கராச்சியில் இருந்து கடலினூடே -
மென்றோரா செல்லும் போது
கடலைப் பார்த்தேன்!
இப்போது வரும் இந்த அலைகளும்
அதே அலைகளா?

ஆம் - அதே கடல்,
அதே அலைகள்
காட்சியும் அதேதான்,
என்றாலும் -
அதன் அழுத்தம்
மிகவும் வித்தியாசமாக இருக்கிறது ●

# திசை மயக்கம்



க. சட்டநாதன்

லேசாகப் பனி தூறிக் கொண்டிருந்தது;
பின்னிரவில் தான்
நான்
நடந்து கொண்டிருந்தேன்.
மயிர்க்கால் தோறும்
சில்லிட்ட குளிர்
இதயத்தை உறைய வைத்தது.

தூரத்தில்
அந்த ஆழ்ந்த நிசப்தத்தில்
சிலிர்ப்படைய வைத்தபடி
அந்தப் பாடல் ஒலி;
விரக உணர்வைச் சீண்டும்
ஒலி;
மரகத வீணையின்
புடைத்த
நரம்பின் கார்வைகளுடன்

நடந்தும் அடைய முடியாத
எல்லையில்
அந்த நாத ஒலி...!

வந்த சுவடுகள் அழிந்து
திகைத்து நின்ற நிலையில்,
நாலா பக்கமும் அந்தக் கீதத்தின்
இசைப் பிணிப்பின் சிதறல்கள்,
விரக லகரியின்
பரவசம் தொடத் துடிக்கும்
உரசல்களுடன்.

திசையழிந்து திணறிய நான்
வகையறியாது
தவித்தபடி...

கிண்ணியா சபருள்ளா

# சுற்றி வளைப்பு

அந்த ஏரியாவே பதற்றமாகி விட்டது... தலை துண்டிக்கப்பட்ட கொண்டைச் சேவலொன்று சிறகுகளை நிலத்திலடித்துக் கொண்டிருந்த காட்சிப்படிமம் காற்றின் திரைகளில் விரிந்தது. சூரிய வெளிச்சத்தின் பகற்பொழுது படபடப்பாக இருந்தது முக்கால் வாசி இதயத்துடன்.

கலவரச்சூழலின் இயல்பற்ற தொனி கறுத்துப் போக ஆரம்பித்த அந்தப் பகற் பொழுது ஆயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்தைந்தாம் ஆண்டின் ஆகஸ்டு மாத கால ஏதோ ஒரு திகதிக்குச் சொந்தமானது. இரவின் நிலவழகை அசந்தர்ப்பமாகத் தொலைத்திருந்த நிலாவெளிக் கிராமம். அழகான பெயர். உச்சரிக்கும்போதே கவிதைப்பிரவாகம் மனசுக்குள் பீய்ச்சியடிக்கும். ஆனால் சுற்றியிருப்பது அச்சுறுத்திக் கொண்டும் விஷம் தடாவப்பட்ட சூழல் அந்த அழகை ரசிக்க விடவில்லை.

எத்தனை வருஷமாச்சு நிலாவெளி எனும் இந்த ஊரில் நிலவை ரசித்து...நிலவை சுகித்து... நிலவை மோகித்து. இன்னமும் நிலவிருக்கா.... எவ்வளவு காலமாச்சு இரவின் வானத்தை வீட்டுக்கு வெளியே வந்து பார்த்து. மாலை ஆறு மணியோடு தானாக சாத்திக் கொள்ளும் கதவு களுக்குரிய வீடுகளில் கைதிகளாகிக்கிடக்கும் வரலாறு ரொம்ப நீண்டது. அதன் இரு கரை களிலும் இரத்தக் கறை படிந்து போய் இப்போது பாசி வாசம் அடிக்கின்றது.

தமிழீழ விடுதலைப்புலிகள் எனும் தலைப்பில் எந்தத் தமிழ் இளைஞரைக் கண்டா லும் சந்தேகங்கொண்டு எக்ஸ்ரே எடுக்கின்ற பொழுதுகளின் பின்னணியில் ரவுண்டப்புகளின் பெயரால் பீதியுற்றுக் கிடந்தது நிலாவெளி. நிலவொளி சிதைந்து வாழ்க்கையின் அரைகுறை சுவாசத்திற்கு விழி பிதுங்கிக் கிடந்த நிலாவெளி யில் இரத்தப் பிசுபிசுகளின் விடியல்கள்... முடிவேயற்ற தேடுதல்கள். எதையோ தேடி எதையோ அல்லது எவனையோ பலாத்காரமாக



இழுத்துச் செல்லும் தேடுதல் வேட்டைகள்.

ரவுண்ட்அப் என்பது தமிழ் அளவுக்கு ரொம்பவும் பரிச்சயப்பட்டு அதற்கான தமிழர்த்தம் தெரியாமல் அல்லது தெரிய முயற்சிக்காமல் சுற்றி வளைப்புத் தேடுதல் நடவடிக்கை, ஆட்பிடித்தல் என்பன போன்ற ஒத்த கருத்துச் சொற்களோடு எல்லா நாட்களும் உறைந்து போய்க் கிடந்த இளைஞர்களில் தர்மாவும் ஒருவன்.

கொட்டியாரப் பேனாக்காரன் வ.அ.இராசரத்தினத்தின் ஒரு வெண்மணற்கிராமம் நாவலில் பளபளத்துக்கிடக்கின்ற ஆலங்கேணி போலவே இதுவும் அழகான வெண்மணற் கிராமம். இப்போதெல்லாம் சிவந்து போய்க்கிடக்கின்றது. பல நேரங்களில் முகம் கருத்துப் போய்க்கிடந்தது. அந்தக் கிராமத்தின் பெரும்பாலான இளைஞர்கள் நாட்டின் பல் வேறு திசைகளுக்கும் சிதறினார்கள். பயத்தின் காரணமாக எஞ்சிய இளைஞர்கள் அநேகமாக வீடுகளுக்குள்ளேயே அடைப்பட்டுக் கிடந்தார்கள்.

எப்போது ஆர்மிக்காரனின் ரவுண்டப் நடக்கும் என்று எதிர்வு கூற முடியாது. ஆனாலும் இரண்டு கிழமை அல்லது சிலவேளை ஒரு கிழமைக்குள் ஆகக் குறைந்தது ஒரு ரவுண்டப் என்பது அந்தக் கிராம மக்களுக்கு நன்கு பழக்கப்பட்டுப்

போய்விட்டது. அது எழுதப்படாத விதி. ரவுண்டப் என்றால் பீதி மயம்தான். பீதி மயப்படுத்தப்பட்ட அந்தக் கணங்களில் பெற்ற வயிற்றுக்குள்ளே பெற்றோல் வாசம். திடுதிடுவென அச்சம். ராசா எங்காவது போயிடு.. இங்க இருக்காதே. நீ என்ட கண் முன்னாலே நடமாடாட்டியும் பரவால்ல. எங்காவது ஒரு எடத்துல நீ உசிரோட இருந்தா அதுவே போதும். இந்த எடத்த வுட்டுட்டு போ மோனே.... எனக் கதறுகின்ற தாய்மார்களின் கண்ணீரில் பல இளைஞர்கள் அந்தக் கிராமத்திலிருந்து காணாமல் போய் விட்டார்கள்.

கொடுமை.

ரவுண்டப்பின்போது எப்படியும் புலிச் சந்தேகத்தில் ஆகக்குறைந்தது பத்து பதினைந்து பேராவது பிடிக்கப்பட்டு விசாரணைக்கென்று ஆர்மியால் கொண்டு செல்லப்படுவார்கள். அப்படிக் கொண்டு செல்லப்படுபவர்களில் அன்றையதினமே பலர் விடுவிக்கப்படுவார்கள். சிலர் பூசாவுக்கும், மெகஸின் சிறைச்சாலைக்கும் மேலதிக விசாரணைக்காகவென்று கொண்டு செல்லப்பட்ட கதைகள் ஏராளம்.

பலத்த சந்தேகம் பழுத்துவிட்டது. பலர் இன்னும் பூஸாவிலும் மெகஸின் சிறைச்சாலைகளிலும் இருக்கின்றார்களா? ஆர்மியால் பிடிக்கப்பட்டு பூஸாவுக்கும் மெகஸினுக்கும் கொண்டு செல்லப்பட்டு அவசர காலச் சட்டத்தின் கீழ் தடுப்புக் காவல் போடப்பட்டு விசாரணை

தடுப்புக்காவலில்

விசாரணை

தடுப்புக் காவலில்

விசாரணை

தடுப்புக் காவலில்,

விசாரணை

இப்படி ரவுண்டப்பின் விழிகள் அரண்டு உசிரை கையில் பிடித்துக் கொண்டிருந்த நிலாவெளிக் கிராமத்தின் இன்னுமோர் பதற்றப்பொழுதில் சூரியனின் கண்களிலிருந்து சிவப்பு நிறத்தில் கண்ணீர் ஒழுகிக் கொண்டிருக்கின்ற பச்சை மிளகாய் காரம்.

"டேய் ஆர்மிக்காரங்க வந்துட்டாங்க..."

"ஆர்மியா..."

"ரவுண்டப் டோய்.... ஒடுங்கடா..."

"ரவுண்டப்பா.."

பதற்றம் பெரு நெருப்பினை பற்றிக் கொண்டது. அச்சத்தின் உச்சஸ்தாயி சப்தத்தில் மயான அமைதி எங்கும் ஒலித்துக்கொண்டிருந்தது.

திடீர் சுற்றிவளைப்பு

ஆர்மிக்காரர்களின் கையில் சில இளைஞர்கள் அகப்பட்டார்கள். குதிரை வேக இதயத் துடிப்போடு மாரிக்கால மேகங்களை அவசரமாக முகம் பூராவும் குத்தகைக்கு எடுத்துக்கொள்ள அகப்படாதவர்கள் கண்ணுக்குப்பட்ட இடங்களுக்குள் பருந்துக்குப் பயந்த கோழிக்குஞ்சுகளாய்... அவர்களது சிறகுகள் மைனஸ் டிகிரிகளில் நீரில் புதைந்து போய்க் கிடந்தன.

தர்மா... அகப்படாதவன்.

"டேய் தர்மா வீட்ல இருக்காதடா.. போடா எங்காவது போய் ஒளிஞ்சு கொள்டா.. போடா மோனே... ஆர்மிக்காரன் வீடு வீடா எறங்கி சோதன பண்ணுறான். சுருக்கா போடா..."

புத்திரனை பொத்திப் பாதுகாக்கும் பெத்தவனின் நடுக்கம் உதடுகள் வயர் இணைப்பில்லா தந்திகளை அடித்துக்கொண்டு,

அப்பா அழுதார்

அம்மாவின் கதறல்

"போடா மோனே..."

வீட்டுக்குள்ளிருந்த தர்மா மெல்ல, ஆனால் அவசரமாக வீட்டிலிருந்து வெளியேறினான். கண்ணுக்குப் புலப்படும் தூரத்தில் இரும்பின் உபயத்திலான ஆட் தின்னும் ஆயுதங்களோடு ஆங்காங்கு நின்று கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு பக்கத்தில் ... அது ராஜூ... சிவா... யோகநாதன்..மோஸஸ்...அங்கால வேலாயுதம்.

அது மாணிக்கத்தாரின்ட மகன் வினோத்... அவனுக்கு பன்னிரெண்டு வயதுதானே இருக்கும். ஐடென்டி கார்டு கூட கிடையாதே... ஏழாம் ஆண்டோ எட்டாம் ஆண்டோ படிக்குற பையனப் போய்... இவனுமா... கடவுளே... தர்மாவைப் பொறுத்தவரை இன்றோடு இது எத்தனையாவது ரவுண்டப்... அவன் எண்ணிக் கணக்கு வைத்திருக்கவில்லை. ரவுண்டப்பும் சூரிய உதயம் ... சூரிய அஸ்தமனம் மாதிரி... நித்தியமாகிவிட்டது. மாட்டாத வரை வாழ்க்கை... மாட்டிக்கொண்டால் சங்குதான்.

ஒவ்வொரு ரவுண்டப்பின் போதும் கிடைத்த இடங்களில் உசிரைக்கையால் பிடித்துக்கொண்டு பதுங்கிக் கிடப்பதும் ஒதுங்கிக் கிடப்பதும்... ஒளிந்து கொண்டிருப்பதும் என வாழ்வதே பெரும் சுமையாகிப் போன சூழலில். எலிப்பாசனம் வைக்கப்பட்டு கிலி கொள்ளச் செய்யும் பொழுதுகளில் முதுகுத்தண்டு சில்லிடுகின்றது.

அஞ்சாறு மாசத்துக்கு முந்தி நடந்த ரவுண்டப் ஒன்றில் தர்மா ஆர்மியால் பிடிக்கப்பட்டு மிகக் கடுமையாக விசாரிக்கப்பட்டான். தெய்வாதீனமாக அன்று தப்பிவிட்டான். ஆனால் மிகக்கடுமையாக எச்சரித்து விட்டுத்தான் (இன்னும் அவர்களுக்கு அவன் மீதான சந்தேகம் தீரவில்லை) திடீர்திடீரென்று நடக்கின்ற இந்த மாதிரி ரவுண்டப்புகளில் மாட்டிக் கொள்வதில் படு மெத்த உத்தமம்.

கடந்த மாதம் இடம்பெற்ற ரவுண்டப்பில் இராணுவத்தால் கைது பண்ணப்பட்ட வாசுவும் மித்ராவும் இப்போது எங்கிருக்கின்றார்கள் என்று இதுவரை எவருக்கும் தெரியாது. விசாணைக்கென்று தான் அழைத்துப் போனார்கள். இரண்டு பேரின் பெற்றோரும் இலங்கை செஞ்சிலுவைச்சங்கம், சர்வதேச செஞ்சிலுவை சங்கம் என அலைந்து கொண்டிருக்கின்றார்கள்.

அதோ ராணுவ வீரர்கள் தெரிகின்றார்கள்.

இனி இந்த தேடுதல் வேட்டையும் விசாரணை முஸ்தீபுகளும் எவ்வளவு நேரத்துக்கு தொடரும் என எதிர்வு கூற முடியாது... திக்திக்கென்ற இதயத்தின் துடிப்பொலியுடன் மெல்ல மெல்ல வீட்டிலிருந்து வெளியாகி வளவுக்குள்ளிருந்து வெளியே வந்துவிட்டான்.

சற்றுத் தொலைவில் .. கூப்பிடும் தூரத்தில் கடற்கரையை அண்டின பிரதேசங்களில் சின்னச் சின்னக் பற்றைக் காடுகள். அந்திவரை அதற்குள் ஒளிந்திருக்க வேண்டும். வாழ்வதற்காக செத்து மடியும் தருணங்கள்... மெல்ல அந்தக் காட்டை நோக்கி நகர்ந்து சென்றான்.

ஒரு மூன்று நிமிஷம் போயிருக்கும்.

“அடோ நவத்தன்ன...” என்றதிர்ந்து காற்றின் எல்லாத் திசையிலும் சிதறுப்பட்டுப்போன வார்த்தைகளுக்கு உரித்துக்காரன் யார் என்ற கேள்வியோடு ... உசிரு அறுத்த கோழியாகி... கசாப்புக்கடையில் வெட்டப்பட்ட ஆடாகி... தர்மா திரும்பிப் பார்த்தான். சிங்கள வார்த்தைகளின் சொந்தக்காரன் அந்த இராணுவச் சிப்பாய்... கையில் துப்பாக்கியோடு நின்று கொண்டிருந்தான்.

தான் காடு நோக்கிச் செல்லுவதனை அந்த இராணுவச் சிப்பாய் எப்படியோ கண்டுவிட்டான். கறுப்பு மசியால் எழுதப்பட்ட தலைவிதியின் உச்சி மண்டையில் சிவப்பு விளக்கு அவனைப் பார்த்து சிரித்துக் கொண்டிருந்தது. அவனது துரதிஷ்டம் தவிர வேறென்ன... தான் நின்று விட்டால் எப்படியும் அவன் தன்னைப் பிடித்துக்கொண்டு போய் விசாரணை செய்து எங்கே போனாய்.. ஏன் போனாய் ஆயிரம் கேள்விகளும் அவ்வப்போது விழும் அடிகளாலும் சித்திரவதை செய்து... அப்புறம் நீ கொட்டியாதான் என்ற முடிவுக்கு வந்துவிட்டால் தன் வாழ்வு இந்த அத்தியாயத்தோடு முடிவுக்கு வந்துவிடும் என்பது தர்மாவுக்குத் தெரியும்.

புத்தியை விட உணர்ச்சிகளின் பெருக்கம் இப்போது வேலை பண்ண ஆரம்பித்ததில்... மனசு ஓடுஓடு... நிற்காதே நின்றால் ஆபத்து போ போயிடு என கட்டளையினை பிறப்பித்துக் கொண்டிருந்தது.

அவனை அதட்டிய இராணுவச் சிப்பாயின் கண்கள் நிறைய சந்தேகம்... முகத்தில் இறுக்கம்.. ஒரு வகையான வெறிகலந்த பார்வை... கையில் தயார் நிலையில் இந்தா வெடிக்கப் போகின்றேன் என்று துப்பாக்கி. நல்லா மாட்டிக் கிட்டுட்டோம். நிலமை சரி யில்லை.


தர்மா எதையும் யோசிக்காமல் ஓட ஆரம்பித்தான்... பின்னால் தபதபவென்று பூட்சுகளின் சப்தம்.... மிகத் தெளிவாக காதுகளினுள்ளே விழுந்து விழுந்து நரம்புகளை துவம்சம் செய்தது. அவன் துரத்துகின்றான்.. அவனது பூட்சுகளின் சப்தம் தெளிவாகக் கேட்கிறதென்றால் தனக்கு மிக நெருக்கமாக அவன் வந்துகொண்டிருக்கின்றானென்று அர்த்தம்.

“அடோ நில்லு... நவத்தன்ன... துவன்ன எபா”

எனும் வாசகங்கள் மீண்டும் காற்றில் சிதறின... காதுகளுக்குள் பற்றிக்கொண்ட நெருப்பு மண்டைக்குள் மங்கள விளக்கேற்றி வைத்தது. வாழ்வின் இறுதித் தருணங்கள். இன்றோடு நிலாவெளி மண்ணில் எனது மரணம் நிகழப்போகிறது... குண்டடிபட்ட எனது உடலத்தில் எதிரியின் பெயர் பச்சை குத்தப்படப் போகின்றது.

தான் சாகப் போகின்றேன் என்று இறுதியாகத் தெரிய வருகின்றபோது எப்படியேனும் எஞ்சிய உசிரைக் காக்க வேண்டும் எனும் வெறி வழமைக்கு மாறான வேகத்தை கொடுத்துவிடுகின்றது. அந்த தியரி தான் இப்போது தர்மாவுக்கும்... தர்மாவின் கால்களில் சக்கரங்கள் கட்டப்பட்டன. முன்னிலும் பார்க்க இப்போது மிக வேகமாக ஓடினான். எப்படியாவது இந்த இராணுவச் சிப்பாயிடமிருந்து தப்பித்துக்கொள்ள வேண்டும் என்பது மட்டுமே இப்போதைய அவனது குறி.

எல்லா வழிகளும் அடைபட்டாயிற்று. அந்த இராணுவ வீரன் தர்மாவை துரத்திக் கொண்டிருந்ததில் அவனும் முன்னிலும் பார்க்க இப்போது வேகமாக ஓடுகின்றான் என்பது புரிந்து போயிற்று. ஆதலால் இன்னும் வேகமாக ஓடுவதனைத் தவிர வேறு வழி யில்லை. இவனிடம் பிடிபட்டால் அவ்வளவுதான்.. இப்போது இவனுக்கு சந்தேகம் வலுத்திருக்கும். நிச்சயம்தான் அது இவன் சொல்வது மாதிரி இப்போது இந்த இடத்தில் நான் நின்றுவிட்டால் நிச்சயமாக என்னை அவன் விடப்போவதில்லை. மாற்றமாக பிடித்துப் போய் இராணுவ முகாமுக்கு கொண்டு போய் விசாரணை எனும் பேரில் சந்தேக நபராக்கப்பட்டு அவசரகாலச் சட்டத்தின் கீழ்கைது செய்யப்படுவேனோ இல்லை காணாமல் போவேனோ... ரொம்ப பெரிய பயங்கரம்.. அதைவிட உத்தமம் முடியுமட்டும் ஓடுவோம்... ஓட ஆரம்பித்தாயிற்று... இனி நிற்க முடியாது... நின்றால் என் நிலைமை முடிந்துவிடும். வாழ்வு அல்லது மரணம்..தெனம் தெனம் செத்துப் பிழைப்பதனை விட.... விட.... ம்ஹூம்... வாழும் ஆசைதான் அவரது ஓட்டத்தில் வேகத்தை கலந்திருந்தது. சுற்றிவரக்காடு கள்... மனித அரவ மற்றிருந்தது அந்த இடம்... அந்த இராணுவ



சிப்பாய் இன்னும் தர்மாவைத் துரத்திக் கொண்டிருந்தான்.. இருவருக்கிடையில் சுமார் இடைவெளி சில நேரம் அந்த ஆர்மிக்காரன் பிடித்துவிடக் கூடிய வாய்ப்பு நிறையவே இருந்தது.

ஆதலால்

தர்மா ஓடுவதில் இன்னும் தீவிரம் காட்டினான்.

"பகோ.. நவத்தபங்.... துவன்ன எபா... துவன்ன் எபா...நெத்தங் வெடி தியனவா... நவத்தன்ன... துவன்ன எபா..." அவனது குரல் காதுக்கு மிக நெருக்கமாக கேட்டது எனில்...அதெல்லாம் யோசிக்க நேரமில்லை.

அந்தக்குரலில் இருந்த முரட்டுத்தனமும் ஆக்ரோஷமும் திகில் செய்து தர்மாவை கொஞ்சம் கொஞ்சம் தின்று கொண்டிருந்தது. திகிலை அழைத்துக்கொண்டு திசை தெரியாது ஓடிக் கொண்டிருந்தவன் திடீர் என்று நின்று திரும்பிப் பார்த்தான்.

"படீர்".

இராணுவச் சிப்பாயின் துப்பாக்கி வெடித்து அதிலிருந்து புகை கிளம்பியது.. அவனது துப்பாக்கி யிலிருந்து புறப்பட்ட புல்லட் விட்ட வேகத்தில் மைக்ரோ நொடிகளில் தர்மாவை தொட்டணைத்த போது குபுக்கென உடனடி ரத்தம்... குண்டடிபட்டுத் திரும்பிய தர்மா அப்படியே சரிந்து பலவீனமாகி கீழே விழுந்தான்... அந்த ராணுவச் சிப்பாய் அவனை மெல்ல நெருங்கிக் கொண்டிருந்தான்.

இனி அவ்வளவுதானா... நான் செத்துக் கொண்டிருக்கிறேனா... குண்டு எங்கே பட்டது... உடல் முழுக்க குருதியாபிஷேகம்... ஆ.....ஆ.... ஆ... வலித்த இடம் வலது கை... வலது முழங்கைக்கு மேல் குண்டடிப்பட்டிருந்தது... மரணவலி... என்ட கடவுளே.... என்னைக்காப்பாத்து... என்ட கடவுளே...

சுய நினைவிலேதான் இருந்தான் தர்மா. அந்த இராணுவச் சிப்பாய் இப்போது அவனது பக்கத்தில் கோப விழிகளோடு நின்று கொண்டிருந்தான்.

குருதி தன் பாட்டுக்கு கொப்பளிக்க ஆரம்பித்து ஹீமோகுளோபின் தேடி ஏமாந்து போயிருந்தது. "ஏய்... ஏன் ஓடுன... எத்தன தரம் சொன்னேன் ஓடாதே என்று... கேக்காம ஓடுன..."

"ஆ....ஆ.....ஆ,,,ஆஆஆஆஆ...."

"ஓம் பேரென்ன" காயத்தில் வலியின் கலை.

"தர்மா.... ஆ....ஆ.....ஆ...."

"ஏன் என்னைக் கண்டு ஓடுன...அப்டின்னா நீ புலியா"

"......................"

"ஒன்ட ஐடின்கார்ட எடு....." அதட்டினான் அந்த இராணுவச்சிப்பாய்.

தன் ஷேர்ட் பொக்கெட்டுக்குள் வைத்திருந்த தனது அலுவலக ஐடென்டிகார்டினை எடுத்து நீட்டினான் தர்மா.... காயம் பட்ட இடத்திலிருந்து இரத்தம் மெல்ல மெல்லப் பெருகிக் கொண்டிருந்தது.

"நீ... நீ... கோர்ட்ல வேல செய்யுறியா... நான் எவ்வளவோ சொன்னேன் ஓடாதேன்னு..."

"ஓடாம நின்னு ஒன்ட கோர்ட் ஐடென்டி கார்ட நீ காட்டியிருந்தா ஒன்ன விட்டிருப்பேன்... அநியாயமா என்ன சுட வெச்சிட்டியே.... ச்சே... இந்தா எழும்பு... என்று சொன்ன அந்த இராணுவச் சிப்பாயின் முகத்தில் அடையாளம் தெரியாத துயரம் படர்ந் திருந்தது. இப்போது ஏலவே அதிக இரத்தப் போக்கு காரணமாக மயங்கிக் கிடந்த தர்மாவை தூக்கி தன்னில் சாய்த்துக்கொண்டு மெல்ல நடந்தான் இராணுவச் சிப்பாய்.

●

# பறை... பறை... பறை...



பறை... பறை...பறை
பறை அறைந்து பறை
கேட்பவர் காதில் பறை
கேட்காதோர் செவிட்டில் அறை
பறை அறைந்து அறை...

ஓங்கியடிப்பதில் கிழியட்டும்
பறையல்ல
வேடிக்கை மனிதரின்
முகத்திரை

வாழ்க்கையின் இசை பறை –இதைத்
திக்கெட்டும் சென்று பறை

மானுடம் சிதைக்கும் மதத்தை
பறை கொண்டு
சிலுவையில் அறை

சாதி இசையென்றால் அறை
ஆதி இசையாகும் பறை
ஆதிக்க சாதியை
அழிக்க அறை...பறை

வேற்றுமையை வேரறுக்க பறை
நீதியை நிலைநாட்ட பறை

ஓங்கியடிப்பதில் கிழியட்டும்
பறையல்ல
வேடிக்கை மனிதரின்
முகத்திரை.

மன்னார் அமுதன்

கெகிறாவ ஸுலைஹா





# தஜிகிஸ்தானின் மக்கள் கவி ரஸூல் கம்ஸதோவ் (Rasul Gamzatov) இன் கவிதைகளை நயந்து...

ரஸூல் கம்ஸதோவ் ரஷ்யாவின் தலைசிறந்த கவிஞர்களுள் ஒருவர். தஜிகிஸ்தான் பிரதேசத்தின் மலைகள் நிறைந்த 'Tsada' என்னும் ஊரில் நாடோடிப் பாடகர் குடும்பமொன்றில் 1923இல் பிறந்தவர். "தஜிகிஸ்தானின் மக்கள் கவி" எனப் போற்றப்படுபவர். "அவார்" தாய்மொழியாகும். மக்களின் பிரதிநிதியாக அவர் இருக்க வேண்டுமென்கிற கனவில் அவரது தந்தை அவருக்கு ரஸூல் எனப் பெயரிட்டாராம். பதினான்காம் வயதிலேயே தன் முதல் தொகுதியை வெளியிட்டவர். நாற்பதுக்கும் மேற்பட்ட இவரது தொகுப்புகள் தாய்மொழியில் வெளியாகியுள்ளன.

'ரஸூல் கம்ஸதோவின் தேர்ந்தெடுக்கப்பட்ட கவிதைகள்' திரு.மேமன்கவியவர்கள் தந்து நான் வாசித்த பொக்கிஷம் போலப் பேணத்தக்க ஒரு நூலாகும். 1974களில் சோவியத் சோஷலிஸக் குடியரசில் முதல் பிரசுரம் கண்ட இந்நூல், அவர் மொழியிலிருந்து ரஷ்ய மொழிக்கு நவும் கிரப்னேவ் மற்றும் யாகோவ் கொஸ்லொவ்ஸ்கி ஆகியோரால் மொழிபெயர்க்கப்பட்டு, ஆங்கிலத்தில் பீட்டர் டெம்பெஸ்ட் என்பவரால் மொழி மாற்றப்பட்டிருக்கிறது. தமிழ் வாசகர்களுக்கும் அவர் பற்றிய ரசனைக்குறிப்புகளை கவிதைகள் சில கலந்து வழங்கிட அவாக் கொண்டு இதை எழுத விழைந்தேன்.

ரஸூல் கம்ஸதோவ் அவர்கள் மனிதனை நேஸிக்கிற கவிஞராக இருந்தார். இக்கவிதை அதற்கு நல்ல சான்று.

தன்னந் தனித்திருக்க மட்டுமே
நான் இறைஞ்சுகிறேன்.
களைத்த பாதையிலிருந்து விலகி
நீங்கிப்போக நான் எண்ணங்கொள்கிறேன்.
புல் மீதிருக்கும் மேலங்கி போலும்
என் எண்ணங்களும்
விலைமதிப்பற்ற கனாக்களும் விரிகின்றன.

வாருங்கள் மனிதர்களே,
என்னை உம்மோடு சுமந்து செல்லுங்கள்.
எனக்குப் பரிசளிக்கப்பட்ட
என் எல்லா எண்ணங்களோடும், கனாக்களோடும்
நான் மட்டும் தனித்து விடப்படல் என்பது
எத்தனை துயரமானது என்பதை
நான் முன்னமெப்போதும் அறிந்திருக்கவில்லை.

நூலின் முன்னுரையில் ரஸூல் கம்ஸதோவ் இப்படி எழுதுகிறார்.

"மற்ற மனிதர்க்கு தம்மைப் பற்றியும், தமது காலத்தைப் பற்றியும் எடுத்துக்கூறிடவும், மட்டுமன்றி தம் சிந்தனைகள் மற்றும் உணர்வுகள் பற்றிப் பேசும் பொருட்டும், தம் ஆன்மாக்களின் கிளர்ச்சி பற்றி



இயம்பிடும் பொருட்டுமே கவிஞர்கள் எழுதுகிறார்கள். பூமியின் மீதிருக்கும் ஆகவும் பேரிதயம் கொண்ட படைப் பினம் கவிஞர்களே பெரும் பாலும். ஏனெனில், அவர்களுக் குள்ளிருந்த பொக்கிஷங்களை அவர்கள் தாராள மாக அள்ளி அடுத்தவர்களுக்கு வழங்கினார் கள். ரஷ்யக் கவிஞர்கள் புஷ்கின், தொடங்கி த்வார் தோவ்ஸ்கி வரை எனக்கு ரஷ்யாவின் ஆன்மாவையும், விதியையும், வரலாறையும் தந்தவர்களே. சேவ்வென்கோ வும், ரில்ஸ்கியும் உக்ரைனின் மகிழ்ச்சிகளையும் துயரங்களையும் என்னோடு பகிர்ந்தவர்களாவர். ருஸ்தா வெலியும், லியோனைட்சும் ஜோர்ஜி யாவின் மெருதுவையும், கரடுமுரடையும் எந்தனுக்குக் கற்பித்தவர்கள் தான். ஆர்மேனியா வின் இஸாக்கினுக்கு நான் நன்றி மிகுந்தவனாயிருக்கிறேன், அவார் மொழியை, சேவான் ஏரியின் ஒளிரும் நீலத்தை, அராராத் மலையின் பனிபடர் உச்சியை உயிலாவணமாய் எழுதித் தந்து போனமைக்காக. பல்கேரியாவின் கபார்டினோவுக்கு நான் விஜயம் செய்திட்டேன். கைஸின் குலிவ் பகர்ந்தான் எனக்கு, "நான் உமக்கு நான் பிறந்த சேகம் ஜோர்ஜையும், எல்ப்ரஸ்ஸையும் வழங்குகிறேன்." என்று. பிற நிலத்து வரலாற்றாவணங்களும் கவிஞர் களும் பிற நிலத்துக் குடிகளும், மாந்தரும் என் குன்றுகள் நிறைந்த கிராமத்துக்கு அள்ளிச் சுமந்து வந்தார்கள் ஸ்பெயினின் வானையும், மணையும், இத்தாலியின் வண்ணங்களையும், இசை வடிவங் களையும், இந்தியாவின் பிரார்த் தனைகளையும், சமர்ப்பணங்களை யும், ஃப்ரான்ஸின் அழகையும், சத்தி யத்தையும், கம்ஸதோவ் பாடுகிறார்,

வீரன் மரணம் குறித்து
கிஞ்சித்தும் சிந்திப்பதில்லை.
கவிஞனோ
அதன் மீதில்
தன் மூச்சைச் செலுத்துகிறான்
தாராளமாய்.
மரணமும் நித்தியமும்
அருகருகே நின்று
அவர்கள் இறந்திடும் தறுவாயில்
அவர்களது வாயில்களினூடாய்
அவர்களைச் செல்ல
அனுமதித்தவாறு.

மேலும் இவர் இப்படிப் பேசுகிறார் முன்னுரையில்.

"நான் அதிர்ஸ்டக்காரனாக இருந்திருக்கிறேன் பாருங்கள். தஜி கிஸ்தான் பிரதேசத்தின் மலைகள் நிறைந்த Tsada எனும் கஷ்டப் பிரதேச இக்கவிஞனுக்கு, கவிஞர்கள் தானே முன்னோர்கள் பல நூற்றாண்டு களாய் முயன்று சேகரித்த முழு அகிலத்தையும் கொண்டு வந்து தந்தார்கள். "என் தஜிகிஸ்தான்" என்று முன்னமெலாம் பேசிக் கொண்டிருந்த இக்கவிஞனை, "என் ரஷ்யா"வென்றும், "என் ஜோர்ஜியா" வென்றும், "என் கிரகம்" என்றும் பேச முடிந்தவனாய் மாற்றினார்கள். ஒரு கவிஞனின் பெருந்தன்மையானது தன் சொந்த பெறுமதியையும், சுதந்திரத்தையும் எவ்வகையிலும் குறைவடையச் செய்யாது; தன் தாய்த்திருநாட்டையோ, தம் மக்களையோ ஒருபோதும் வறிய தாக்கவோ, வளம் குன்றியதாகவோ நினைக்கச் செய்யாது. மாறாக, அது அவன்தன் புகழாரத்தையும், பலத்தையும், அவன்தன் ஆன்மா வின் உன்னதத்தையும், நெஞ்சு ரத்தையும் பல்மடங்கு மதிப்பு மிகுதி யாக்கும் பணியைச் செய்கிறது. அவன்தன் திறமையானது அவனது சொந்த மக்களின் கலாசாரத்தின் பெறுமதியை மகிழ்வோடு அணைத்துக் கொள்கிறது. கவிஞனானவன் தன் சொந்த நாட்டின் பிரகாசமாவான். பெரும் விருப்புக்கொடையென என் முன்னோரிடமிருந்து நான் பெற்றுக்கொண்டது இந்த நாடோடிப் பாணனின் பிரகா சத்தையேயாம். சொல்லொணா வம்சாவழிச் சொத்தாய் பெற்றி ருக்கிறேன் என் தஜிகிஸ்தானை நான்."

*1963*இல் தனது 'Lofty Stars' "உன்னத நட்சத்திரங்கள்" நூலுக்காக லெனின் விருதை வென்றார் ரஸூல் கம்ஸதோவ். "தொலைதூர நட்சத்திரங்கள்" என்கிற அவரது இந் நூலிலுள்ள கவிதையைப் பார்ப்போம்.

ஏவுகணைகள் தமையனுப்பி நாம்
அடைய எத்தனிக்கிறோம்
தொலைவில் மின்னிடும்
நட்சத்திரங்களை.
நீங்களோ
உன்னதமான நட்சத்திரங்கள்
மானிடரே,
உங்களை அடைவதே
எனதான வாஞ்சை.

ரஸூலின் பார்வையில் மனிதர் கள் பூமியின் நட்சத்திரங்களாகத் தோற்றமளிக்கிறார்கள். "நமது கிரகத்தின் மக்கள், நட்சத்திரம் மற் றொரு நட்சத்திரத்துடன் பேசுவது போல பேசிக்கொள்வோம். ஒருவர் மற்றவரைக் கண்சிமிட்டி அழைத்து ஒளியையும், இதத்தையும் பரிசாகத் தரவேண்டும் நட்சத்திரங்கள் செய்வதைப்போல" என ஆசைப்படு கிறார் ரஸூல்.

இரவின் நட்சத்திரங்கள்
இரவின் நட்சத்திரங்கள்
என் செய்யுள்களில் கவிகளில்
எட்டியெட்டிப் பார்க்கின்றன.
மனிதனின்
கண்களைப்போல கண்களைப்போல
எதுவும் இங்கே இனியில்லை.
இரவின் அமைதிநிறை ஓய்வுப் பொழுதில்
அவர்கள் பகன்றதை நான் செவித்தேன்,
"யுத்த வருஷங்கள்
எடுத்துப் போனோரின் ஒளிரும்
மனசாட்சியென மிளிருங்கள்"
தஜிகிஸ்தானுக்கு உண்மையாயிருந்த
மலைப்பிரதேசத்து மானிடன் இவனுக்கு

இலகுப்பாதையென எதுவும் இல்லை.
யாரறிவார், சிலவேளை யாரறிவார்
சிலவேளை
நானே ஒரு நட்சத்திரமாய் இருப்பேனோ?

இன்னொருவர் செய்யுளுக்குள்
எட்டியெட்டிப் பார்ப்பேன்
ஒரு பூமியின் உறுதிபூண்ட நட்சத்திரமென,
என் சமகாலத்தவராயிருப்போரின்
மனசாட்சி ஒளிரும்.

ரஸூல் கம்ஸதோவ் கூறுகிறார், "மஹ்மூத், பத்திராய், இர்ச்சி கஸாக், எட்டிம் எமின், சுலைமான் ஸ்டால்ஸ்கி, என் தந்தை கம்ஸாத், என் ஆசான் ஃஎபன்டி காபியேவ் மற்றும் இவர் போல் பலர் உயிலாய் எனக்கும், என் பரம்பரையினர்க்கும் தஜிகிஸ்தானை அதன் எல்லா வண்ணங்களோடும், சொற்களோடும் சப்தங்களோடும், அதன் வீரமிகு கவிதைகளோடும், காதல் பாக்களோடும், அதன் சத்தியங்களோடும், கற்பிதங்களோடும் அதன் அற்புதங்கள் அதிசயங்களோடும், தனித்துவங்களோடும் மற்றும் இசைக்கூறுகளினதும், உருவங்களினதும் உலகோடும் கலந்து வழங்கினார்கள்.

"அவார்" மக்களிடையே எழுதப்படாமல் பேணப்பட்ட சட்டம் ஒன்று நடைமுறையில் இருந்து வந்தது. அஃது என்னவெனில், மூத்தோர் பேசுகையில் இளையோர் மௌனமாய் செவி சாய்த்தல் வேண்டும். ஆயின், பெரும் உன்னதக் கவிஞர்கள் விழிப்போடு இருக்கையில் நான் எங்ஙனம் என் தேசம் பற்றி எழுதுவேன் சொல்லுங்கள்." என வினவுகிறார் ரஸூல் கம்ஸதோவ்.

"புதிய காலங்கள் புதுப்புது கவிதைகளினது வரவை உறுதிப்படுத்துகின்றன. புதிய நிகழ்வுகள், தொடர்புகள், உறவுகள், சிந்தனைகள், மக்கள் ஆகியோர் கவிகளை- பரபரப்பூட்டும் வருஷங்களின் வரலாற்று நிகழ்வுகளினதும், வாழும் சாட்சிகளினதும், தம் சிந்தனைகளினதும், உணர்வுகளினதும் கவிகளாக தாமே இருக்கிற கவிகளை-முன்னே வருமாறு அழைப்பு விடுக்கிறார்கள். இருந்தபோதிலும் கவிதையினது அடிப்படையும், அதன் இயல்பும் மாறுதல்களுக்கு உட்படவியலாது. தன் சொந்த மக்களோடு பின்னிக் கட்டப்பட்டிருக்கிறான் கவிஞன். தான் வாழும் தேசத்துக்கும், தான் வாழும் பிரதேசத்துக்கும் தன்னை அவன் முற்று முழுதாய் அர்ப்பணம் செய்திருக்கிறான். பிரபஞ்சத்தின் முன்னே நின்றபடி அவன் தன் தேசத்துக்காகப் பயமின்றிப் பேசுகிற மக்கள் பிரதி நிதியாவான்." என்று இயம்புகிறார்



"நமது கவிதையினதும், நம் தேசத்தினதும் பிரதிநிதி என மக்களால் போற்றப்பட்டாலேயே ஒரு கவிஞன் சந்தோஷமடைகிறான்." என்பார் ரஸூல். வாசகர்களை அவரது கவிதைகள் வெகுவாகக் கவர்ந்து நின்றமைக்கு அவற்றினது தனித்துவமானதும், சுயேச்சையானதுமான போக்குமே காரணம் என்கிறார்கள் ஆய்வாளர்கள்.
ரஸூல் பாடுகிறார்,

பூகோளத்தின் மேலே
அகல விரித்த சிறகுடன்
ராஜாளிப்பறவை
வட்டமிட்டு சிறகடிக்கும்.

நானும்
என் சொந்தக் கரங்களை
அகல விரித்தே
பூமியில் வாழும் மானிடரை
பற்றிக் கொள்ள அவாவிடுவேன்.
துயரப்படுவோரோ நடனம் புரிவோரோ
யாராயினும்
பெரும் உலகின்
பரந்த வெளியெங்கணும் வசிப்போர்
யாபேர்க்குமாய்
அம் மகிழ்ச்சியினை முழுதாய்ப் பாடிட
அவாவுகிறேன் நான்,
செம்மறியாட்டுக்குட்டியின்
புதிதாய் வளரும்
மென் சருமம் போல
மெல்லத்தாலாட்டி.

"ஒரு எழுத்தாளனது வாழ்க்கை அவன் கடந்து வந்த வருஷங்களால் அன்றி, அவன் படைப்புகளாலேயே தீர்மானிக்கப்படுகிறது. எழுத்தாளனை அறியவும், அளக்கவும் அவனது படைப்புகளைவிட சிறந்தவையாக வேறு எதுவும் இருக்க முடியாது." என்று கூறும் ரஸூல் கம்ஸதோவ், மேலும் கூறுகிறார். "உண்மைக் கவிஞன் ஒருவன் ஒரு தனி உணர்வை வெளிப்படுத்துவதில் வெற்றியடைந்துவிட்டால், விளக்க முடியாத வகையில் அது எல்லா மனிதர்க்கும் உரிய பொது உணர்வாகி விடுகிறது. ஆனால், எல்லா மனிதர்க்குமுரிய பொது உணர்வை ஒரு கவிஞன் வெளிப்படுத்த முனைந்தால், அவனால் தூக்க முடியாத அப்பாறையின் கனத்தில் அவன் நசுங்கி விடுவான். ஏனெனில், தனி உணர்வுகளின்றி பொது உணர்வுகள் என்று ஒன்று இருக்க முடியாது." என்று. ரஸூல் கம்ஸதோவ் பாடுகிறார்.

ஒரு போர் வீரனது இதயம் தீயை ஒத்தது.
ஆதலினால் இளம் பெண்களே கவனம்!
தீ ஒன்றில் அணைக்கப்படலாம்;
அன்றி, தூண்டப்படலாம் கவனம்.

ஒரு போர் வீரனது இதயம் ஒரு கத்தியை
ஒத்தது.
ஆதலினால் இளம் பெண்களே கவனம்!
ஒன்றில் கத்தி மழுங்கிப்போகலாம்;
அன்றி, வெட்டவும் முடியலாம் கவனம்.

கவிக்குடும்பத்தில் பிறந்தமையால் ஆரம்ப காலத்திலேயே எழுத ஆரம்பித்தவர் அவர். "நான் எழுதியதில் மென்மையும், தரமும் இருப்பதாய் உணர்ந்தேன். என் முதல் கவி பிரசுரமானபோது, வார்த்தைகளில் சொல்ல முடியாத அளவு மகிழ்ந்தேன். நண்பர்கள் பாராட்டினார்கள். மக்கள் என்னைப் பற்றி எழுதினார்கள். ஏசுவோரும் இருந்தனர். வதந்தி ஒன்று கிளம்

பிற்று தந்தையே எனக்கு அவற்றை எழுதித் தந்ததாக. "உன் தந்தை உனக்காய் எழுதுவதாய் மக்கள் நினைப்பது கூட, நீ ஒரு நல்ல கவிஞன் என்பதை ஒப்புக் கொள்வ தாக ஆகிறதே" என்று ஆறுதல் கூறினார்கள் நண்பர்கள். இன்னும் சில நண்பர்கள் சொன்னார்கள், நான் என் தந்தையைப்போலவே எழுதுவதாக. "நீ வித்தியாசமாக எழுதவேண்டும். ஒரு கம்ஸாத் போதும் ஒரு குடும்பத்துக்கு. நீ உன் தந்தையின் நிழலுரு; பின்னிணைப்பு" என்றார்கள்.

"நட்பு" பற்றி கம்ஸதோவ் பாடி வைக்கிறார் இப்படி:-

நீண்டகாலம் நீ வாழ்ந்திருக்கலாம்.
வாழ்வில் வீசிய புயல்களுக்கு
வசதியாய் ஆறுதலும் அடைந்திருக்கலாம்.
உன்னால் உன் தனித்த இதயம்
கதகதப்பாக்கிய ஒரு நண்பனையாகிலும்
பெயரிடல் முடியாது.

வருஷங்கள் பல கடந்தோடி
வயோதிபம் நீ தழுவுகையில்
மக்கள் உன்பால் திரும்பிச் சொல்வர்:
"அவன் ஒரு நூற்றாண்டு வாழ்ந்தான்
பரிதாப ஆன்மாவே,
ஒரு நாளேனும் அவன் வாழவில்லை."

விலைவாசி பற்றிய அவரது தீட்சண்யப் பார்வை அடுத்த கவிதையில் இன்றைய நிலவரத்தை மீட்டுகிறது.

விதி கருணையுடன்தான்
இருந்திருக்கிறது.
நான் குருடனாகவுமில்லை;
பைத்தியமாகவுமில்லை.
தீராமல் இன்னும் ஒரு ஆசை
என்னுள் உள்ளது.
உலகின் உணவுப் பண்டம்
குறை விலையிலும்
மனுஷ வாழ்வு உயர் விலையிலும்
இருத்தல் காண.

இளம் பாராயத்தையும் முதிய காலத்தையும் அவர் கவிதை யில் வடித்து வைக்கிறார் இப்படி,

என் சிறுபராய நாட்கள்
மிகத் தொலைவுவரை
கடந்து போயாயிற்று பின்னே.
வீணில் நான்
அழுது அதற்றியே
யாசிக்கிறேன்.
ஆயினும்,
என் எந்த இறைஞ்சுதல்களும்,
கோரிக்கைகளும்
அந்நாட்களை மீளக் கொணரும்
திராணியற்றிருக்கின்றன.

என்னை எதிர்நோக்கி
என் வயோதிபம் பார்த்திருக்கிறது.
பெரும் சுமையைச்
சுமந்தபடியிருக்கிறது அது.
வீணில் நான் அழுகிறேன்,
"எனை நானாய் இருக்கவிடு" என்று.
என் பயணப்பாதையைத் தடுத்து
அது வியப்பொடு வெறிக்கிறது என்னை.

அவரது காதலைச் சொல்லும் கவிகள் அற்புதமானவை.

சந்தோஷமே தாமதி,
எங்கே நீ விரைகிறாய்?
"காதலில் இருக்கும் ஒரு இதயத்திடம்."
இளமையே எங்கே செல்கிறாய்?
"காதலில் இருக்கும் ஒரு இதயத்திடம்."
வலிமையே துணிவே, எங்கே போகிறீர்?
"காதலில் இருக்கும் ஒரு இதயத்திடம்."
துயரமே நீ எங்கே செல்கிறாய்?
"காதலில் இருக்கும் ஒரு இதயத்திடம்."

இன்னொரு அழகான கவிதை,

ஏப்ரலின் இறுதிப்பகுதி
துரத்தியோட்டும் பனி
சமதளம் வழியே முகில்களுக்குள்
கூட்டியள்ளிச் செலுத்தப்படுகிறது.
கீழிருக்கும் பூமிதனை
அது காணுகையில் அதோ
அது உருகிப் பொழிகிறது
மழையெனவே.
மலைப் பிரதேசத்துப் பாதைகள் வழியே
உன்னோடு சினங்கொண்டு
ஓடோடிப் போகிறேன் நான்.
ஆனால், உனது பிரசன்னமோ
என் சினத்தை உருக்கியே போடுகிறது,
பூமி ஏப்ரல் பனிக்குச் செய்ததே போலும்.

ரஸூல் கம்ஸதோவ் எழுதிய மிக அற்புதமான இன்னொரு காதல் கவிதையைப் பாருங்கள்.

உறங்கு எனதன்பே!
இருள் பரவுகிறது தீவிரமாய் ஜுலையில்.
தூக்கம் வந்து நீ கிறங்குகையில்
பாடிடுவேன் ஒரு தாலாட்டு.
இருள் வந்து தலையீடு செய்கையில்
உன் செவியண்டை
முணுமுணுக்க ஏதுண்டு?
நீ செவிக்கும் இறுதி "இரவு வணக்கம்"
எப்போதும்
எனதாகவேயிருக்கட்டும் எனதன்பே!
உன் நித்திரையை எதுவும் பங்கம்
செய்யாது.
நான் அவதானிப்பேன் கீழிருந்து.
வானம்பாடி கிளம்பியே வந்து துவம்சம்
செய்யும்
ஒவ்வொரு விண்மீனையும்.
கிழக்கில் மெல்ல உதயம் நிரம்பும்.

நிழலிருட்டு பறந்தோடும்.
புது வைகறை பிறக்கும்
பொன்னெனவும், புனிதமாயும்.
எப்போதும் நீ செவிக்கும் முதல் "காலை
வணக்கம்"
எனதாகவே இருந்திடட்டும் என் ஸகியே!

கம்ஸதோவின் இன்னொரு கவிதையைப் பாருங்கள்.

தாலாட்டுகளின் மீதிலெல்லாம்
என் மனது நாட்டங்கள் கொள்வதில்லை.
காலைப்பொழுது புலரும்வரை
ஆழ் உறக்கத்தில் உனை
வீழ்த்த உதவுதற்காய்
உன் தலைமாட்டில் நிலையாய்
நின்றிருப்பேன் நான் வந்து.
ஆங்கே யான் விடியும்வரை
காத்தும் கிடப்பேன்.


இலையுதிர்கால இரவினூடே
நீள்கின்ற பயணத்தில்
உன்னைக்
காத்தவண்ணம் நானிருப்பேன்.
கனாக்கள் கண்டபடி நீயுறங்கும்
நிம்மதித்துயில் முடிகிறவரை
உறங்கிடும் பள்ளத்தாக்கை
கேடயம்போலக் காத்திடும்
ஐயிலை மரம்போலும் அல்லது,
மலையடிவார நீரோடையைக்
பாதுகாத்திருக்கும்
ஒரு மௌன மலைக்
குன்றெனவேபோலும்...


அவரது சின்னச்சின்ன கவிதை கள் ஏராளமாக இருந்தன. நடைத்தடி (ஸ்டிக்ஸ்) பற்றி ரஸூல் கம்ஸதோவ் பாடுகிறார்.


குருட்டு மனிதன் ஒருவனுக்கு
கண்ணாவேன் நான்.
காலற்ற மனிதனுக்குக்
காலும் நானேயாவேன்.


கதவின் மீதில்-நுழைவாயில் மீதில் கவிதைகள் இப்படியமையும்.

இங்கே நீ காண்பாய்










ஒய்வெடுக்கத்தக்க ஒரு இருப்பிடம்.
உன் பிரச்சினைகளை
சீர் செய்யலாம் இங்கே.
வரவேற்கப்படும் ஒரு
விருந்தினனாய் நுழை.
நீடிக்கும் தோழமை தரும் நண்பனாய் பிரி.

கல்லறை மீதில் கவிதைகள் இப்படியமையும்.

ஆயிரமாயிரம் வீதிகள் நீ கட்டினாய்.
ஒன்று மட்டும் நிச்சயம்.
எந்தப் பாதையை நீ எடுப்பினும்
வந்து அது முடிவுறும் இங்கே.

கடந்து போவோரே,
உம் நல்லதிர்ஷ்டங்களை சபியாதீர்.
என்னிலும் பார்க்க நீர்
நல்லதிர்ஷ்டசாலிகளே.

வாழ்வை அவன் மகிழ்வோடு
வாழ்ந்தான்
ஆயினும் கொஞ்ச காலமே.
அவன் முகவரியோ தொழிலோ
அறியோம்.
நமக்குத் தெரிந்ததெல்லாம் அவன்
ஒரு மனிதன்
பிறந்து பின் அழுது முனகி இறந்து
வாழ்ந்து முடித்த.

பூமியின் பாடகன் இறந்து இதோ
நான் இங்கு வீழ்ந்து கிடக்கிறேன்.
யார் என் பக்கத்தே
எனக்கெதுவும் புரியவில்லையே!

தத்துவக் கவிதைகள் கோடி படைத்தார் ரஸூல்.

தன் புதல்வனால் வழி நடத்தப்பட்டு
ஒரு குருட்டுச் சீமாட்டி
உலகம் சுற்றிப் பார்த்திடப் புறப்பட்ட
முன்னம் நான் செவிமடுத்த
கதையொன்றை நினைவூட்டிப்
பார்க்கிறேன்
நான் இப்போது.

அவன் அவளை வழி நடத்தியே செல்ல
அவள் பார்வை பெற்றாள் மறுபடியும்.
ஆதலினால்,
அவள் மீளக் கண்டாள் பகல்பொழுதை.
குருட்டுப்பூமியே,
நீயும் ஒளியைக் கண்ணுற வேண்டும்.
வா,
நாம் நம் பாதையில் போவோம்!

இன்னொரு கவிதை,

தாஜ்மஹாலைப் பார்.
இந்தப் பழங்காலக் கோபுரத்தே
நிலவொளியில்
பல ஆண்டுகளுக்கு முன்னம்
அக்பரது பலத்தால்
அடைத்து வைக்கப்பட்டிருந்த பெண்கள்
தமதில்லங்கள் வேண்டியும்,
தம் துயரங்களைச் சொல்லிச் சொல்லிப்
பாடல்கள் புனைந்தபடியும் இருந்தனர்.
அப்பாடல்கள் இன்னமும் ஜீவித்தபடியே.
அவர்கள்தம் ஆன்மாக்கள் பலவீனமுறா.
அவ்விசைப்பாடல்களைக் காலங்கள்
ஒன்றும்
அழித்துத் துவம்சம் செய்திடவும் முடியாது.

எத்தனை நீளமாய் நீடித்துக் கிடக்கிறது
வேதனையின் பாடல்?
எத்தனைக் குறுகலாய்ச் சுருண்டிருக்கிறது
மகிழ்ச்சியினது பாதை?

ரஸூல் ஞாபகங்களை மீட்டுகிறார் இன்னொரு கவிதையில்.

மறுபடி பாதையில் திரும்பியபடி
எனக்குத் தெரியும்
எவ்வளவு தூரம் நான்
நடந்து வந்திருக்கிறேன்,
எவையெல்லாம்
சம்பவித்திருக்கின்றன.
இன்னும் எத்தனை மைல்கள்
மீதமுள்ளன நான் செல்ல?
நீயோ நானோ கூறிட முடியாது.

மறுபடி பாதையில் திரும்புகிறேன்.
நான் பார்க்கிறேன்.
என் தொலைதூர இலக்கையும்,
அதை நான் நன்கு நேசிப்பதையும்.
ஆயினும்,
நான் அந்த எல்லையைச்
சென்றடைவேனா?
நீயோ நானோ கூறிட முடியாது.

இந்தக் கவிதையின் செறிவு வாசகனை அயர வைப்பது எனக் காண்கிறேன் நான்.

காலையும் மாலையும்
பகலும் இரவும்
இருட்டினது மீன்பிடிப்பும்,
வெளிச்சத்தின் மீன்பிடிப்பும்
வையகம் ஒரு சமுத்திரம்.
சமுத்திரத்தினது ஆழத்தே
மீன்களே போலும்
நாம் நீந்திக் கொண்டிருக்கிறோம்
என்பதில் வியக்கிறேன்.

சமுத்திரம் இவ்வையகம்
செம்படவன் காத்திருக்கிறான்,
இரைதேடிக் கொழுக்கியில் மாட்டியும்,
வலையை விரித்தும்.
எப்படி எவ்வளவு காலம்
காலம் என்னை அப்பால் வைத்திருக்கும்
இரவின் இவ்வலையிலிருந்தும்,
பகலின் கொழுக்கியிலிருந்தும்?

இன்னுமொரு கவிதை இப்படித் தத்துவம் பேசும்.

இரவு சலிப்பூட்டுவது
ஒரு உரைநடைபோல
கூடவே இருளானது
கயமைத்தனத்தைப்போல,
எரிச்சலூட்டுவது

என்றைக்கும்
திரும்பிப்போகா ஆயினும்
தன்னைச் சகித்துக் கொள்ளுமாறு
வற்புறுத்துகின்ற
விருந்தினனைப் போல.

நான் எழுதிக் கொண்டிருக்கையில்
இல்லம் உறங்கிக் கொண்டிருக்கிறதுள
ஒரு சகா வரைந்து கொண்டிருக்கிறான்
அருகே.
நான் அகல விழித்துக் காத்துக்
கிடக்கிறேன்,
நாளை மறுபடி அவனிங்கு வருவான்!

வீரம் சொல்லித் தந்தன அவரது கவிதைகள் அவர் மக்களுக்கு.

காலை வந்தனம்!
யன்னலினூடாய் வெளியே பார்.
ஒரு வெண் குதிரைக்குட்டி காத்திருக்கிறது.
ஓட்டிப்போ துணிவு இருந்தால்!
கடவுள் உனைக் காப்பான்,
சக்திமிக்க குதிரையொன்றின் மீதிருந்து
பயணம் செய்யத்
திராணியின்றித் தோற்றமைக்காய்
ஜீவிதம் முழுதும்
பச்சாதாபம் பீடிக்கப்படுவதிலிருந்தும்.

என் அன்னைக்கு...கவிதையில் தாயோடு பேசுகிறார் ரஸூல் கம்ஸதோவ்.

பல எச்சரிக்கைகள் செய்யப்பட்டும்
கட்டுக்கடங்காதவனாய்
வாலிபத்தினது தினவில்
சர்வசாதாரணமாய்
எல்லா ஆட்சேபிப்புகளையும் நான்
புறக்கணித்தே வந்தேன் ஒரு
சிறுவனாய்.
என் எல்லா இயலுமைகளையும்
பெரிதாய்க் கருதியபடி
விதியிலிருந்து நான்
வெருண்டோடி வரவுமில்லை
ஒருக்காலும்.
உன்னை இப்போது வெட்கத்துடன்
அணுகுகிறேன் நான்
ஒரு குழந்தைக்குரியதே போலும்
தயக்கங்களுடன்.

இப்போதோ நாம்
தன்னந்தனியே ஒன்றாய் இருக்கிறோம்.
என் மனசின் வேதனைகளுக்காய்
நான் பிராயச்சித்தங்கள் செய்வேன்.
நிலை மாறிச் சாம்பல் பூத்திருக்கும் என்
சிரசை
உன் மென்மைமிக்க
உள்ளங்கைகளுக்குள்
அழுத்துவேன் நான்.
எதிர் விளைவுகள் பற்றியேதும்
சிந்திக்காதவனாய்
வீண் தற்பெருமையின் கைதியாய்
சீரழிந்திருக்கிறேன் ஒரு அவக்கேடனாய்.
என்னிலிருந்த எந்த அம்சங்களும்
கவனத்திற்குரியதாய்
இருக்கவில்லை அம்மா!

சுற்றிச்சுழலுகின்ற வளையமொன்றுள்
நான் சுழற்றியடிக்கப்படுகையில்
ஆழ் முனகலைக்
கேட்க முடிகிறது என்னால்.
என் வயோதிபத் தாயே
நிஜத்திலேயே நான்
மன்னிக்கப்பட்டவனாய் மட்டும்
ஆகிவிடுவேனா சொல்!

ஆவல் பூக்க
ஆயினும் எந்தக் கண்டிப்பும் செய்யாமல்
என் தாயே நீ என்னை
நோக்குகிறாய் பெருமூச்செறிந்தபடி
மெதுவாய் வீழ்கின்றன
கண்ணீர்த் துளிகள் ரகசியமாய்
உன் கண்களிலிருந்து
கன்னங்கள் வழியே..
தனது இறுதி இலக்கும்
மீறிச் சென்றுவிட்ட
தொலைவானின் நட்சத்திரமாய்
தன் நரைத்துக் களைத்த தலையை
அழுத்துகிறான் உன் சின்னவன்
உன் உள்ளங்கைகள் மீதில்
உள்ளம் நிரம்பிய பச்சாதாபத்தோடு.

ஒரு பள்ளியாசிரியனாகிய ரஸூல் கம்ஸதோவ் ஆசிரியப் பயிற்சியை முடித்த கையோடு கலைக்கூடங்கள், பத்திரிகைகள், வானொலிக்கெல்லாம் கவி வாசிக்கச் செல்வாராம். "பதினாறு வயதிலேயே கவிஞனாக வருவேன் என்று கனவு கண்டிருந்தீர்களா?" என்று ரஸூலிடம் ஒரு கூட்டத்தில் வைத்து ஒருவர் வினாத் தொடுத்தாராம். அதற்கு அவரது பதில் இப்படி அமைந்திருந்ததாம். "இல்லை, அப்படிக் கனவேதும் இருக்க வில்லை. ஏனெனில் நான் அதற்கு முன்னமேயே ஒரு கவிஞனாக இருந்தேன்."

●

## பேசும் இதயங்கள்

ஆசிரியர்
ஜீவநதி,
அல்வாய்.

கடந்த இதழில் வெளியான சாந்தனின் கடிதம் தொடர்பாக...


"யேசுராசா இனியாவது தன் போக்கில் முதிர்ச்சியைக் காட்டவேண்டுமென்று விரும்புகிறேன்." எனக் கிண்டலாகக் குறிப்பிட்டுள்ளார். 'நெளிவு சுழிவுகளில்' சாந்தனுக்குள்ள முதிர்ச்சி என்னிடம் இல்லாததில், எனக்குத் திருப்தியே!

ஈழநாதக் கட்டுரையாளனும், மொட்டைத் தபாலட்டை எழுதியவரும் வேறெனச் சுழிக்கிறார். அப்படி வேறானவரானால், "இந்த அடி போதுமா?" எனத் தன்மைத் தொனியில் எழுதியிருக்கமாட்டான்; "ஈழநாதத்தில் விழுந்த 'அந்த அடி' போதுமா?" எனப் படர்க்கையில்தான் எழுதியிருப்பான்!

- அ. யேசுராசா

ரதன்





# எனக்கு பசிக்கின்றது
# போரில் பாதிக்கப்பட்ட சிறுவர்களை மையப்படுத்திய படங்கள்

"எனக்கு பசிக்கின்றது"... சோகத்தில் குரல் தேய்ந்து ஒலிக்கின்றது.

"எனது சப்பாத்துக்குள் கற்கள் சென்றுவிட்டன"

"எனது கால் வலிக்கின்றது"

"என்னை ஏன் அழைத்துச் செல்கின்றார்கள், நான் எதுவும் செய்யவில்லையே?" ...மரண பயம் முகத்தில் தெரிகின்றது

"என்னை கொலை செய்யப் போகின்றார்கள்" ...பயத்தில் குரல் நடுங்குகின்றது

இவை யாரின் குரல்கள்?

போராளிகள்!!!!

ஆம், ஆனால் இவர்களுக்கு வயது வெறும் 11.

சிறிது நேரத்தில் இராணுவம் அழைத்துச் சென்ற நால்வரில் மூவர் தலையில் சுடப்பட்டு கொல்லப்படுகின்றனர். அருகே துப்பாக்கிச் சத்தம் கேட்க மற்றச் சிறுவன் சவா தப்பிவிடுகின்றான். சவாவின் கதைக்குச் செல்ல முன்னர்...

எந்த நாட்டு இராணுவம் இதைச் செய்தது? இராணுவத்திற்கு உதவி செய்பவர்கள் யார்? கண்களை மூடிக் கொண்டே உடனடியாக அமெரிக்கா என பதில் சொல்ல முடியும். இக் காட்சி இடம் பெற்ற படம் இனசன்ட் வொயிஸ்

இச் சம்பவம் நடைபெற்ற நாடு எல் சல்வடோர். எல் சல்வடோரின் உள் நாட்டு யுத்தம் 1980 க்கும் 1992 க்குமிடைப்பட்ட பகுதியில் இடம் பெற்றது. இராணுவ அரசுக்கும் இடது சாரி கூட்டு முண்ணனியான Farabundo Martí National Liberation Front (FMLN க்குமிடையில் இவ் யுத்தம் இடம் பெற்றது. ஐக்கிய அமெரிக்கா இராணுவ அரசுக்கு ஆதரவளித்தது.இந்த யுத்தத்தின் போது பல கிறிஸ்தவ வண பிதாக்கள், ஆர்ச் பிசப் ரோமாரியோ உட்பட சிறுவர்கள், பெண்கள் முதியவர்கள் என பலர் படுகொலை செய்யப்பட்டனர். அமெரிக்கா, Death Squad எனப்படும் படுகொலை இராணுவ பிரிவை எல் சல்வடோர் இராணுவத்தில் தோற்றுவித்தது. இதில் அங்கத்தவர்களாக இருந்த சில அதிகாரிகளின் வாக்கு மூலங்கள் திடுக்கிடவைக்கின்றன. Joya Martinez ன் கூற்றின் பிரகாரம் துப்பாக்கிச் சன்னங்களை பாவிக்காமல் குரல் வளையை நெரித்துக் கொல்லல், நஞ்சு கலந்த மருந்தை ஊசி மூலம் செலுத்தல் போன்ற முறைகளில் பலரை கொன்றதாக தெரிவித்துள்ளார். இவர்கள் பிரதானமாக இடது சாரி போராளிகள், சிறுவர்கள், மாணவர்களை குறிவைத்து கொலை செய்தது.

யுத்தம் ஆரம்பிக்க முன்னரே தனது மனைவி கெலாவையும் மூன்று குழந்தைகளையும் விட்டு விட்டு தந்தை அமெரிக்கா சென்று விடுகின்றார். சவா இக் குடும்பத்தின் மூத்த பிள்ளை. வயது 11. தாய் கெலா தையல் வேலையுடன், மாலை நேரங்களில் பகுதி நேர வேலைக்கும் சென்று குடும்பத்தை காப்பாற்றுகின்றார். சவா பாடசாலைக்கு செல்வதுடன் பகுதி நேர வேலையும் செய்கின்றான். இரவில் தாய் வேலை விட்டு வர முன்னர் பல நேரங்களில் இராணுவமும் போராளிகளும் சண்டையில் ஈடுபடுகின்றனர். சவாவின் வீட்டு யன்னல்களை துளைத்து சன்னங்கள் பாயும். தனது சகோதரியையும், கைக்குழந்தையும் அணைத்து கட்டிலின் கீழே பதுங்கி அவர்களை காப்பாற்றுகின்றான். அந்த பதட்டமான சூழலிலும் அழும் கைக் குழந்தையை ஆறுதல் படுத்தி சமாதானப்படுத்து

கின்றான். ஒருவாறு மூன்று உயிர்களும் தப்பி பிழைத்து வருகின்றன. அந்த வீட்டின் ஆண் மகன் (man of the house) என தாய் அவனை அழைப்பார். ஒரு வருடத்தின் பின்னர் அவன் இராணுவத்தில் சேர வேண்டும். இதற்கிடையில் தனது வகுப்புத் தோழியுடன் இவனுக்கு முதல் காதலும் அரும்புகின்றது.

12வயது வந்தவுடன் இவர்கள் இராணுவத்தில் சேர வேண்டும். சவா இதனை பல தடவைகள் சந்தித் துள்ளான். பாடசாலைக்கு வரும் இராணுவ அதிகாரிகள், அதிபரிடம் பிள்ளைகளின் வயதினை அறிந்து 12வயது வந்தவர்களை இராணுவ பயிற்சிக்கு அழைத்துச் செல்வார்கள். பாடசாலையின் பொது இடத்தில் அனைத்து மாணவர்களும் வரிசையில் நிற்பார்கள். அதிபர் பெயர்களை வாசிப்பார். அந்த மாணவர்கள் முன் வந்து இராணுவத்துடன் செல்ல வேண்டும். சில சமயங்களில் உருவ மாறுபாட்டாலும், இராணுவ அதிகாரிகள் முன்பு நடக்கும் நடவடிக்கைகளாலும் 12வயதுக்கு குறைந்தவர் களையும் இராணுவ வீரர்கள் அழைத்துச் செல்வார்கள். இந்த மாணவர்களின் பெற்றோருக்கு கூட இவர்கள் சென்ற பின் தான் தெரிய வரும்.

சவாவின் குடும்பம் வாழும் பிரதேசம் கடும் மழைபெய்யும் பிரதேசம். ஒவ்வொரு நாளும் கடும் மழையில் கூட பலர் அவஸ்தைப்பட்டனர். இக்கிராமத்தில் உள்ள பாதிரியாரும் இச் சிறுவர்களுக்காக குரல் எழுப்புவார். பல நேரங்களில் இராணுவத்தின் அடி, உதைகளை இப் பாதிரியாரும் சந்தித்துள்ளார்.

தாய் கெலாவின் சகோதரன் பீற்றோ ஒரு பல்கலைக் கழக மாணவன். பீற்றோ, சவாவை தன்னுடன் அழைத்துச் செல்ல விரும்புகின்றான். பீற்றோ தீவிரவாதி களுடன் தொடர்புள்ளவன். கெலா, சவாவை பீற்றோ வுடன் அனுப்ப மறுத்துவிடுகின்றாள். "நீங்களும், இராணு வத்தைப் போல் சிறுவர்களை போரில் ஈடுபடுத்து கின்றீர்கள்" என குற்றஞ்சாட்டுகின்றாள். பீற்றோ சவா விற்கு பல விடயங்களை கற்பிப்பதனுடன் ஒரு வானொலியையும் கொடுத்துவிட்டு செல்கின்றான். தடை செய்யப்பட்ட போராளிகளின் வானொலியை இதில் கேட்கலாம்.

சவாவிற்கு இப்பொழுது இராணுவம் வரும் போது பதுங்கும் தந்திரமும் தெரிகின்றது. ஒரு கடுமையான போரின் பின்னர், சவாவும், அவனது சில நண்பர்களையும் இராணுவம் பிடித்துவிடுகின்றது. கைகளை பின்னே கட்டியபடி அவர்களை இராணுவம் அழைத்துச் செல கின்றது. சவா மாத்தி ரம் தப்பிவிடுகின்றான். மற்றவர்கள் சுட்டுக் கொல்லப்படுகின்றார் கள். தப்பிய சவா வண. பிதாக்கள் மூலம் அமெரிக்கா செல கின்றான்.


சிறுவர்களின தும், வறுமைக கோட்டின் கீழ் வசிப் பவர்களது குரலாகவும் இப்படம் ஒலிக்கின் றது, ஒளிர்கின்றது.

இந்த இராணுவத்திற்கே அமெரிக்கா உதவியும், உபசரணையும், ஆலோசனையும் வழங்கியது. Director Luis Mandoki மெக்சிக்கோவைச் சேர்ந்தவர். போரின் இரு முக்கிய பாத்திரங்களான அரசு, போராளிகள் இருவரையும் குற்றவாளிகளாக காண்கின்றார். ஒரு பக்கம் போரையும் தூண்டி விட்டு மறு புறம் சிறுவர்களையும் ஏற்றுக் கொண்டு அமெரிக்கா நல்ல பிள்ளையாக வலம் வருகின்றது. இப்படத்தின் திரைக்கதையாசிரியர் Oscar Torres ன் வாழ்க்கைச் சம்பவங்களே இப்படம். போரின் பின்னர் வெறும் 10 வீதமான சிறுவர்களே பாடசாலைக்கு திரும்பிச் சென்றனர். அரச படைகளில் இருந்த சிறுவர்களில் சுமார் 25 வீதமான சிறுவர்கள் கல்வியறிவற்றவர்கள். போராளிகள் சிறுவர்களுக்கான மாற்றீடுகளை முன் வைத்த போதும் சிறுவர்கள் போரில் பங்கு பற்றியதன் மூலம் பல உள, உடல் பிரச்சினைகளை சந்தித்துள்ளனர். விளையாட்டு நேரம், கல்வி போன்றனவற்றுடன் பெற்றோர், சகோதரர்களை பிரிந்த மன உளைச்சல், பல கொலைகளை நேரில் பாத்தால் ஏற்பட்ட மன பாதிப்பு போன்ற பல் வேறு உளப் பிரச்சிகைள் அவர்களிடம் உள்ளன. இதனை யுனிசெப் போன்ற நிறுவனங்கள் உறுதிப்படுத்தியுள்ளன. அரசு பெரிதாக எந்த மாற்றுத் திட்டத்தையும் முன்வைக்க வில்லை. The study showed that the numbers of child soldiers meeting symptom cutoff scores on various measures and scales were 75 for depression, 65 for anxiety, 78 for PTSD, 55 for general psychological difficulties, and 88 for function impairment.

2.

போர் என்பது மிகவும் கொடியது அதன் பெரும் பாதிப்புக்கள் சிறுவர்களின் மீதே செல்கின்றது. அவர்களது அக, புற மனநிலைகள் பற்றி எவரும் அக்கறை கொள்வதில்லை. ஸ்பில்பேர்க்கின் கறுப்பு வெள்ளைப் படமான schindler's list ல் ஒரு சிறுமியை மாத்திரம் சிகப்பு நிற அங்கியுடன் காட்டுவார். இரண்டாம் உலகப்போரின் யூதப் படுகொலைகளின் ஒட்டு மொத்த வலியையும் அச்சிறுமி காவிச் செல்கின்றாள். நாசிகளின் அரக்கத்தனத்தையும் அச்சிறுமியே காவிச் செல்கின்றாள். நுகர்வோர், பார்வையாளர்கள் கண்கள் அனைத்தும் அச் சிறுமியையே காவிச் செல்கின்றது. அச்சிறுமி அழிவின் கண்களாகவும், அராஜகத்தின் விம்பமாகவும் பார்க்கப்படுகின்றாள். ஸ்பில்பேர்க்கின் மற்றொரு படமான எம்பயர் ஒவ் த சன் என்ற படத்தில் ஒரு சிறுவன் மூலம் யப்பானையும் அமெரிக்காவையும் விமர்சிக்கின்றார். ஆனாலும் இப் படம் ஒரு அமெரிக்க ஆதரவுப் படம். எம்பயர் ஒவ் த சன்னில் அகதி முகாமெங்கும் தன் கால்களைப் பரப்பும் சிறுவனைப் பார்க்கும் பொழுதெல்லாம் சிரிய அகதி முகாமில் வாழும் சிறுவர்களை யும் முள்ளிவாய்க் காலின் பின்னர் இன்ன மும் அகதி முகாமில் வாழ்ந்து கொண்டிருக் கும் சிறுவர்களும்





ஞாபகத்திற்கு வருகின்றார்கள். அஸ்வின் குமாரின் இயக்கத்தில் வெளிவந்த லிற்றில் ரெரரிஸ்ட் என்ற படத்தை ஒத்த படமே அலெக்ஸ் ஹோம்ஸ் இயக்கிய குறும்படமான அலி அன்ட் த போல் என்ற குறும்படம். பாலஸ்தீனிய அகதி முகாமில் வாழும் ஒரு சிறுவனின் வாழ்வியலை மையப்படுத்தியுள்ளது இக்குறும்படம். ஈரானிய சிறுவர் படங்களான மஜீத் மஜீத்தின் சில்ரன் ஒவ் ஹெவின், பாதர், ஜபர் பனகையின் த வைற் பலூன் மற்றும் மிரர் போன்ற படங்கள் சிறுவர்களின் வாழ்வியல் யதார்த்தத்தை பதிவு செய்துள்ளன. சிறுவர்களை சிறுவர்களாகவே காட்டுகின்றார்கள். அவர்கள் மீது பிரச்சினைகளை திணிக்கவில்லை. பிரச்சினைகளுடனேயே அவர்கள் உலாவுகின்றனர். இத் தன்மையை ஸ்பில்பேர்க்கின் படங்களில் காணமுடியாதுள்ளது. சிகப்பு நிற அங்கி என்பதே அச் சிறுமியின் இயல்புத் தன்மையை பார்வையாளர்களிடமிருந்து உடைத்து அச்சிறுமியை ஒரு கதாநாயகத் தன்மையை காட்டியுள்ளது. பெரும்பாலான சிறுவர்களை மையப்படுத்திய போர்த்திரைப்படங்களில் பெரியவர்களின் கருத்தியல் சிறியவர்களூடாக வெளிப்படுத்தப்படும். பல படங்கள் சுயசரித்திரங்களாக நினைவு கூறப்படுகின்றன (Au Revir Les Enfants, Hope and Glory, Diamonds of the night, Fatelss)) இவற்றுள் சிறுவர்களின் பிம்பங்களினூடாக பெரியவர்கள் பேசுகின்றார்கள். முன்பு நடைபெற்ற சம்பவங்கள், அல்லது சரித்திரங்கள் மீளாய்வு செய்யப்படுகின்றன. சிறுவர்களுக்கு போரினால் ஏற்பட்ட உளவியல் தாக்கங்களை காட்டப்படாமல், புதிய அரசியல் பேசப்படும். ஸ்பில் பேர்க்கும் இதனையே schindler's list , எம்பயர் ஒவ் த சன் ஆகிய படங்களில் செய்தார். சிங்கள இயக்குனர் சோம ரட்ன திசநாயக்கவின் குட்டி தேவதை திரைப் படத்தில் பேச முடியாத பணக்கார சிறுவன், வீட்டு வேலைக்கு வரும் சிறுமியின் நட்பினால் மாற்றமடைந்து பேசுகின்றான். அவன் பேசும் அவனது பெற்றோரின் மொழியல்ல. வேலை செய்யும் சிறுமியின் மொழியான தமிழ். இயக்குனர் மொழிக்கு கொடுக்கும் முக்கியத்துவம் சிறுவனினோ அல்லது சிறுமியினதோ உணர்வுகளுக்கு கொடுக்கவில்லை. சிறுவர் போர்ச் சினிமாக்கள் அரசியலையே அதிகம் பேசுகின்றன. அதனால் அவர்கள் சிறுவர்களின் இயல்பு வாழ்வின் வலிகளை வெளிப்படுத்த தவறுகின்றார்கள்.

சிறுவர்களின் போர்த்திரைப்படங்களில் ஒலி முக்கிய இடம் பெறுகின்றது. டயமன்ட்ஸ் ஒவ் த நைட் என்ற படத்தில் இரு சிறுவர்கள் ஒரு வெளியில் ஓடிக் கொண்டிருக்கின்றார்கள். சேறுகள் நிறைந்த அந்த வெளியில் ஓடுகின்றார்கள். பின்னர் துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்கின்றன. பின்னர் தான் எங்களுக்குத் தெரிகின்றது. அவர்கள் ஒரு புகையிரத வண்டியிலிருந்து தப்பி ஓடுகின்றார்கள். முதல் காட்சியில் பார்வையாளர்களுக்கு சிறுவர்கள் மீது ஒரு அனுதாபம் ஏற்படு கின்றது. அதன் பின்னரே ஏன் என்னத்துக்காக ஓடுகின்றார்கள் என்பது வெளிப்படுத்தப்படுகின்றது. அவர்கள் ஒருக்கமான ஒரு முகாமிலிருந்து மற்றொரு ஒருக்கமான (concentration) முகாமிற்கு புகையிரத வண்டியில் கொண்டு செல்லப்படுகின்றார்கள். அப்பொழுது தான் சிறுவர்கள் தப்பி ஓடுகின்றனர். ஓடிக் கொண்டிருக்கும் பொழுது சிறுவர்கள் கதைக்கவில்லை. களைக்காமல் ஓடுவதற்கு என நினைக்கலாம். சிறுவர்கள் சந்தித்த சித்திரவதைகள் அவர்கள் வாயை புண்ணாக்கி விட்டன. காட்சிகள் படிப்படியாக பார்வையாளர்களின் மத்தியில் ஒரு உணர்ச்சி பிழம்பை ஏற்படுத்துகின்றன. ஒலியையும் பிம்பத்தையும் வேறுபடுத்தியதன் மூலம் இயக்குனர் இதனை சாதித்துள்ளார்.

கடந்த வருடம் சிரிய அகதிச் சிறுவனின் பிம்பம் ஒன்று உலகையே உலுக்கியது. இப்பிம்பத்தின் வெளிப்பாடு ஒரு மிகப்பெரிய அரசியலையே நடாத்தியது. சிரிய அகதிச் சிறுவர்கள் தங்களது அன்றாட வாழ்விற்கு நடாத்தும் போராட்டங்களை உலகம் அறிய முற்படவில்லை. அதற்கு அப்பால் அதன் பின்னால் உள்ள அரசியலால். பெறப்படும் லாபத்திலேயே அரசுகள் அக்கறைகாட்டின.

3

போர் நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலங்களில் நடைபெறும் உண்மைச் சம்பவங்கள் பல எங்களை சிந்திக்கவைக்கின்றன. போரின் பன்முகத்தன்மையை ஆய்வு செய்யத் தள்ளுகின்றன. அவ்வாறான ஒரு படம் தான் இது. Before Your Eyes (Turkey)

ஒரு சிறிய நெடுஞ்சாலையில் அவர்களது கார் பயணித்துக்கொண்டிருக்கின்றது. முன் பக்கத்தில் குடும்பத் தலைவனான தந்தை காரை செலுத்திக் கொண்டிருக்க, அருகில் தாய் கைக் குழந்தையை மடியில் வைத்துக் கொண்டிருக்கின்றார். பின் இருக்கைகளில் சிறுவனும், சிறுமியும் அமர்ந்திருந்தனர். அவர்களது பிள்ளைகள். ஒரு திருமணத்திற்கு சென்று விட்டு திரும்பிக் கொண்டிருந்தனர். தந்தை ஒரு பத்திரிகையாளர். அப்பொழுது நேரம் நடுநிசியை தொட்டுவிட்டது. திடீரென அவர்களது கார் இனந்தெரியாதவர்களால் நிறுத்தப்பட்டது. கண் இமைக்கும் நேரத்தில் அனைத்தும் நடந்து முடிந்துவிட்டன. இப்பொழுது கைக்குழந்தையும் சிறுவனும் சிறுமியுமே உயிருடன் உள்ளார்கள்.

இவர்களது சித்தி வீட்டில் இவர்கள் தற்காலிகமாக தங்குகின்றனர். சித்தி இளம் பெண். அவருக்கு இவர்களை பராமரிக்க முடியாதுள்ளது. சித்தி கொஞ்சம் பணத்தை கொடுத்துவிட்டு மாயமாகிவிடுகின்றார். வீட்டில் இருந்த பொருட்களை ஒவ்வொன்றாக விற்று வயிற்றைக் கழுவுகின்றனர். ஒரு நாள் கைக்குழந்தைக்கு கடும் சுகயீனம். மருந்து வாங்கச் சென்ற போது உரிய பணம் கொடுக்கவில்லை எனக் கூறி மருந்துக் கடை ஊழியர்

மருந்தைக் கொடுக்க மறுக்கின்றார். அன்றிரவு பிள்ளை இறந்து விடுகின்றது. ஈமச்சடங்குகளை (பிள்ளையை புதைத்துவிட்டு) முடித்துவிட்டு வீட்டிற்கு வந்தபோது வீட்டு வாடகை கொடுக்கவில்லையெனக் கூறி வீட்டை விட்டு வெளியேற்றப்படுகின்றனர்.

DIYARBAKIR என்ற அந்த நகரத்தினுள் அவர்கள் பயணிக்கின்றனர். இவர்களைப் போல் அனாதைகளாக்கப்பட்ட சிறுவர்களுடன் இவர்களும் இணைந்து கொள்கின்றனர். அங்காடி முன் தரித்து நிற்கும் வாகனங்களில் ஒரு துண்டை வைக்குமாறும் வைத்து விட்டு வந்தால் பணம் கொடுக்கின்றேன் என ஒரு பெண் இவர்கள் பூங்கா ஒன்றில் இருந்த போது கூறுகின்றார். வேலையை முடித்து விட்டு வந்த போது அங்கு அப்பெண் இல்லை. பொருட்களை கூவி விற்கும் வண்டி வியாபாரச் சிறுமியுடன் சேர்ந்து பொருட்கள் விற்கின்றனர். அப்படி விற்கும் போது ஒரு நாள் அப்பெண்ணை கண்டு பணம் கேட்கின்றார் இந்தச் சிறுமி குளிஸ்ரன். காலப்போக்கில் அப் பெண் டிலர ஒரு பகுதி நேர பாலியல் தொழிலாளி என்பது தெரிய வருகின்றது. அவளுடன் அவள் செல்லும் இடங்களுக்கு; சிறுமி குளிஸ்ரன் ஒரு காவல்காரி போல் போய் வருகின்றாள். ஒரு நாள் தனது பெற்றோரைக் கொன்ற கொலையாளியைக் கண்டு கொள்கின்றாள்; சிறுமி குளிஸ்ரன். அவன் அப்பெண்ணுடன் உல்லாசம் அனுபவித்த போது வீட்டினுள் வலம் வரும் குளிஸ்ரன் கொலைகாரனின் துப்பாக்கியை ஒழித்து எடுத்துவந்து விடுகின்றாள். அதனை தனது தம்பி பிரட்டிடம் அவனது நண்பர்களிடமும் கொடுக்கின்றாள்.

அவர்களால் கொலையாளியை சுட்டுக் கொன்று விடமுடியும். ஆனால் அவர்கள் அதற்குப் பதிலாக அவன் வாழ்ந்து கொண்டிருக்கும் தொடர் மாடிக் கட்டிடத்தில் உள்ள ஒவ்வொரு வீட்டின் முன்னும் அவனைப் பற்றிய விபரங்கள் அடங்கிய துண்டுப் பிரசுரத்தை வைத்து விடுகின்றனர். மறு நாள் அதனை அனைவரும் வாசிக்கும் போது பொருட்கள் கூவி விற்பதற்கு பயன்படுத்தும் ஒலி வாங்கி மூலம் அவனைப் பற்றி ஒலிபரப்புகின்றனர். அவனது மனைவி காலையெழுந்து இவ் விடயங்கள் எதுவும் தெரியாமல் முன்னறையில் இருந்த போது ஒரு சிறுவன் கதவைத் தட்டி ஒரு கவரைக் கொடுக்கின்றான். திறந்து பார்த்தால் அவனைப்பற்றிய துண்டுப் பிரசுரம் அத்துடன் அவன் வீட்டில் இருந்து எடுக்கப்பட்ட துப்பாக்கி.

1990களில் துருக்கிய அரசு குர்தீஸ் மக்கள் வாழும் மாநிலங்களில் அவசரகாலச் சட்டத்தை அமுலுக்கு கொண்டுவந்தது. பல குர்தீஸ் ஊடகவியலாளர்கள், அரசியல் தலைவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். கொல்லப்பட்டவர்களின் பிள்ளைகள் அனாதைகளாக வீதிக்கு வந்தனர். வயிற்றுப் பிழைப்புக்காக பல்வேறுபட்ட நடிவடிக்கைகளில் ஈடுபட்டனர். போதை மருந்து, களவு, கடத்தல் போன்ற பல குற்றச் செயல்களில் ஈடுபட்டனர். 2006ல் DIYARBAKIR நடைபெற்ற பொது வேலை நிறுத்தத்தின் போது அந்நகர மக்கள் வீட்டை விட்டு வெளியே வரவில்லை. நகரத்து வீதிச் சிறுவர்களே வாகனங்களை நிறுத்தி வேலை நிறுத்தம் பற்றிய பிரச்சாரத்தை பரப்பினர்.

இப்படத்தில் வீதிச் சிறுவர்களின் வாழ்வில் ஏற்படும் மாற்றங்கள் பதிவாக்கப்பட்டுள்ளது. படிப்படியாக இவர்கள் குற்றச்செயல்களுக்குள் எவ்வாறு தள்ளப்படுகின்றார்கள் என்பதை இயக்குனர் வெளிப்படுத்தியுள்ளார். ஒரு இரவு இவர்கள் குளிருக்கு நெருப்பை பற்றவைத்து விட்டு குளிர் காய்ந்து கொண்டிருந்த போது பொலிஸ் வாகனம் ஒன்று அங்கு வருகின்றது. ஒளிந்து நின்று பார்த்த போது பெரும் பொட்டலங்களை புதருக்குள் எறிகின்றனர். அவர்கள் சென்ற பின் பார்த்த போது அவை இறந்தவரின் உடல்கள். ஒரு சில காட்சிகள் மூலமே குர்தீஸ் சமூகம் எதிர் நோக்கிய சந்தித்த கொடூரத்தை இயக்குனர் பதிவாக்கியுள்ளார். எண்ணிக்கைகள் பல்லாயிரமாக இருக்கலாம் ஆனால் பல நாடுகளில் நடைபெற்ற படுகொலைகள் போல் இங்கும் நடைபெற்றுள்ளன. அநாதைகளாக்கப்பட்ட சிறுவர்களை கவனித்துக் கொள்ள வேண்டிய துருக்கிய அரசு குர்தீஸ் சிறுவர்கள் என்பதனால் பாராமுகமாயுள்ளது. இலங்கையிலும் இந்நிலையே காணப்படுகின்றது.

இப்படத்தின் இயக்குனர் (Miraz Bezar) மிரழ் பேசர் இயக்கிய முதல் முழு நீளப் படமிது. இவர் இதற்கு முன் பல சர்வதேச திரைப்பட விழாக்களில் திரையிடப்பட்ட குறும் படங்களை இயக்கியுள்ளார். இப்படத்தை படமாக்கிக் கொண்டிருந்த போது பணப்பற்றாக் குறையினால் இயக்குனரின் தாய் தனது வீட்டை விற்று கொடுத்த பணம் மூலமாக படப்பிடிப்பு முடிக்கப்பட்டது. இயக்குனர் தனது ஒன்பதாவது வயது முதல் ஜேர்மனியில் வாழ்ந்து வருகின்றார். தனது மக்களின் துயரறிந்து அங்கு சென்று இரண்டு வருடங்கள்; வாழ்ந்த பின்னரே இப்படத்தை எடுத்துள்ளார்.

இன்று கற்களை எறியும் சிறுவர்கள் நாளை துப்பாக்கி தூக்குவதற்கு தயங்கமாட்டார்கள் என இயக்குனர் ஒரு செவ்வியின் போது குறிப்பிட்டுள்ளார். பாதிக்கப்பட்ட சிறுவர்களின் உலகத்தை உலகம் பார்த்து மவுனிக்கின்றது. அந்த நிலை குர்தீஸ் சிறுவர்களுக்கு வரக் கூடாது என நினைத்தே படத்தின் முடிவில் கொலையாளியை (ஒரு பரா இராணுவ வீரர்) வன்முறையற்ற முறையில் அம்பலப்படுத்தியுள்ளேன் என இயக்குனர் மேலும் அச் செவ்வியில் குறிப்பிட்டுள்ளார்.

இதனை உறுதிப்படுத்துவது போல் வெளிவந்துள்ள படம் பிரைவேட். இலங்கையில் போர் நடைபெற்ற காலங்களில் இச் சம்பவம் சாதாரணமானது. திடீரென இராணுவம் உங்கள் வீட்டிற்கு வரும். சில நிமிடங்களில் உங்களது வீடு இராணுவத்தின் வசமாகிவிடும். நீங்கள் அகதியாகிவிடுவீர்கள். பாலஸ்தீனத்தின் மேற்கு கரையோரப்பகுதிகளில் இவ்வாறு ஒரு வீட்டில் நடைபெற்றது. நடுத்தரக் குடும்பம். பொதுவாக தங்கள் குரல்கள் வெளித்தெரியாமல் வாழ விரும்புகின்றவர்கள். இவர்களிடம் காலையில் கொமாண்டர்; ஒரு விண்ணப்பத்தை கூறுகின்றார். "நீங்கள் கீழ்த்தளத்தில் தங்கலாம், இல்லையேல் வீட்டை விட்டு வெளியேற வேண்டும்". வீட்டின் தலைவர் வீட்டில் கீழ்த்தளத்தில் தங்க சம்மதிக்கின்றார். தனது சொந்த வீட்டிலேயே தாங்கள் எங்கு தங்குவது என்பதை அத்து மீறிய இராணுவம் தீர்மானிக்கின்றது. அடுத்து கொமாண்டர் கூறியது ஒரு அதிரடி "சூரிய அஸ்தமனத்தின் போது கீழ்த்தள வரவேற்பறைக்குள் நீங்கள் அனைவரும் செல்ல வேண்டும், மறுநாள் சூரிய உதயத்தின் போது தான் வெளிவரவேண்டும். மேல் தளத்திற்கு நீங்கள் எக்காரணம் கொண்டும் செல்ல முடியாது. மீறினால் தண்டனை உண்டு" இவர்களது வீட்டில் இருந்து, 15அடி தூரத்தில் புதிய குடியிருப்பு ஒன்று

அமைய இருப்பதனால் இந்த வீட்டில் இருந்து கண்காணிக்கவே இந்த வீட்டை ஆக்கிரமித்துள்ளது.

ஒவ்வொரு இரவும் ஒரு யுகமாக செல்கின்றது. ஒரு நாள் இரவு மேல் தளத்தில் இருந்து துப்பாக்கி சூட்டுச் சத்தம் கேட்கின்றது. பாலஸ்தீனிய குடியிருப்பு பகுதியை நோக்கி சுடுகின்றார்கள். இவர்களது கீழ்த்தள அறையை இராணுவம் பூட்டிய பொழுது சிறுமி மாத்திரம் தவறுதலாக அடைபட்டு விடுகின்றாள். மறு நாள் காலை வரை அச் சிறுமி தனிமையிலும், பயத்திலும் திணறுகின்றாள். இதற்கு அடுத்த நாள் சிறுமி நித்திரையின்றி பெற்றோருடனேயே இருக்கின்றாள்;

இவர்களது வீட்டுக்கு எவரும் வர அனுமதியில்லை. தனித் தீவு போன்று பயத்திலும், வெறுமையிலும், ஏமாற்றத்திலும் வாழ்கின்றனர். இங்கு தந்தை எடுக்கும் முடிவுகளே இறுதியானவை. தந்தை வீட்டை விட்டு வெளியேறுவது தன்னையும் தனது குடும்பத்தையும் அகதியாக்கி விடும் என கருதுகின்றார். ஆக்கிரமிப்பாளர்களது தந்திரங்களும் கோட்பாடுகளும் இவ்வாறான ஆக்கிரமிப்புக்கள் மூலம் மக்களை களைப்படையச் செய்து அடிபணியச் செய்தல் என நினைக்கின்றார். எனது மண், எனது மக்கள், எனது வீடு என்பவற்றை விட அவர்களது அணுகுமுறைக்கு எதிராக எதிர்க்க வேண்டும் என முடிவெடுக்கின்றார். சில சமயங்களில் தாழ்ந்து போவது போல் செயற்பட்டாலும் இறுதிவரை உறுதியுடன் உள்ளனர். தாய்; இவற்றை பற்றியெல்வலாம் கவலைப் படாமல் தனது பிள்ளைகளுக்கு இந்தச் சூழல் ஏற்றதல்ல. வீட்டை விட்டு வெளியேற வேண்டும் என விரும்புகின்றார். மூத்த மகள் 18ஐ தொடும் வயது. தந்தையின் தீர்மானத்தில் உறுதியாக இருக்கின்றார். அரசியலை உணர்ந்து, புரிந்து, கொள்ளும் பருவம். அவர்களை எதிர்க்கின்றார். அடுத்த இரு பையன்கள் 13-16 வயதிற்குள் இருக்கும். ஒருவர் ஒதுங்க விரும்புகின்றார். மற்றவர் எதிர்க்க விரும்புகின்றார். வீட்டுக்கு வெளியில் இவர்கள் அமைக்கும் கூடாரத்திற்கு அருகில் டைனமைட்டை புதைத்து வைக்கின்றார். இஸ்ரேலிய இராணுவம் வெளியில் உலாவும் போது இறக்க வேண்டும் என்பதற்காக. வீட்டிற்குள் இருந்து கொண்டே இந்த குடும்பத்தினர் தங்களது எதிர்ப்பை படிப்படியாக வளர்க்கின்றனர். சிறுவர்களை போராளிகளாக அரசே மாற்றுகின்றது என்பதற்கு இப் படம் ஒரு சிறந்த உதாரணம். ஈரானிய படங்கள் போன்று சிறுவர்களை சிறுவர்களாகவே காட்டும் மற்றொரு படம் மச்கவா.

4.

Chop Shop (2007) - Directed by Ramin Bahrani

ஏன்ஞ்ல் ஒலிவிராஸ் என்ற நான்கு வயது குழந்தை அமெரிக்காவின் நியு மெக்ஸிக்கோ மாநிலத்தின் மிளகாய் தோட்டத்தில் வேலை பார்த்தது கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. புறுஸ் லோரன்ஸ் என்ற எட்டு வயது சிறுமி கடந்த மூன்று வருடங்களாக புளோரிடா பீன் தோட்டத்தில் வேலை பார்த்தது தெரிய வந்துள்ளது. Campbell Soup Co., Chi-Chi's Mexican restaurants, ConAgra, Costco, H.J. Heinz, Newman's Own, J.C. Penney, Pillsbury. Sears and Wal-Mart -Mart போன்ற நிறுவனங்களில் குழந்தை தொழிலாளிகள் வேலை செய்வது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் இந்த நிறுவனங்கள் 155 மில்லியன் டொலர்களை; சேமித்துள்ளார்கள். கொஸ்கோ நிறுவனம் தங்களுக்கு பொருட்கள் உற்பத்தி செய்யும் வெளி நாட்டு நிறுவனங்களின் குழந்தை தொழிலாளிகளை வேலைக்கு அமர்த்துவதை தீவிரமாக கண்காணிப்பதாக கூறுகின்றார்கள். அவர்களுக்கு பொருள் விநியோகிக்கும் உள்ளூர் வோசிங்டன் நிறுவனத்தை கவனத்திற் கொள்ளவில்லை. (இது ஒன்றும் ஆச்சரியமல்ல) ரெக்சாஸ் மாநிலத்தில் நான்கு குழந்தைகள் நாளொன்றிற்கு சுமார் 12 மணித்தியாலங்கள் வேலை செய்வது தெரியவந்துள்ளது. இதில் மிகச் சிறியவரது வயது ஒன்பதாகும். 16 வயது மெக்சிக்கோ யுவதி நாளொன்றிற்கு சுமார் 10 மணித்தியாலங்கள் 50 டாலர்களுக்காக, அமெரிக்கா - குயின்ஸ் பகுதி தொழிற்சாலையில் வேலை பார்த்துள்ளார்.

1997 ன் அறிக்கையின் படி சுமார் 290,000 சிறுவர்கள் அவ்வாண்டில் சட்டத்திற்கு புறம்பாக வேலை செய்கின்றனர்.

10 வருடங்களுக்கு முன்பாக சுமார் 100,000 சிறுவர்கள் அமெரிக்காவில் மட்டும் குழந்தை பாலியல் தொழிலாளிகளாக உள்ளனர். இவையாவும் அமெரிக்க ஊடகங்களுடாக வெளியான விபரங்கள்.

நியு யோர்க் நகரத்தின் ஐந்து பகுதிகளுள் (Manhattan, Bronx, Brooklyn, Queens. Staten Island) ஒரு பகுதி Queens- இராணி. 56 வீதமான இப்பகுதி மக்கள் வெள்ளையரல்லாதவர். இப்பகுதி வறுமைக் கோட்டின் கீழ்; வாழ்பவர்களை பெருமளவு கொண்டது. 2007 ன் கணக்கெடுப்பின் படி மொத்த நியு யோர்க் மாநிலத்தில் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்பவர்கள் 13.7 வீதம், இதில் குயின் பகுதியில் மாத்திரம் 12 வீதமானோர் வாழ்கின்றனர். மன்காட்டன் பகுதியில் உள்ள அதி உயர் கட்டிடங்கள் இப் பகுதியை உலகத்திலிருந்து மறைத்துவிடுகின்றது. உலகத்திற்கெல்லாம் அரசன் அமெரிக்கா. குழந்தை தொழிலாளிகள் பற்றி மூன்றாம் உலக நாடுகளை திட்டி தீர்க்கின்றது அமெரிக்கா. குழந்தை போராளிகள் பற்றியும் பொங்கி எழுகின்றது. தனது நாட்டில் தனது நிழல் நகர் நியு யோர்க்கில் பற்றி எரியும் குழந்தைகளைப் பற்றி கவலை கொள்ளவும் இல்லை, கவனத்தில் எடுக்கவும் இல்லை.

நியுயோர்க்கின் குயின் புறுக்கிளின் பகுதிகளில் காலை நேரங்களில் குழந்தைகள் "கடின வேலை சப்பாத்து" அணிந்து வீதியோரங்களில் நிற்பதைக் காணலாம். அங்கு வரும் வாகனங்கள் இவர்களை நாட் கூலி வேலைக்கு சுற்றுப் புறத்தில் உள்ள தொழிற் சாலைகளுக்கு அழைத்துச் செல்கின்றன. இது நாள் தோறும் காணும் காட்சி.



இவ்வாறு ஒரு நாள் வேலைக்கு காத்து நிற்கின்றான் 12 வயது அலி என்றலத்தீன் அமெரிக்க தோற்றத்தைக் கொண்ட சிறுவன்.

மெல்லிய தோற்றத்தைக் கொண்ட சுறுசுறுப்பான சிறுவன். இவனது நண்பன் ஒருவன் மூலம் இவனுக்கு ஒரு வாகனம் திருத்துமிடத்தில் வேலை கிடைக்கின்றது. அதே வேலைத்தளத்தில் மேல் உள்ள ஒரு சிறிய அறையில் இவன் தங்குகின்றான். இவனது 16 வயது சகோதரிக்கும் பாதுகாப்பான இடம் தேவை என்பதனால் இதனை தேர்வு செய்கின்றான். வாகனம் திருத்துவதை விட வேறும் இரு இடங்களில் வேலை பார்க்கின்றான். சுரங்க இரயில் நிலையங்களில் பொருட்கள் விற்பது, சட்டத்திற்கு மாறான வீடியோ பிரதிகள் விற்பது போன்றனவும் இவனது நாளாந்த வேலைகள். இவனது சகோதரி ஒரு துரித சாப்பாடு விற்பனை வண்டியில் வேலை பார்க்கின்றார். ஆனாலும் இவளது நடவடிக்கைகள் சில இவனுக்கு புதிராக உள்ளது. ஒரு பழுதடைந்த துரித உணவு விற்பனை வண்டியை சுமார் 4,500 டொலர்கள் கொடுத்து வாங்கு கின்றான். இதனை இவனது நெருங்கிய நண்பனே ஏற்பாடு செய்கின்றான். உழைத்து இதனை திருத்தி வியாபாரம் செய்ய வேண்டும் என்பதே இவனது கனவு. அலிக்கு வாகனத்தை பழுது பார்க்க முடியும், சகோதரிக்கு சமைக்கத் தெரியும். இருவரது கனவும் இது தான். மற்றொரு வாகனம் திருத்தும் நிலைய முதலாளி இந்த வாகனத்தைப் பார்த்து விட்டு இதனை திருத்த சுமார் 10,000 டாலர்களுக்கு மேல் செலவாகும் எனக் கூறுகின்றார். கோபமடையும் அலி அடித்து விடுகின்றான். அலியின் சகோதரி இரவு நேரங்களில் பாலியல் தொழிலிலும் ஈடுபடுகின்றாள். இது அலிக்கு தெரிய வருகின்றது. அவ்வப் போது சிறு களவுகள் செய்த அலி பெண்களின் பணப்பையை பறித்தல் என அடுத்த கட்டத்தை நோக்கி நகர்கின்றான். இருவருக்கும் மற்றவரது உண்மை தெரிய வர யதார்த்த உலகை நோக்குகின்றனர்.

இது தான் யதார்த்தம். அலிக்கு தன்னைப்பற்றி உண்மைகள் தெரியும் என்பது சகோதரிக்குத் தெரியும். சகோதரிக்கு தான் செய்யும் களவுகள் தெரியும் என்பது அலிக்குத் தெரியும். படத்தின் முடிவில் இருவரது புன்னகையும் அதனை வெளிப்படுத்துகின்றன. என்ன செய்ய முடியும்? அன்றாட வாழ்விற்கு தொடர்ந்து போராடத்தான் வேண்டும். யதார்த்தவாத படம் இது. இப்படத்தில் காட்டப்படும் இடம் உண்மையானது. (Willets Point) களம் அமெரிக்க ஹொலிவூட்டிற்கு புதிது. படத்தில் வரும் காட்சிகள் உண்மையானவை. வாகனம் திருத்தும் நிறுவன முதலாளியாக நடிப்பவர் உண்மையில் ஓர் முதலாளி. வாகனங்களை களவெடுத்து உதிரிப்பாகங்கள் விற்கும் இடம் என்பதே படத்தின் தலைப்புக்கான விளக்கம். இன்றும் இவ்விடத்திற்கு சென்றால் இப்படத்தை காணலாம். (படத்தில் வரும் காட்சிகளை) முதலாளி நாள் முடிவில் சம்பளம் தரும் பொழுது பணத்தை எண்ணக் கூடாது. அவர் சென்ற பின்னரே எண்ண வேண்டும். இது உண்மையில் அப்பகுதியில் அப்படித்தான் நடைபெறு கின்றது. இதனை தான் நேரில் பல தடவைகள் கண்டதாக இயக்குனர் பேட்டி ஒன்றில் கூறியுள்ளார்.

இப் படம் படமாக்கப்பட்ட இடத்தில் இருந்து நியு யோர்க் மெட்ஸ் பேஸ் போல்; ((New York Mets- Base Ball)) போட்டிகளை தூரத்தே தெரியும். இல்லையெனில் இரசிகர்கள் போடும் கூப்பாடு கேட்கும். இதன் விளம்பரப் பலகையில் மிகப் பெரியதாக "Make dreams happen" . என்ற வாசகங்கள் பளபளக்கும். யாருடைய கனவுகள் பலிக்கும்? இவ்விடத்தில் மாலை நேரங்களில் ஆசிரியர்கள் மற்றும் அதிகாரிகள் வந்து செல்வார்கள். இங்கே வேலை பார்க்கும் சிறுவர்களை அரசும் அறியும் குடியும் அறியும். இவர்களுக்கான விடிவு எதுவுமற்றது. இதனை அப்போதைய நியு யோர்க் நகர மேஜர் "the bleakest point of New York" (மிகவும் கடினமான) எனக் குறிப்பிட்டுள்ளார்.

சகோதரி பாலியல் தொழில் செய்வதை அறிந்த அலி தான் சேர்த்து வைத்திருந்த பணத்தை ஒளித்து வைத்திருந்த இடத்தில் இருந்து எடுத்து, அவள் வேலை பார்க்கும் வண்டிக்கு சென்று "உனக்கு பணம் தேவைப் பட்டால் வைத்திரு" எனக் கூறி கொடுத்து விட்டுச் செல்கின்றான். அச் சிறுவனின் உலகத்தில் அவனுக்குத் தெரிந்த விடை அது. இவர்களுக்கிடையிலான அன்பு அலாதியானது. விளையாடும் பொழுது, தூங்கும் பொழுது, ஓடி, ஓடி வேலை செய்யும் தனது தம்பிக்கு என தான் வேலை பார்க்கும் இடத்தில் இருந்து சாப்பாடு எடுத்து, தம்பி வண்டியை கடந்து செல்லும் பொழுது கவனித்து கொடுத்து "முழுதையும் சாப்பிடு" என இவர்களது பாசத்தை கவித்துவ மாக்கியுள்ளார் இயக்குனர். இவர்களது பெற்றோர் யார், பிறந்த இடமெது. எதுவும் பார்வையாளர்களுக்குத் தெரி யாது. தேவையுமற்றது. அவர்களது வாழ்வின் கொடூரங்கள் பல லட்சம் அமெரிக்க சிறுவர்களின் வாழ்வை வெளிப் படுத்துகின்றது. படத்தைப் பார்க்கும் பொழுது இது இரு சிறுவர்கள் பற்றிய படம் என்பதற்கு அப்பால் அவர்கள் பிண்ணனியையும் தேட தூண்டுகின்றது. இயல்பான எளிய சிக்கலற்ற திரைக்கதை. அமெரிக்காவில் பிறந்து ஈரானில் சில காலம் வாழ்ந்த இயக்குனர் ரமின் பகாரானி நவீன ஈரானிய இயக்குனர்களால் கவரப்பட்டுள்ளார். "நான் பெரும்பாலானவர்களைப் பற்றித்தான் படங்களை படைக் கின்றேன். ஹொலிவூட்டைப் போன்று கனவுலக மக்களின் விடயங்களை படைக்கவில்லை" எனத் தெளிவாக இயக்குனர் பேட்டி ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.


படம் பார்வையாளர்களை சிந்திக்க வைக்கும் வகையில் பல கேள்விகளை பார்வையாளர்களிடம் விட்டுச் செல்கின்றது. அமெரிக்கா,? குழந்தை தொழிலாளர்களை தடுக்கும் சட்டங்கள் என்ன செய்கின்றன? அமெரிக்காவின் மையத்தில் பலரும் அறியும் பகுதியில் நடக்கும் சட்ட மீறல் கள் மீது ஏன் நடவடிக்கை எடுக்கப்படவில்லை?. இதனை நுகர்வோர் பெரும் முதலாளிகள். இவர்கள் தான் அரசு. ஊடகங்களிலும், நீதிமன்றங்களிலும் பெட்டிச் செய்தியுடனும், சில ஆயிரம் அபராதங்களுடனும் தொடரும் சட்ட மீறல் களை சட்டங்களும் ஊடகங்களும் பாதுகாத்து வருகின்றன (பெட்டிச் செய்திகள், அபராதங்கள்) யார் யாருக்கு காவல்?

*5*

ஈரானிய, லத்தீன் அமெரிக்க சிறுவர்கள் படங் களில் காட்டப்படும் சிறுவர்கள் தங்களது அக உணர்வு களுடன் நெருக்கமாகவேயுள்ளனர். மேற்கத்திய சிறுவர் களின் படங்கள் சிறுவர்களின் அக உணர்வுகளுடன் முரண்பட்டு நிற்கின்றன. தங்களது எதிரிகளின் மீது நுகர் வோருக்கு எதிர்ப்பலையை, தங்களது குற்ற உணர்வை அவர்கள் மீது சுமத்துவதன் மூலம் ஏற்படுத்துகின்றனர். காப்பியங்கள் கூட சிறுவர்களின் உணர்வுகளைப் பற்றிய அக்கறையின்றி பெரியவர்களின் நீதியையே பேசுகின்றது. அதன் வழியில் தோன்றியுள்ள சினிமாவும் அதன்வழி யிலேயே செல்கின்றது. ●

# நிலைமாறு யுகம்

■ ச.திருச்செந்தூரன் ■



முற்காலம்...
இற்றைக்கு
சுமார் – ஆறுவருடங்கள்
கடந்து போயிருக்கும்...

மொன்னைச் சமூகத்தின்
உண்மையான இனத்தவனின்
அர்ப்பணிப்பு
ஆகுதியாக்கப்பட்டு...

நிறமான
கண்ணகிகள்
ஒருவனுக்கு ஒருத்தி...
காலாவதியாக்கப்பட்ட நேரம்...
அவள்களின்
பதுங்கு குழிகள்
பற்றை மறைப்புக்களையும் தாண்டி...
ஆழ ஊடுருவும் படைகளால்
ஊடுருவப்பட்டிருந்தன...

தூசு படுவதற்காய்
புதிதாக இறக்கப்பட்ட
வெள்ளை வான்கள்
தெருவெங்கும்
ஓடி
வெள்ளோட்டம்
பார்த்தது...
எதற்கோ...

ஏற்றப்பட்டவர்களின்
வாழ்க்கைச் சுற்றுலா விசா...
பிழை என்று சொல்லி....
முக்தியின்பம்
தொடுக்கப்பட்டது...

வீடுகளிற்குள்
புகுந்த
கடினச் சப்பாத்து...
பேடுகளிற்கு முட்டை
கொடுத்தது...
சேவல்களை சிவலோகம்
அனுப்பியது...
முட்டை கொடுக்க
வசதியாய்...

நடந்ததை எழுதிய
பேனைகள்
முறிக்கப்பட்டன...
சிலவை
குமிழ் உடைக்கப்பட்டன...
காலங்கள் கடந்தன
தற்காலமாயின...
ஆறுவருடங்கள்
கடந்து கொண்டது...

பதினாறிற்கு வந்தோம்
வயதுகளாலும்...
கிழவிகள் கட்டைச் சட்டையுடன்
குமரிகளானார்கள்
அப்ப...
குமரிகளின் சட்டைகள்
பற்றி
தனிக்கை...

இளைஞர்கள் பாவம்
புத்தகம் தூக்க
பயப்பட்டார்கள்...
உள்ளிருப்பது
கைக்குண்டோ
வெடிகுண்டோ
எனப்பயந்து...


பீடி...
சிகரெட்...
வைன்...
பியர்...
ஸ்டவுட்...
விஸ்கி...
பிரண்டி
டைமன்
இவை
அறிதலும் வாசிப்புமாயின...
பண்பாட்டு மூலவரின்
சமூகத்தில்...
பாடசாலை மாணவரிடம் கூட...


கணவனின் மனைவி
மனைவிகளானார்கள்...
பல இடங்களில்
கணவனும்
கணவன்களானார்கள்...
சில வீடுகளில்
வாடகைக்கு வந்த
ஆட்டோ...
நிலையாக இருந்து கொண்டது...
என்னத்தைச் சொல்ல...
இதுவும் எனது
மொன்னைச் சமூகத்தின்
விளையாட்டுத்தான்...
சிலவை
சிலவர்களால்
சிலவற்றிற்காய்
அனுப்பி
வைக்கப்பட்டன...
நாமும்
அதை
அப்படியே ஏற்றோம்...
கேட்காமலே...

அகமகிழ்ந்து
அதுவாகவே மாறினோம்...
அனுப்பியவர்
மகிழ்ந்தார்...
இனிச்சரியென்று
பிழைத்துக் கொண்டது
இப்பொழுது வெளியில் அவர்...

தென்னை மரங்களுக்குள்
ஒளிந்து உள் வந்தவரும்
அதுதான்
ப்ளேன் போலும்...
பார்ப்போம்...
எம்மவர்களும்
இல்லாமல்
போகின்றனரோ
என்று...

இ.சு.முரளிதரன்





# வடமராட்சி வட்டார மொழியில் தமிழ் சினிமாவின் தாக்கம்

கருத்துப்பரிமாற்ற ஊடகமாகவும், சமூகக் குழுமங்களின் தனித்துவமான அடையாளங்களில் ஒன்றாகவும் மொழி இனங்காணப்படுகின்றது. மனிதர்களின் சமூக, அரசியல், புவியியல், வரலாற்றுப் பின்புலங்களுக்கு அமைவாக மொழிக் கட்டுமானமும் வேறுபட்டமைகின்றது. ஈராயிரம் அகவைக்கும் அதிகமான வரலாற்றுப் பின்னணியை கொண்டமைந்த தமிழ்மொழிக்கு பல்வேறுபட்ட தனித்துவங்கள் எடுத்துரைக்கப்படுகின்றன. எண்ணற்ற அதிகார மேலாண்மைகள் தமிழிலே செல்வாக்குச் செலுத்தியதால் பன்முக மொழிகளுக்கிடையேயான பரஸ்பர பரிமாறுதல்களின் நீட்சியில் பூரண மொழித் தூய்மை குறித்த கருத்தியலை முன்னெடுப்பது சாத்தியமற்றது. காலச்சுழற்சிக்கமைய நெகிழ்ந்து கொடுப்பினும் ஒவ்வொரு மொழிக்கும் தனித்துமான அடையாளங்கள் இருக்கவே செய்கின்றன என்பதை மொழியியல் ஆய்வுகள் மெய்ப்பித்து வருகின்றன. பெருநிலப் பிரதேசமொன்றின் புழங்குமொழி உட்புல வட்டாரங்களில் தன்னியல்பில் நுண்மாறுபாடுகளைக் கொண்டமைகின்றது. இந்த வகையில் ஆழத்திலே யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, கொழும்பு, மலையகம், முதலிய இடங்களில் தமிழ்மொழி மாறுபட்ட பேச்சு வழக்கினை வெளிப்படுத்துகிறது. யாழ்ப்பாணத்திலும் வடமராட்சி, தென்மராட்சி, தீவகம், வலிகாமம் போன்ற வட்டாரங்களில் நுண்ணிய மாற்றங்களை இனங்காண முடியும். யாழ்ப்பாண பேச்சுத்தமிழின் இலக்கணப் புனிதம் பற்றிய கருத்தியலும் சற்று உயர்வு நவிற்சி சார்ந்த விடயமாகவே கொள்ளத்தக்கது. வடமராட்சியின் வட்டார வழக்குக் கட்டுமானத்தில் தென்னிந்திய சினிமா பெருந்தாக்கத்தினை நிகழ்த்தி வருகின்றது. “தென்னிந்தியாவில் தவறிவிட்டார் என்ற சொல் இறந்து விட்டார் என்ற பொருளை உணர்த்துகிறது. இதே சொல் யாழ்ப்பாணத்திலே பிழை செய்து விட்டார் என்ற பொருளில் வழங்கப்படுகிறது” என்று ஈழத்துப் புனைகதைகளில் பேச்சு வழக்கு என்ற நூலிலே(பக்கம் 78 முதற்பதிப்பு 1986) சி. வன்னியகுலம் குறிப்பிட்டுள்ளார். இன்று யாழ்ப்பாணத்தில் தவறிவிட்டார் என்பது இறந்து விட்டார் என்ற பொருளை உணர்த்தும் நிலைக்கு தென்னிந்திய சினிமா காரணமாகியுள்ளமை சுட்டிக் காட்டத்தக்கது.

போராளிகளின் கட்டுப்பாட்டில் வடமராட்சி இருந்த காலத்தில் சினிமா மீள் தணிக்கைக்கு உட்படுத் தப்பட்டது. பின்னர் முற்றாகத் தடைசெய்யப்பட்டது. அக்காலத்தில் மாணவரிடையே “அந்தமாதிரி”, “மணியாயிருக்கு” என்னும் பேச்சு மொழிகள் முகிழ்த்துப்

பரவலடைந்தன. தற்போது "சட்டப்படி" என்பது அதிகளவிலே பயன்படுத்தப்படினும், ஈழத்தின் கிழக்குப் பிரதேசத்திலிருந்து கடனாகப் பெற்ற பேச்சு வழக்கு என்பதனை மனங்கொள்ள வேண்டும். நான் க.பொ.த.உயர் தரம் கற்ற காலத்திலே சக மாணவர்கள் அழகான பெண்களைச் சுட்டுவதற்கு "சரக்கு" "மூஸ்" என்னும் பதங்களைக் கையாள்வர். "மூஸ்" வழக்கிழந்து போக, "சரக்கு" என்பது சினிமாவின் தாக்கத்தால் மதுபானத்தையும் குறிப்பிடுமளவிற்கு மாற்றங்களைக் கண்டு விட்டது. யாழ். பல்கலைக் கழகத்திலே பயின்ற பருவத்திலே, வளாக சூழலின் பழங்கு மொழி தொற்றிக் கொள்ள வடமராட்சியின் வட்டார வழக்கிலும் அதன் தாக்கத்தினை உணர முடிந்தது. பலபெண்களை ஏமாற்றும் வல்லமை படைத்தவனை "மாதா" என்றும், பெண்களை வசப்படுத்தி உரையாடுதலை "வாளி வைத்தல்" என்று குறிப்பிட்டு பேசி மகிழ்ந்தனர். தமிழ் சினிமாவின் தாக்கத்தால் பெண் களை வசப்படுத்தி உரையாடுவதற்கு "கடலை போடுதல்" என்ற தொடரே அதிகம் கையாளப்படுகிறது. வால்பிடித்து காரியம் சாதித்தலை "வாளி வைத்தல்" குறிக்கும் அளவிற்கு திரிபடைந்துவிட்டது.

வடமராட்சியின் வட்டார வழக்கு மொழி நுட்பமான மாறுபாடுகளை வெளிப்படுத்தி நிற்பதை பல தருணங்களில் உணர்ந்திருக்கிறேன். கரணவாய் தெற்குப் பிரதேசத்தில் "தேக்கங்காய்" என்று சொல் வதை வல்வெட்டித்துறையிலே "கத்தோங்காய்" எனவும், இங்கே "எள்ளுப்பாகு" என்பதை அங்கே "எள்ளுப் புண்ணாக்கு" எனவும் குறிப்பிடுவர். கரணவாய் தெற்கில் "ரியூசன்" என்ற ஆங்கிலப் பதத்தையே தனியார் கல்வி நிறுவனத்திற்கான பேச்சு வழக்காக கையாள்வர். ஆனால் வல்வெட்டித்துறையில் "பாடத் திற்கு போகிறோம்" என்றே உரைப்பர். வடமராட்சிப் பிரதேச மொழியில் "பின்னேரம் வாறன்" என்று குறிப்பிடுவோம். வரணியிலுள்ளோர் "மாலைக்கே வாறன்" எனச் சொல்லுவர். இத்தகைய நுட்பமான பன்முக வேறுபாடுகளைத் தன்னகத்தே கொண்டமைந்த பிரதேச வழக்கு அண்மைக்காலமாக சினிமாவின் ஊடுருவலால் சிதைந்து வருகின்றது.

வடமராட்சி வலயக் கல்விப்பணிமனை ஒழுங்கமைத்த தமிழ்மொழி சார்ந்த பயிலமர்வு ஒன்றிலே பங்கேற்ற போது, சக ஆசிரியை ஒருவர், நண்பர் பரா. ரதீஸிடம் பிறிதொரு ஆசிரியையின் பெயரைக் குறிப்பிட்டு "அவ எப்பிடி உங்கள கலாய்ப் பாவா?" என்று கேட்டார். கலகலப்பான சுபாவங் கொண்டவர் நண்பர் பரா. ரதீஸ், "அவவுக்கு வயது கூடத்தானே? அவ கலைச்சாலும் என்னை பிடிக்கே லாது. நான் ஓடியிடுவேன்" என்று மொழித்திரிபுக் கிண்டலை வெளிப்படுத்தினார். இயல்பான பேச்சின் போது தமிழாசிரியையிடம் "கலாய்த்தல்" என்ற சினிமாவின் புழங்கு மொழி வெளிவருமாயின் மாணவர்கள் குறித்து அதிகம் சொல்லத்தேவையில்லை.

தனியார் கல்வி நிறுவனமொன்றிலே ஒன்பதாம் தரத்தைச் சேர்ந்த மாணவன் ஒருவன் "Sir என்ர செருப்பை ஆரோ ஆட்டையைப் போட்டுட்டாங்கள்" என்றான். திருட்டு என்னும் கருத்தினை வெளிப்படுத்த "ஆட்டையைப் போடுதல்", "சுடுதல்" போன்றனவற்றை வெகு சாதாரணமாக மாணவர்கள் பயன்படுத்த தமிழ் சினிமாவே பிரதான பின்புலமாகும். இதேபோல தரம் இரண்டிலே படிக்கும் மாணவன் ஒருவன் சக மாணவனை "போடா கொய்யா இலை" என்றும் திட்டியிருக்கிறான். "போடாங் கொய்யால" என்ற தமிழ் சினிமாவின் கொச்சை மொழியினையே பள்ளிச் சிறுவன் "கொய்யா இலை" என தவறாகப் புரிந்து கொண்டிருந்தான்.

வடமராட்சி நல்லொழுக்க நிறுவனம் பருத்தித் துறை பிரதேசப் பாடசாலைகளுக்கிடையே போதைப் பொருள் விழிப்புணர்வை ஏற்படுத்தத் தொடர் விவாத அரங்கினை முன்னெடுத்தது. அதன் அமர்வொன்றிலே விவாதித்த கல்லூரி மாணவி ஒருத்தி "இப்பவெல்லாம் பாடசாலை மாணவர்கள் கூட டாஸ்மாக் கடைகளில் நிற்கிறார்கள்" என்று குறிப்பிட்டார். எமது பிரதேசங்களி லுள்ள மதுபானக்கடைகளை டாஸ்மாக்(Tasmac) என்று குறிப்பிடுதல் எவ்வகையிலும் பொருத்தமற்றது. Tasmac என்பதில் Ta – Tamil, S - State, Ma – Marketing, C-Cooperation என விரிவாக்கம் பெறுவதை உணராத நிலையிலேயே அம்மாணவி அவ்வாறு எடுத்துரைத்தார். தமிழ்த் திரைப் படங்களைப் பார்த்துப் படியெடுத்ததன் விளைவையே அவ்வார்த்தைப் பிரயோகத்திலிருந்து உணர முடிந்தது.

தமிழ்சினிமாவின் தாக்கத்தினை ஆங்கில மொழி உச்சரிப்பிலும் இனங்காண முடிகிறது. "பாம் வைத்தல்" "டைரக்ஷன்" "மாரேஜ்" "டைவேஸ்" "காமடி" என்ற தென்னக வழக்கிலே உச்சரிக்கும் இளையவர் களை சினிமா உருவாக்கி வருகிறது. முகநூல், இணைய அரட்டை, கைபேசி உரையாடல் என்பன மேலும் அழுத்தம் கொடுக்க இயல்புமொழி மாறுதலுக்கு உள்ளா கின்றது. அகிலமயமாக்கல் மொழியில் ஒருமைத் தன்மையை உருவாக்கும் எத்தனிப்பில் நயாதீதமான வட்டார வழக்குகளை சிதைக்க அதன் அங்கமான சினிமாவானது ஒவ்வாமைக்குரிய வார்த்தைகளை திணித்து ஆணிவேரையே களைய முயல்கிறது. நடிகர் களை பிரார்த்தனைக்குரிய பிரதிமைகளாக நோக்கும் மனநிலையிலிருந்து மாணவர்களை விடுவிக்க கல்விச் சமூகம் முயல வேண்டும். நல்ல சினிமாவை இனங்காண உதவுவதனூடாக இளையோரை வழிப்படுத்தலாம். அந்நிய வார்த்தைகளை இனங்காணும் புலமையினை யும், மொழிப்பற்றினையும் அவர்களிடம் கட்டியெழுப்ப வேண்டும். இல்லையெனில் "மொக்கை", "புரோ", "ஆணியே புடுங்க வேண்டாம்" என்று சினிமா வழங்கிய அருங்கொடைகளோடு உலாவுவோர், "கிட்டிப் புள்ளை", "கில்லி" என்றும், "பாணை", "ரொட்டி" என்றும் "சீனியை" "சர்க்கரை" என்றும் "மண்ணெண்ணெய்யை" "கிருஷ்ணா ஒயில்" என்றும் "சிரட்டையை" "கொட்டாங்கொச்சி" என்று உச்சரிக்கும் அபத்தம் வெகுதொலைவிலே இல்லை என்று துணிந்து கூறலாம்.

■ மூதூர் மொகமட் ராபி

# கணிதப்புலியும் கடைசி வகுப்பும்

"ஜரீத் மாஸ்டர்" என்ற பெயரைக் கேட்டால் எப்படியான ஒருவர் உங்கள் மனக்கண்ணில் தோன்றுவார்? சர்க்கஸ் கொட்டகைகளிலே கட்டுமஸ்தான உடலுடன் கையில் சவுக்குடன் நிற்கும் ரிங் மாஸ்டர் உங்கள் நினைவுக்கு வந்தால் நீங்கள் வெளியூர் ஆசாமி என்பது உத்தரவாதம்.

நிஜமான ஜரீத் மாஸ்டர் எங்கள் பதினோராம் வகுப்பு கணிதபாட ஆசிரியர். பாடசாலை அதிபரின் வலது கரமும் கூட. ஆனால் காற்று சற்றுப்பலமாக வீசினால் போதும், பறந்துவிடுவாரோ என்று சந்தேகிக் கத்தக்க மெல்லிய உடல்வாகு அவருக்கு. சாதாரண 13 சைஸ் ஸ்லிம் டைட் சேர்ட் கூட அவருக்கு "பேகி" ஸ்டைலிலேதான் இருக்கும். அவரது இடுப்பிலே ட்ரவுசர் வழுகாமல் இருப்பதை எட்டாவது அதிசயமாய் ஆக்கி னால் கூட ஆச்சரியப்பட வேண்டியதில்லை.


தூக்கிப்படிய வாரிய தலைமுடி, தொங்கு மீசை, புகைத்த சிகரட்டுகளின் வரலாறு கூறும் தடித்த கரிய உதடுகளுடன் கூடிய சற்று நீளமான முகம் அவருக்கு. அவரது கண்களிலே தன்னை விட்டால் ஊருக்குள் கெட்டிக்காரன் யாருமில்லை என்ற நினைப்பில் வாழ்ந்து கொண்டிருக்கும் திமிர் பிடித்த மனிதனுக்குரிய ஒருவித அகந்தை எப்போதும் குடிகொண்டிருக்கும்.

சரி, அவர் எப்படி இருந்தாலென்ன, நாம் விடயத்திற்கு வரலாம்.

அந்த வருட க.பொ.த சாதாரணதரப் பரீட்சைக்கு பாடசாலை மூலம் தோற்ற விருந்த எங்களுக்கு அனுமதி அட்டைகளை ஏற்கனவே வழங்கி விட்டிருந்தார்கள். அடுத்த வாரம் பொதுப்பரீட்சை ஆரம்பமாகவிருந்த நிலையிலும் எங்கள் "கணிதப்புலி" ஜரீத் மாஸ்டர் மட்டும் மேலதிக மாலை வகுப்புகள் நடாத்துவதை நிறுத்தவில்லை. எப்படியோ அன்றைய தினம் எங்களுக்குரிய அவருடைய கடைசி மாலைவகுப்பு என்று பரவலாக எதிர்பார்க்கப்பட்டது.

அதனால்தான் ஜரீத் மாஸ்டருக்கு அவர் தனது வாழ்க்கையில் என்றுமே மறக்க முடியாதபடி பாடம் ஒன்றைப் படிப்பிப்பது என்ற தீர்மானத்தோடு நானும் எனது நண்பன் நஸீரும் இந்த மாலை வகுப்புக்கு வந்திருந்தோம்.

எப்போதும் முன்வரிசையிலே அமரும் நானும் நஸீரும் வழமைக்கு மாறாக வகுப்பறை வாசலை ஒட்டியிருந்த கடைசி வாங்கில் உட்கார்ந்திருந்தோம். அதைப் பார்த்ததும் எங்கள் சக மாணவ நண்பர் களுக்கு விடயம் லேசாகப் புரிந்து விட்டது.



அவர்களிலே சிலர் பயந்தாலும் ஏதோ நடக்கப்போவதை அறிந்து அதை எதிர்கொள்ளத் தயாராகி விட்டனர். அடிக்கடி வாசலை உற்றுப்பார்த்தபடி பதற்றமாக இருந்தார்கள். பெண்பிள்ளைகள் மட்டும் எதுவும் புரியாமல் எங்கள் இருவரையும் பார்த்து தங்களுக்குள் ஏதோ சொல்லிச் சிரித்தவாறிருந்தார்கள்.

"சிரிங்கடி.. சிரிங்கடி! இன்னும் கொஞ்ச நேரத்தில நடக்கப்போறதைப் பார்க்கத்தானேடி போறீங்க... பார்த்துப் போட்டு நிண்டு சிரிங்களேண்டி பார்ப்போம்" என்று மனதுக்குள் கறுவியபடி ஜரீத் மாஸ்டர் வந்து சேரும்வரை காத்திருந்தோம். இயல்பாக இருக்க எவ்வளவு முயற்சித்தும் முடியாமல் வியர்த்துக் கொட்டியது. நாங்கள் செய்யப்போகும் காரியத்தை நினைத்து லேசான பயம் அடிவயிற்றைப் பிசைந்தாலும் அதிலுள்ள நியாயம் ஒருவித தைரியத்தை தந்து கொண்டிருந்தது. இன்று நடக்கப்போகும் சம்பவம் இதுவரை ஜரீத் மாஸ்டரால் அவமானப்பட்ட மாணவ உள்ளங்களுக்கு நாங்கள் வழங்கப் போகும் தியாகச் சமர்ப்பணம்!

இத்தனைகால பாடசாலை வாழ்க்கையில் ஒவ்வொரு வகுப்பிலும் எங்களுக்கு அவர் ஏற்படுத்தி வந்த அவமானப் படுத்தல் களையெல்லாம் உங்களுக்குச் சொல்லிப் புரியவைப்பது சுலபமல்ல. ஜரீத் மாஸ்டரின் அவமானப்படுத்தல்கள் இரண்டு

விதமானவை.

ஒன்று தன்னிடம் படிக்கும் மாணவன் கணிதத்திலே குறைவாக இருந்தால் அவனை ஏசி அவமானப்படுத்துவார். மாறாக, அவன் மிகவும் திறமை காட்டினாலோ அவனை மட்டந்தட்டியே கொல்வார். அவரின் சுடுவார்த்தைகளிலிருந்து தப்பிப் பதானால் ஒன்றில் சராசரியான திறமையுடன், "ஐயா நீங்கள் சொல்வது மட்டும்தான் சரி" என்று சலாம் போட்டுக்கொண்டு இருக்க வேண்டும் அல்லது அப்படி இருப்பதாக நடித்துக் கொண்டிருக்க வேண்டும்.

அவர் ஒரு கணக்கைப் படிப்பித்தால் அதை அவருடைய முறையில் செய்தால் மட்டுமே சரி யென்பார். வேறுயாரிடமாவது கேட்டுப் படித்து புதிய முறைகளுக்கூடாக செய்து வந்தால் கொப்பியைத் தூக்கி முகத்தில் வீசியடிப்பார்.

"ம்ஹூம்.. நீங்கல்லாம் படிச்சு..." என்று ஆரம்பித்து ஒரு நக்கல் பார்வை பார்ப்பார். அதற்கே தாரளமாய்ச் சாகலாம். "டேய், இந்தப் புது மெதட்டுல செய்யிறாக்களுக்கு ஒண்ணு சொல்றேன் கேளுங்கடா.. அதை சொல்லித் தந்தவனொளுக்கிட்டேயே போய்ப் படிங்கடா! இஞ்ச வராதிங்கடா!" என்று கத்துவார். அதற்காக வகுப்புக்கு வராமல் விட்டோமென்றால் அதிபரிடம் மாட்டிவிட்டு காலைக் கூட்டத்தில் வைத்து அவமானப்படுத்துவார்.

அவருடைய காலத்தில் அவர் கணித பாடத்தில் மிகத்திறமையான மாணவராக இருந்தவ ராம். கணிதப் போட்டிகளிலே நிறையப் பரிசுகள் பெற்றவராம் என்று பலபேர் சொல்லக் கேள்விப் பட்டிருக்கின்றோம். ஆனால் பின்னர் வந்த எங்கள் தலைமுறையின் அறிவுவளர்ச்சியையும் மாற்றுத் திறனையும் ஏற்றுக்கொண்டு மற்றவர்களுக்கும் வாய்ப்புத் தராமல் இந்தக் கணிதப்புலி வரட்டுப் பிடி வாதத்தில் உழன்று கொண்டிருந்ததை என்னவென்பது?

எங்கள் பாடசாலைக்கு புதிதாக நியமனம் பெற்ற பல திறமையான இளம் கணித ஆசிரியர்கள் வந்திருந்தும், அவர்களுக்கு வழிவிடாமல் பிடிவாதமாக இருந்தார் அவர். அங்கு எத்தனை கணித ஆசிரியர்கள் வந்தாலும் ஒவ்வொரு வருடமும் க.பொ.த சாதாரண தர வகுப்புகளுக்கு அவர்தான் கற்பிக்க வேண்டும் என்பதை ஓர் எழுதாச் சட்டமாகவே வைத்துக் கொண்டிருந்தார்.

எங்கள் பாடசாலை அதிபரும் அவருடைய காலத்து மனிதர் என்பதால் ஓஎல் வகுப்பை ஜரீத் மாஸ்டரிடமே ஒப்படைத்து விடுவார். நாங்கள் பத்தாம் தரத்தில் சித்தியடைந்து ஓஎல் வகுப்புக்கு வந்ததும் இதையறிந்து உசாராகி விட்டோம். ஏற்கனவே ஒருமுறை எட்டாம் வகுப்பில் கணிதப்புலி யிடம் மாட்டி நாங்கள் பட்டபாடு மனதில் நீங்காத வடுவாக இன்னும் இருந்தது. அந்த அனுபவத்தின் காரணத்தால் ஜரீத் மாஸ்டரிடம் படிப்பதற்கு நாங்கள் விரும்பவில்லை. ஒன்பதாம் பத்தாம் வகுப்புகளிலே எங்களுக்கு கற்பித்துவந்தவரான மற்றொரு கணித ஆசிரியரான முனாஸ் ஸேரிடமே தொடர்ந்து படிப்ப தாக நாங்கள் எவ்வளவு கூறியும் அதிபர் அதை ஏற்றுக்கொள்ளவில்லை.

நாங்கள் பிடிவாதமாக இருந்தும்கூட முனாஸ் ஸேர் வெளியூரிலிருந்து இங்கு வந்து கற்பிப்பவர் என்ற ஒரே காரணத்தை வைத்து அவரால் மாலைநேர வகுப்புகளெல்லாம் எடுக்க முடியாது என்று வாதாடி பாடசாலைக்கு அருகிலேயே வசிக்கும் உள்ளூர்வாசி யான ஜரீத் மாஸ்டர் எங்களைத் தோற்கடித்து விட்டார்.

ஜரீத் மாஸ்டர் கணிதம் கற்பிக்கும்போது எங்களின் தன்மானத்தை காயப்படுத்துவது பற்றி நாங்கள் எவ்வளவுதான் புகார் கூறினாலும் அன்றைய காலத்து "குருபக்தி" மனிதர்களான எங்கள் பெற்றவர்கள் பெரிதாக அலட்டிக்கொண்டதில்லை. அதையே தனக்குச் சாதக மாகக் கொண்டு காலத்தை ஓட்டிக் கொண்டிருந்தது அந்தக் கிழட்டுப்புலி. காலப்போக்கில் அவரது நையாண்டி யும் நக்கலும் எங்களுக்கு சிறிது பழகிப்போனது. ஆனாலும் சில விடயங்களை எங்களால் ஏற்றுக்கொள்ளவே முடியவில்லை.

"டேய் மச்சுக்குட்டி அசாம், இஞ்ச வாடா!.. டேய் சம்புராக்காட ரமீஸ், இதென்னடா எழுதி வச்சிருக்கா?.. கொத்திமுடாட பெயல் இஞ்ச வாங்க வாப்பா! கரீப் ஐயாட சம்ரி... எழும்புங்க ராசா.. கஹார்ர தறுதலை வாடா இஞ்ச".

இப்படியெல்லாம் மாணவிகளின் முன்னே எங்களது தாய் - தகப்பனது பெயர்களை தனது பாணியிலே நக்கலாக இணைத்து அவமானப்படுத்தித் தான் கூப்பிடுவார். அதாவது உள்ளூரிலுள்ள எங்கள் பெற்றோர்களில் பலர் அவரது பாடசாலைக்காலத்து சமவயதுத் தோழர்களாம். அந்த உரிமையில்தான் அப்படி அழைப்பதாக பலரும் சொல்வார்கள். ஆனால் அதைத்தான் எங்களிலே பலருக்கும் அறவே பிடிப்ப தில்லை. இதனால் பலருக்கு கணிதம் என்றாலே வெறுப்புத் தட்டிவிட்டது.

"இவருக்கு என்னடா பண்ணலாம்?"

ஒவ்வாரு வெள்ளிக்கிழமை மாலையிலும் முற்ற வெளியிலே வழமையாக நடக்கும் கால்பந்தாட்டத்தை அடுத்து ஜ. பா. ச. (ஜரீத் மாஸ்டரினால் பாதிக்கப் பட்டோர் சங்கம்) ஒன்று கூடும். ஒவ்வொரு கூட்டத் திலும் தவறாமல் இதே கேள்வி கேட்கப்படும்.

"அவர்ர சைக்கிள் டயர் ரெண்டுக்கும் ஊசியால பத்து பதினைஞ்சு பெச் அடிப்பண்டா!" என்பான் நஸீர். அவன்தான் எங்கள் வகுப்புக்கே தலைவன் போல செயற் படுபவன். நல்ல கட்டுமஸ்தான உடலும் துணிவும் கொண்டவன். படிப்பிலும் நல்ல கெட்டிக்காரன். அவனுக்கு ஜரீத் மாஸ்டர் வைத்திருக்கும் பெயர் "கப்பார்ர தெறிச்சது". கப்பார் என்பது நஸீரின் வாப்பா. பெரிய பள்ளிவாசல் தலைவர்.

"போடா இவனே! அவருதான் சைக்கிளை க்ளாசுக்கே கொண்டு வரமாட்டாரே. தூரப் போறண்டா மட்டும் எப்பயாவது வெளியில எடுத்து வச்சுத்தொடைப் பாரு!" என்பான் லாபீர். அவனை "பூவரம்பாத்தாட

பெயல்" என்றுதான் விளிப்பார் கணிதப் புலி.

"ஏண்டா! இப்பிடிச் செஞ்சா என்ன...? பெரிய பள்ளிவாசல் ஓடைக்குள்ள நல்ல இருட்டு. இஷாத் தொழுகைக்கு பள்ளிக்கு வருவாரு மச்சான். ஒளிச்சிருந்து கல்லால மண்டைய ஒடைப்போம்" என்பான் ஜவாத். அவன் கொஞ்சம் முரடன். "கிரிமினல் ஜவாத்" என்றால்தான் எல்லோருக்கும் தெரியும்.

"போடா நீயும் ஒன்ட ஐடியாவும்! அதெல்லாம் பொலீஸ் கேஸாயிடும். வேற ஏதாவது ஐடியா சொல்லுங்கடா"

"பின்னேரக் கிளாஸை எல்லாருமாச் சேர்ந்து கட் அடிப்போம். அதிபர் காரணத்தைக் கேப்பாரு.. அப்ப இப்பிடி எங்களை அவமானப்படுத்திறதை சொல்லுவோம்" என்பேன் நான்.

"நம்ம எவ்வளவு சொன்னாலும் இவளொள் பொட்டையொள் அவர்ர பாடத்துக்கு போவாளொள்றா"

"வேணுமென்டா நம்ம ரினோஸாவை மட்டும் நிப்பாட்டலாம்.."

"என்னது..? "நம்ம ரினோஸா"வா? ஓஹோ! அப்பிடிப் போவுதா விசயம்?" என்று என்னைக் கலாய்பான் சரீன்.

"டேய், ஆட்டுக்குள்ள நீ மாட்டைச் சொருவாத. நம்ம இல்லாம பொட்டையொளை மட்டும் வச்சு எப்பிடிரா அவரு படிப்பிக்கிறது?"

"நம்மளும் இல்லாட்டி அவளொளுக்கு நல்ல சந்தோசமா படிப்பிப்பான்டா, அந்த ஆள்"

"அதில்லடா மாடு! நம்மல்லாரும் போவாம வுட்டா யாருக்குடா பட்டப்பேர் கூப்பிட்டுப் படிப்பிப்பாரு சொல்லு..? அப்பிடிப் படிப்பிக்காட்டி அந்தாளுக்கு ப்ளேன்டீயே செமிக்காதேடா மச்சான்" என்பான் லாபீர்

உடனே எல்லாரும் சத்தமாகச் சிரிப்போம்.

"டேய், எப்பிடியும் ஏஎல் படிக்க மெத்ஸ் ரிசல்ட் வேணுண்டா.. புதிசா வந்த நம்ம வசீம் ஸேருக்கிட்ட டியூசன் போகலான்டா. புது மெதட்டுல நல்ல லேசாப் படிச்சுத் தருவாரு. அடிக்கயும் மாட்டாராம், என்னடா சொல்றீங்க?"

"அதுக்கு நம்ம வாப்பாமார் வுடணுமே. இவரைப்பத்திக் குறை சொன்னா ஏதோ நம்மள்ளதான் மிஸ்டேக்.. மாஸ்டர் நல்ல கண்டிப்பாத்தான் இருக்காரு என்டு நெனைக்கிறாங்கடா.."

பல மாதங்களாக இப்படியே பேசிவிட்டு தீர்மானமேதுமின்றிக் கலைவதுதான் ஐ.பா.ச வின் வழமையாக இருந்து வந்தது. ஆனால் கடைசியாக நடந்த ஒன்றுகூடலில் பரீட்சை அனுமதி அட்டைகள் கையில் கிடைத்துவிட்ட தைரியம் எங்கள் கணிதப் புலிக்கு எதிராக உறுதியான தீர்மானமொன்றை எடுப்பதற்கு உதவியது.

திட்டம் ஒன்று தீட்டப்பட்டு அதைச் செயல்படுத்தும் பொறுப்பு நான், நஸீர் மற்றும் சரீன் ஆகிய மூவரிடமும் ஒப்படைக்கப்பட்டது.

***

எதிர்பார்த்தது போலவே பத்து நிமிடத்தில் பாடசாலைக்கு முன்புற வாயிலிலே நிற்கும் பெரிய நிழல்வாகை மரத்தின் நிழலினூடாக ஜரீத் மாஸ்டரும் அதிபரும் ஒன்றாக நடந்து வருவது தெரிந்தது. பாடசாலை வாயிலில் அதிபரிடம் விடைபெற்று அவர் மட்டும் எங்களை நோக்கி படியேறி வந்தார்.

அவர் அருகிலே வரவர எல்லோருக்கும் "திக்... திக்" என்றிருந்தது. வகுப்பில் என்றுமேயில்லாத ஓர் அசாதாரண அமைதி நிலவியது. வகுப்புக்குள் நுழைய வந்தவர் என்ன நினைத்தாரோ சட்டெனத் திரும்பி மீண்டும் அதிபரிடம் சென்று எங்கள் வகுப்பைக் காண்பித்து ஏதோ சொல்லிக்கொண்டு நின்றார். அந்த இடைவெளிக்குள் என்னையும் நஸீரையும் வெளியே தள்ளிக்கொண்டு வந்து ஒரு மூலையில் ஒதுக்கினான் சரீன். அவனுடைய முகம் வெளிறிப்போயிருந்தது.

"என்னடா சரீன் ஏதும் சிக்கலா?"

"அதெல்லாம் ஒண்ணுமில்ல! வந்து.. நான் ஒண்ணு சொல்லுவேன். ரெண்டுபேரும் ஆத்திரப் படாமக் கேளுங்க. டேய், இன்னைக்கு மட்டுந்தான்டா இவர்ர வகுப்பு. பேசாம இதை வுட்டுருவோமாடா?" என்று கேட்டான்.

அவன் குரல் லேசாக நடுங்கியது.

"ஏன் ஒனக்குப் பயமாரிக்காடா..? நாங்கதானே செய்யப்போறோம். நீ வேணுமெண்டா நல்ல புள்ள யாட்டம் இருந்து எல்லாம் முடிய வாயேன்" என்றேன் குத்தலாக.

"நேத்து முத்தவெளியில வச்சு எப்பிடி பெரிய வீரனாட்டம் இவன் கதைச்சான் பாத்தியாடா..? பயந்தாங்கொள்ளி!" என்றான் கோபத்தோடு நஸீர்.

"யார்ரா பயந்தாங்கொள்ளி..? அதில்லடா, இனி இவருக்கும் நம்மளுக்கும் சம்பந்தமில்லைதானே. ஓஎல் எக்ஸாமுக்கு போற நேரத்துல விசாரணை அது இதுண்டு அலையேலாடா.. பேசாம வுட்டுத்தொலைப்போம் என்டுதான் சொல்ல வந்தேன்"

"எத்தின தரண்டா ஒன்ட, என்ட, இவன்ட, மத்தப்பேர்ர உம்மா வாப்பாவை இழுத்து ஏசி அவமானப்படுத்தியிரிக்காரு.. எப்பிடிரா சும்மா இருக்கிறது?"

"அப்படியெண்டா சரி, யோசிக்கவே வேணாம் செய்வோம். சாமான்லாம் எங்கடா.. கொண்டு வந்தீங்களா?" என்றான் சரீன் வரவழைத்துக்கொண்ட தைரியத்துடன்.

"நீ எல்லாருக்கிட்டயும் ப்ளானைச் சொன்னியா? ஏதும் சிக்கலில்லையே..?" என்று கேட்டோம்.

"அவரு யார்ர பட்டப்பெயரைச் சொல்றாரோ அவன் எழும்பி அவரோட எதிர்த்து வாய்போடணும்.. அந்த வாக்குவாதம் நடந்திட்டிருக்கக்கொள்ள நம்மட பார்ட்டி எல்லாரும் எழும்பி வேலையைக்காட்றோம். இதானே..? அதெல்லாம் க்ளீனாச் சொல்லியாச்சு. அதுசரி, நீ சாமானைக் கொண்டு வந்திருக்கியா...?"

"ஓ! எல்லாம் என்ட மேசையில இருக்க பேக்குக்குள்ள இருக்கு. மொத்தம் 27. நீ போய்க் கெதியா அதில ரெண்டுமூணை மட்டும் எங்களுக்கு வைச்சிப் போட்டு மத்ததையெல்லாம் ஆளுக்கொண்ணா குடு. நீயும் எடு.. பொட்டைகளுக்கு வேணாம்.. அதுகளுக்கு

இப்ப தெரியவும் வேணாம்.. கவனமா எடு சரியா?"

"டேய் சரீன் இஞ்ச பார், யார்ர பட்டப் பெயரைச் மொதச் சொல்றாரோ அவனை மட்டும் எழும்பி விசயத்தைப் பாக்கச் சொல்லு. மத்ததை நாங்க பாத்துக்கிறோம். நீ சொதப்பி வுட்டுறாத!" என்றான் நஸீர் அவனை நம்பாத பார்வையுடன்.

"சரிசரி நா உள்ள போறேன்! நீங்க பின்னால வாங்கடா"

சரீன் உள்ளே போய் சிறிது நேரத்திலே நாங்களும் வகுப்புக்குள்ளே போய் அமர்ந்தோம். சிறிது நேரத்தில் ஜரீத் மாஸ்டர் மீண்டும் உள்ளே வர எல்லோரும் எழுந்து நின்று ஸலாம் சொன்னோம்.

"அஸ்ஸலாமு அலைக்கும் ஸேர்!"

"வஅலைக்கும் ஸலாம். சரி, எல்லாரும் எக்ஸாமுக்குப் போகப்போறிங்க... இவ்வளவு நாளும் கஸ்டப்பட்டு பாடம் நடத்தினந்தானே... அதனால இன்டைக்கு நம்ம கொஞ்சம் பேசுவோம். சரியா...?!" என்றார் அதிரடியாக.

நாங்கள் ஒருவரையொருவர் குழப்பமாகப் பார்த்துக் கொண்டோம்.

"பிள்ளைகள் நீங்க ஸலாம் சொன்னீங்கதானே. அதுக்கு என்ன அர்த்தம் சொல்லுங்க பாப்பம்?"

நாங்கள் ஒருவரும் பதில் பேசவில்லை. பெண்பிள்ளைகள் மட்டும் ஏதோ முணகினார்கள்.

"அப்படியென்டா அறபுல "உங்கள் மீது சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக" என்று கருத்து. அதுசரி பிள்ளைகள், "சாந்தி" என்டா என்ன?"

"ம், ஒன்ட கள்ளப் பொஞ்சாதி" என்று கிசுகிசுத்தான் "கிரிமினல்" ஜவாத். எல்லோரும் சிரிப்பை சிரமப்பட்டு அடக்கிக் கொண்டோம்.

"சாந்தி என்டா.. அமைதி. மன அமைதி.. மனிசனுக்கு மனதில அமைதி முக்கியம்தானே.. அது இருந்தாத்தான் படிக்கலாம்.. வேலைசெய்யலாம்.. சம்பாதிக்கலாம்.. எதையாவது கண்டுபுடிக்கலாம். அதுமட்டுமில்ல.."

"ம்ம் ஒண்ட மண்டையையும் ஒடைக்கலாம்" ஜவாத்

"ஏய், என்னடா நடக்குது இஞ்ச?" என்று பார்வையாலேயே சரீனிடம் கேட்டேன். அவன் தனக்கும் புரியவில்லை என்று உதட்டைப் பிதுக்கினான்.

"... அதனாலதான் நம்ம ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹூ அலைஹிவஸல்லம் அவர்கள் ஒருவருக் கொருவர் ஸலாம் கூறுவதற்கு முந்திக்கொள்ளுங்கள் என்று"

"என்னடா இது, மச்சான்புள்ள ஜமா-அத்துல (மதப்பிரச்சாரப் பயணம்) போய் வந்த மாதிரியிருக்கு.. நல்லாத்தானடா இருந்தாரு.. மத்தியானம் கணவாய்க் கறியோட சாப்பிட்டிருப்பாரோ?" என்று மெதுவாகக் கேட்டான் நஸீர்.

இப்படியே ஐந்துநிமிடம் பத்துநிமிடமாகி.. பத்துநிமிடம் கால்மணியாகி கால்மணி அரை மணியாகிக் கொண்டிருந்ததே தவிர எங்கள் கணிதப்புலி தனது போதனையை விடுவதாக இல்லை. எனக்கு ஒரே யோசனையாக இருந்தது.

"மச்சான் நஸீர் நெலமை பொழையாப் போவுது. என்னடா செய்வோம்..?" என்று கேட்டேன்.

"டேய், மாஸ்டர் நம்மட ப்ளானை மோப்பம் புடிச்சிட்டாரென்டுதான் நெனைக்கிறன். இவன் சரீன்ட வேலைதான் இது! இன்டைக்கு அவனை..?" என்று கொதித்தான் நஸீர்.

"மச்சான் நஸீர், அவசரப்படாதடா! அவன் சொல்லி யிருக்க மாட்டான். இது வேற என்னமோ நடக்கப்போவு தென்டு என்ட மனஞ் சொல்லுது. சரி, நான் ஒரு ஐடியாச் சொல்றேன் கேளு. மெட்ஸ் கொப்பி வச்சிருக்கியா?"

"ஓ! இருக்கு.. ஏன்டா?"

"எதுவுங் கேக்காத.. நீ, சொணங்காம அதை எடுத்திக்கிட்டு டக்கென்டு அவருக்கிட்டப்போய் ஏதாவது டவுட் கேளு... வேணுமென்டே ஆளைக் கொழப்பியடி..! எப்படியும் ஒனக்கு ஏசுவாரு.. மத்ததை நான் பாக்கிறண்டா.. சரியா? போ! போ!" என்று அவனை அவசரப்படுத்தினேன்.

என்னுடைய கணிப்புச் சரியாக இருந்தாலும் நேரம்தான் பிந்திவிட்டது.

ஆம், நஸீர் மெத்ஸ் கொப்பியை எடுத்துக் கொண்டு எழுந்த அதேவேளை அதிபர், ஊர்ப் பெரிய பள்ளிவாசல் தலைவர், அரபிக்கல்லூரி ஹஸரத் உட்பட வெள்ளை ஆடை, தாடி, தொப்பிகளுடன் இன்னும் சில மதப்பிரமுகர்களும் எங்கள் வகுப்பறையை நோக்கி வந்து கொண்டிருப்பதைக் கண்டோம்.

வாப்பாவைக் கண்டதும் நஸீர் வெலவெலத்துப் போய் சட்டென அமர்ந்துவிட்டான். ஜரீத் மாஸ்டரின் போதனை தொடர்ந்து கொண்டேயிருந்தது.


"...ஆகவே நாமெல்லாரும் இன்றைக்கு நமது பரீட்சையிலே நல்லபடியான பெறுபேறுகளைப் பெறுவதற்காக எல்லாம் வல்ல அல்லாஹ்விடம் துஆ பிரார்த்தனை புரிவோம். சரிதானே?... அஸ்ஸலாமு அலைக்கும்! வாங்க ஹஸரத், மௌலவி எல்லாரும் உள்ள வாங்க.. சேர் நீங்களும் வாங்க.." என்று அவர்களை எழுந்து நின்று வரவேற்றார் எங்கள் ஜரீத் மாஸ்டர். வேறுவழியின்றி நாங்களும் எழுந்து வரவேற்றுவிட்டு அமர்ந்தோம்.

வந்தவர்கள் எல்லோரும் எங்கள் முன்னே நாற்காலிகளில் அரைவட்டமாய் அமர்ந்திருக்க அதிபரின் சிறு அறிமுக உரைக்குப் பின்னர் துஆ (பிரார்த்தனை) ஆரம்பமானது.

"பிள்ளைகளே! எல்லோரும் எழுந்து நின்று இருகரங்களையும் தோள்களுக்கு நேரே உயர்த்தி ஒன்றாகச் சேர்த்துப்பிடித்து வல்ல இறைவனிடம் மனமுருகப் பிரார்த்தனை புரிவோம்." என்று துஆவை ஆரம்பித்தார் ஹஸரத் அவர்கள்.

அவர் கேட்டுக்கொண்டபடி நாங்கள் ஒவ்வொரு வரும் இருகைகளையும் தோள்களுக்கு நேரே உயர்த்தி ஒன்றாகச் சேர்த்துப்பிடித்துப் பிரார்த்தனை புரிய நினைத்த போதிலும் கைகளுக்குள் பொத்தி வைத்துக் கொண்டிருந்த அழுகல் முட்டைகளை எப்படி வைத்திருப்பது என்பதுதான் புரியவில்லை. •

நேர்காணல்



**வன்முறைக்குட்பட்ட பெண்ணை திருமணம் செய்கின்ற பக்குவம் நம் சமுதாயத்தில் எத்தனை பேருக்குண்டு?**

**(கேஷாயினி எட்மண்ட், மீரா, இலங்கை)**

இலங்கையின் மீன் பாடும் தேன் நாடாம் மட்டக்களப்பைச் சேர்ந்த கேஷாயினி எட்மண்ட் "மீரா" என்ற புனைபெயரில் தமிழ் இலக்கியவெளியில் அறிமுகமானவர்., யங் ஏசியா ஊடகநிறுவனத்தில் தயாரிப்பாளராக பணியாற்றிய மீரா தற்போது பெண்ணியம் இணையத்தின் ஆசிரியர்களுள் ஒருவராகவும், சுதந்திர ஊடகவியலாளராகவும் பணியாற்றி வருகின்றார். திரைப்பட மற்றும் ஊடக கல்லூரியில் பட்டப்படிப்பினை பூர்த்தி செய்துள்ள மீரா பல்கலைக்கழகத்தில் கட்டடப்பொறியியல் மாணவியாக கல்விகற்று வருகின்றார். இசை , கவிதை எழுதுதல் சமூக நோக்கு ,ஊடகம் போன்ற துறைகளில் செயல்பட்டு வரும் பன்முக ஆற்றல் உள்ள இளைய படைப்பாளிகளில் மீரா தனிமுத்திரை பதிக்கின்றார். மீரா பெண்ணியவாதியாகவே எம்மிடையே அவதானிக்கப்பட்ட ஒருவராக இருக்கின்றார். இவரின் கவியாழுமைக்குப் பின்வரும் கவிதை ஒன்று உரைகல்லாக எம்மிடையே காணப்படுகின்றது .

## மௌன அஞ்சலி

செய்த பின் தான்
ஞானம் உதித்தது - கூடவே
மனதும் வலித்தது...
எனக்குத் தெரியும்
உன்னைப் இனிப்பெறுவதென்பது
முயற்கொம்பென்று...
திட்டமிட்டு செய்யவில்லை
திடீரென்று தான் நிகழ்ந்தது...

மலரைப் பறித்தாலும்
மனம் பதைபதைப்பவள்...
- இன்று
உன்னை.....
மன்னித்துவிடு!
என் ஒரு நொடித் தவறு...
நொடித்து விட்டது

உன் வாழ்வை...
என் சமாதானங்கள்....
சமாளிப்புக்கள்...
வாதங்கள்....
- உன்னை
மீட்டுத் தந்திடுமா....?

என் கண நேர அவசரம்....
எத்தனை கனவுகளோ உனக்குள்....?
காதலியிருக்கிறாளா....?
கறுப்பான உனக்குள்ளும்
என்னனென்ன கவலைகளோ...?

உன் இறுதி நிமிடங்களில்
என்ன நினைத்தாய்...?

சாபமிட்டாயா?
இல்லை சாதித்த
திருப்தியுடன் போய் சேர்ந்தாயா...?

என் தவறா...?
படைப்பின் புதிரா...?
பேனை புள்ளியென்று...
தொட்டுவிட்டேன் - சிறு
பூச்சி நீ.... செத்துவிட்டாய்...
கொலை செய்திட்ட
உறுத்தலுடன் மூடுகிறேன்
நாட்குறிப்புடன் கூடவே
என் விழிகளை.....
- உன்
அகால மரண
மௌன அஞ்சலிக்காக....

மீராவை நேர்காணலுக்கு அணுகியபொழுது பலத்த வேலைப்பளுக்களிடையே மகிழ்ச்சியுடன் சம்மதம் தந்து இலக்கியம் பெண்விடுதலை சமூக நோக்குகள் என்று தனது எண்ணங்களை உங்களுடன் பகிருகின்றார். தாயகத்தில் இருந்து வெளியாகும் ஜீவநதி இலக்கிய சஞ்சிகைக்காக பல்வேறுகட்ட மின்னஞ்சல் பரிவர்த்தனைகள் மூலம் நான் கண்ட நேர்காணல் இது...

**- கோமகன் -**

**மீராவை எப்படி அறியலாம்?**

ஊடகம், கலை, பொறியியல் துறை என பன்முகம் இருந்தாலும் "ஊடகவியலாளர்" என்று அறிமுகப்படுத்தி கொள்ளும் போது தான் என்னுள் கம்பீரமாக உணர்கின்றேன். என்னை சாதாரண ஒருத்தியாக சக தோழியாக வெறும் "மீரா"வாக தான் அறிமுகப்படுத்தி கொள்ள விரும்புகின்றேன்.

**மீரா என்ற புனைபெயர் எப்படியாக உங்களைத் தொற்றிக்கொண்டது?**

சிறுவயதிலேயே பேனை மீது காதல் ஏற்பட்டு விட்டது என்று தான் சொல்ல வேண்டும். புனித சிசிலியா பெண்கள் தேசிய பாடசாலையில் தான் ஆரம்ப கல்வியை கற்று வந்தேன். இப்பாடசாலை அருட்சகோதரிகளால் நடாத்தப்படுகின்றதொரு பாடசாலை. நிறைய கட்டுப்பாடுகள் உண்டு. ஒரு முறை குறுக்கெழுத்து போட்டியில் பரிசுபெற்றவர்கள் பெயரில் என் பெயர் வெளிவந்த போது என் அதிபர் என்னைக் கூப்பிட்டு படிப்பில் மட்டும் கவனம் செலுத்தும் படி அறிவுரை வழங்கினார். கூடவே என் படைப்புக்கள் கவிதை, கட்டுரை என மென்படைப்புகளாக வன்றி அரசியலையும் தொட்டதால் என் வீட்டிலும் பலத்த எதிர்ப்பு. எழுத்தின் மீதான தாகம் அதேவேளை எதிர்ப்பினை சமாளிப்பதற்கான உத்தி என சிந்திக்க தொடங்கியதுடன் என் படைப்புக்களை யாரும் அறியா வண்ணம் வெளியிட வேண்டிய தேவையும் ஏற்பட்டது.

பாரதி கவிதைகளால் என்னை எந்தளவிற்கு ஈர்த்தானோ அதைவிட கண்ணன் மீது அந்த பதின்ம வயதிலேயே ஒருவித மயக்கமிருந்தது. நான் கத்தோலிக்க மதத்தினை பின்பற்றுபவள் என்றாலும் என் மேசை மீது கண்ணன் எப்போதுமிருப்பான். கண்ணன் எனும் போது முதலில் நம் சிந்தனையை தொடுபவள் மீரா தானே. ஆக "மீராபாரதி" என்கின்ற பெயரில் சில படைப்புகள் எழுதினேன். பின்னர் அதே பெயருடைய படைப்பாளி இருப்பதை அறிந்தவுடன் பெயரை உடைத்து பாரதி, மீரா என வெவ்வேறு பெயரில் எழுதினேன். பின்னர் இன்னும் பல புனைப்பெயர்களில் எழுதினேன், எழுதுகின்றேன். ஆனால் மீரா மட்டும் நிலைத்து விட்டது.

இன்னொரு வகையில் பார்க்க போனால் கண்ணனின் மீது கண்ணனின் மீராவிற்கு இருந்த பிடிவாதமான காதல் போல் இந்த மீராவும் ஒருவகையில் பிடிவாதக்காரி தான். ஆனால் என் காதல் எழுத்தின் மீதானது.

**உங்கள் வீட்டில் எந்தக்கண்ணோட்டத்தில் எதிர்ப்புகள் வந்தன ?**

முதலில் அம்மா என்னை "இந்த வயதில் இவை தேவையில்லை" என்று அன்பாக சொல்லிப் பார்த்தார். பின்னர் அதையே கண்டிப்பாக சொன்னார். என் வீட்டவர்களை பொறுத்தளவில் நான் எழுதுவதால் ஏதும் பாதிப்பிற்குள்ளாவேனோ என்கின்ற பயமும் படிப்பில் கோட்டை விட்டுவிடுவேனோ என்கின்ற கவலையும் தான் இவற்றிற்கு காரணம். என்னுடைய வயதிற்கு மீறிய முதிர்ச்சியை விரும்பவில்லை அல்லது அவர்களுக்கு அதனை ஏற்றுக்கொள்வது கடினமாயிருந்திருக்கலாம்.

**இந்த இளையவயதில் எழுத்தும் இசையும் உங்களை ஈர்த்ததின் பின்புலங்கள்தான் என்ன ?**

என் குடும்பத்தில் அநேகர்களுக்கு வீணை நன்றாக வாசிக்க தெரியும். என் பெரிய தாத்தாவும் ஒரு கலைஞன் முன்னர் எங்கள் யாழ்ப்பாணத்து வீட்டில்; வீணை இசையும் சலங்கை ஒலியும் அதிகாலையிலேயே ஒலிக்க தொடங்கி விடும் என அம்மா அடிக்கடி சொல்லுவார். அதே போல என் தாயாரும் நாவல் பிரியை. நான் வயிற்றில் இருக்கும் போது நிறைய வாசித்ததாக கூறுவார். அது மட்டுமல்ல எனக்கு ஐந்து வயதாயிருக்கும் போதே பரதமும், வீணையும் பயிற்றுவித்தல் ஆரம்பமாகிவிட்டது. பின்னர் உயர்தர கணிதப்பிரிவுக்கு வந்த பின் பரதம் நின்றுவிட்டாலும் வீணையும் பாட்டும் இன்றும் தொடர்கின்றன. சிறுவயது முதலே நிறைய வாசிப்பேன். ஆக எழுத்தும் இசையும் நான் கருவில் கற்கத்தொடங்கியதாகவே நினைக்கன்றேன்.

**ஈழத்து அல்லது புலம்பெயர் தமிழ் இலக்கியத்திலே பெண்களின் பங்களிப்பு என்பது எந்தளவு தூரத்துக்கு வளர்ச்சி நிலையை அடைந்துள்ள தாக எண்ணுகின்றீர்கள் ?**

ஈழத்து இலக்கியங்களில் முன்னரை விடவும் பெண் படைப்பாளிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்றாலும் பங்களிப்பு என்னளவில் குறைவாகவே உள்ளதாக கருதுகின்றேன். எண்ணிக்கை என்பதற்கும் – பங்களிப்பு என்பதற்கும் வேறுபாடு இருக்கின்றது. ஆனால் புலம்பெயர் இலக்கியங்களில் பெண்களின் பங்களிப்பு கணிசமாக வளர்ச்சியடைந்துள்ளது என்று தான் கூறவேண்டும். பல பேசா பொருள்கள் பேசுபொருளாக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன.

**குறிப்பாக எந்தவகையான பேசா பொருள்கள் பேசு பொருளாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன?**

முன்னர் எம்முடைய சமூக கட்டமைப்புக்குள் வெளிவராதிருந்த வீட்டு வன்முறைகள், பாலின உரிமைப் போராட்டங்கள், மூன்றாம் பாலினர் குறித்த விடயங்கள் போன்றவை இப்போது தான் படைப்புகளில் வெளிவர ஆரம்பித்திருக்கின்றது.

**ஈழத்து இலக்கியங்களில் பெண் படைப்பாளிகளின் படைப்பளிகளினது பங்களிப்புகள் குறைந்துள்ளதாகச் சொல்கின்றீர்கள் இதற்கு ஏதுவான காரணங்கள் தான் என்ன ?**

மூன்று தசாப்தகால ஈழப்போரானது பல இலட்சம் இளைஞர்களை காவுகொண்டது மட்டுமல்லாது பலரை புலம்பெயரவும் செய்திருக்கின்றது என்பது அனைவரும் அறிந்த உண்மை. இந்தப்புலப்பெயர்வானது பின்னர் எவ்வாறான சமூக தாக்கத்தினை ஏற்படுத்தியிருக்கின்றது என்றால், என் சமவயது பெண்களையும் திருமண உறவின் மூலம் இன்றும் வெளிநாடுகளுக்கு அனுப்பிவைப்பதற்கு வழிகோலியிருக்கின்றது. இவ்வாறான சமூகத்தாக்கம் "ஈழத்து இலக்கிய வீழ்ச்சி" க்கும் "புலம்பெயர் இலக்கிய வளர்ச்சி" க்கும் தளமமைத்துக் கொடுத்துள்ள பிரதான காரணியாக நான் பார்க்கின்றேன்.

**உங்களுடைய கவிதைகள் எதைத்தான் அதிகம் பேசவிரும்புகின்றன?**

அதிகமான என் கவிதைகள் என் கோபங்கள் அல்லது கவலைகளின் வெளிப்பாடுகளே. இவை சொற்கள் கோர்க்கப்பட்டு எழுதப்பட்டவை அல்ல. பேருந்து ஜன்னல் ஓரங்களிலும், வீட்டிலுள்ள மாமரத்தின் கீழும் அமர்ந்து கிறுக்கியவை. எழுதப்பட்ட இடங்களை கொண்டே சொல்லி விடலாமே.... பெரும்பாலானவை சமூகத்தின் மீதான என் தார்மீக கோபத்தின் கிறுக்கல்கள்.

**எப்படியான கோபங்கள் சமூகத்தின் மீது உண்டு?**

பேரூந்தின் ஓரத்தில் இடம்பிடிக்க மற்றவர்களை தள்ளிக்கொண்டு ஏறிவிட்டு வெற்றிலை எச்சிலை வீதியில் துப்புகின்ற தனி நபர்கள் தொடக்கம், ஒரு பெண் பாலியல் வன்முறைக்கு உட்பட்டவுடன் அவள் வெளியில் சென்ற நேரம், அவளது உடை குறித்து விமர்சித்து பழியை அவள் மேலேயே திருப்புகின்ற இந்த சமூகம் வரை என்று இவர்கள் அனைவர் மீதும் எனக்கு அதீத கோபம் உண்டு.

**கவிதையின் மொழியானது எப்படியாக இருக்க வேண்டும் என்று எண்ணுகின்றீர்கள்?**

நிர்வாணமானதாக இருக்க வேண்டும் என நினைக்கின்றேன் மறைத்தல், பூசிமெழுகல் இன்றி அப்படியே படைப்பாளியின் உணர்வினை பிரதிபலிப்பதாக இருக்க வேண்டும்.

**"கவிதையின் மொழியானது நிர்வாணமாக இருக்கவேண்டும்" என்று சொல்கின்றீர்கள். அப்படியானால் ஒரு கவிதைக்கு படிமங்களோ இல்லை அழகியல் சொல்லாட்சிகளோ தேவையில்லை என்று சொல்கின்றீர்களா?**

படிமங்கள், அழகியல் என்பதெல்லாம் நாம் அணியும் உடைகளையும் நகைகளையும் போன்றவையே. இவை பொருந்துகின்றதா? எம்மை அலங்கரிக்கின்றனவா? என்பதெல்லாம் எம் பார்வையை பொறுத்தது. அவைகள் நாமே உருவாக்கிக்கொண்டவை. ஆனால் "நிர்வாணம்" என்பது உருவாகியது. ஆதியின் வடிவம். இதே சித்தாந்தம் தான் கவிதைக்கும். என்னளவில் கவிதைக்கு நாமே சேர்த்துக் கொள்பவையே இந்த அழகியலும் படிமங்களும். விரும்பினால் சேர்க்கலாம் இல்லாதுவிடின் நிர்வாணமானதாக... அதனதன் சுயத்துடன் எழுதிவிட்டுப்போகலாம். என்னளவில் நிர்வாணங்களே படைப்புகளுக்கு அழகு.

**துவக்குகள் முழங்கிய பொழுது இருந்த பேனாக்களுக்கும் இப்பொழுது இருக்கின்ற பேனாக்களுக்கும் இடையிலான வேறுபாட்டை எவ்வாறு புரிந்து கொள்கின்றீர்கள்?**

துவக்கு இருந்த பொழுது ஒரு சில பேனாக்கள் தான் எழுதின. அவற்றுள் ஒருபக்க சார்புகள் பெரும்பாலும் இருந்தன. ஆனாலும் விடயங்கள் ஆதாரபூர்வமானதாக ஆக்கபூர்வமானதாக இருந்தது. அநேக பேனாக்கள் குருதி எனும் மை கொண்டு எழுதின. இன்று எல்லாப் பேனாக்களும் எழுதுகின்றன, எல்லாவற்றையும் எழுதுகின்றன. தரம் பிரித்தலும், உண்மையறிதலும் கடினமாயிருக்கின்றது. இதில் சமூக ஊடகங்களின் முக்கியமானது. முக்கியமாக சுயம் குறித்த எழுத்துக்கள் அதிகரித்துள்ளன. அடுத்த பக்கமாக பார்க்கும் போது முன்னர் எல்லாப்பக்க "தணிக்கைகள்" ஐயும் கடந்து வந்த எழுத்துக்கள் இன்று தண்ணீர்பாடாக வருகின்றது. இன்னுமொரு விடயம் நானறிந்த மட்டில் அரசினதும் சரி, புலிகள் பற்றியும் சரி இருபக்க அலசல்களும் கொண்ட எழுத்துக்கள் துவக்குகள் முடங்கிய பின்னர் தான் அநேகமாக வெளிவந்துள்ளன.

**ஆனால் அப்படி வெளியாகிய எழுத்துக்களும் இன்று நம்பகத் தன்மையில்லாது கேள்விகளுக்கும் சர்ச்சைகளுக்கும் உட்படுகின்றனவே?**

சரித்திரத்தின் எந்த காலகட்டத்திலும் மந்தைகள் போல் ஒரே திசையில் நகர்ந்தவர்களை விட புதிய கருத்துக்கள், உண்மைகள் தான் அதிக சர்ச்சைகளை, விமர்சனங்களை எதிர்கொண்டுள்ளன. இன்று நாமும் அதற்கு விதிவிலக்கல்ல. ஆனால் நாம் விமர்சனங்களை கையாளத் தெரியாத சூழலில் வளர்க்கப்பட்டவர்கள் அல்லவா? விமர்சனங்கள் என்கின்ற பெயரில் பிடித்த முயலுக்கு மூன்று கால் என்று வாதிடுவதும், பிழைகளை மூடிமறைக்க சொல்லப்பட்டதெல்லாம் பொய்கள் என பிரசாரங்களை மேற்கொள்வதும், ஒருவர் நமக்கு பிடித்தவர்களை நம் ஒத்த கருத்துக்களை கூறும் போது கூட்டு சேர்ந்து விட்டு பின்னர் முரணான கருத்தினை சொல்லும் போது அவரை எதிர் முனையில் நின்று திட்டித்தீர்ப்பதும், சுயங்களை விமர்சிப்பதும் நமக்கு ஒன்றும் புதியவையல்லவே.

அண்மைக்காலங்களில் விமர்சனங்கள் என்கின்ற பெயரில் ஒருவருடைய படைப்பை இன்னொருவர் புகழ்வதும் பின்னர் புகழ்ந்த நபரின் படைப்பை முன்னவர் புகழ்வதும் முகநூல் "போலி விமர்சனங்கள்" ஆல் நிரம்பி வழிகின்றது. இப்படி புகழ்ந்து எழுதுவதால் மட்டும் இவை சிறந்த படைப்புக்கள் ஆகிவிடுவதுமில்லை. கேள்விகளும் சர்ச்சைகளும் வரவேண்டும். இதன் மூலம் குறித்த விடயம் அலசப்பட வேண்டும். என்ன தான் முட்டி மோதினாலும் உண்மைகள் மட்டும் காலங்கடந்து வாழும் என்பதே யதார்த்தம்.

**பெண் விடுதலை என்பது எப்படியாக இருக்க வேண்டும்?**

என்னளவில் பெண் இன்னும் விடுதலை அடையவில்லை என்று தான் தோன்றுகின்றது. தளங்கள் மாறுபடுகின்றனவே தவிர அடிமைப்படுத்தல்கள் தொடர்கின்றன என்று தான் தோன்றுகின்றது. இதற்கு ஆணாதிக்கம் காரணம் என்று சொல்லமாட்டேன். பெண் போராட்டங்கள் தொடர்பான தவறான புரிதல்கள், பார்வைகள், "பெண் விடுதலை" என்கின்ற பெயரில் ஆண்கள் செய்கின்ற தவறுகளை ஏட்டிக்கு போட்டியாக செய்தல் போன்றவையும் காரணமாகின்றன என்பது என் கருத்து.

**எந்த வகையில் பெண் விடுதலையின் தளங்கள் மாறுபடுகின்றன?**

முன்னர் வீட்டிற்குள் பெண்ணானவள் சிசுவாக, பருவப்பெண்ணாக, மனைவியாக வன்முறைக்குட்படுத்தப் பட்டாள். பின்னர் கல்விக்காக போராடினாள். ஊதியத்திற்காக போராடினாள். ஆனால் இன்றோ பகிரங்கமான பாலியல் வன்முறைகளுக்கு எதிராக போராடுகின்றாள். அரசியல் உரிமைகளுக்காக போராடுகின்றாள். இவ்வாறாக போராட பிறந்த பாலினமாக இருக்கின்றாள். கருவறையில் கருக் கொள்ள போராடியவள் இன்று உலக அரங்கில் தன்னை நிறுத்திக் கொள்ள போராடுகின்றாள். இங்கு கருவறை, வீடு, வீதி என தளங்கள் தான் மாறுபடுகின்றனவே தவிர போராட்டமென்பது தொடர்ந்துகொண்டு தானிருக்கின்றது.

**தாயகத்திலும் சரி புலம்பெயர் நாடுகளிலும் சரி பெண்களுக்கு எதிராகக் கொடுமைகள் நடைபெறும் பொழுது கள்ள மௌனம் சாதிக்கும் பெண்ணிய அமைப்புகள், அற்ப விடயங்களுக்காக பொதுத்தளங்களைப் பரபரப்பாகுவது பற்றி உங்கள் நிலைப்பாடு எப்படியாக இருக்கின்றது?**

"கள்ள மௌனம்" என்கின்ற சொல்லாடல் மிகவும் தவறானது. இன்று பெண்கள் பல்வேறு தளங்களில் பிரச்சினைகளை, வன்முறைகளை எதிர்நோக்குகின்றனர். இத்தகைய பலதரப்பு பிரச்சினைகளை பல்வேறுப்பட்ட பெண் அமைப்புக்கள் கையாள்கின்றன. சில நேரங்களில் "பெண்" என்கின்ற பொதுமைக்காகவே ஒன்றிணைகின்றவே தவிர

ஒவ்வொன்றிற்கும் வெவ்வேறு தளத்திலான போராட்டங்கள் உண்டு. இப்படியிருக்கும் போது சிலநேரங்களில் குறிப்பிட்ட வரையறையை தாண்டி செயற்பட முடியாத போது "வலியுடனான மௌனம்" தான் சாதிக்க வேண்டியிருக் கின்றதேயன்றி ஒதுக்குதல், புறந்தள்ளல் என்பதல்ல அர்த்தம்.

அடுத்தது பல வேளைகளில் உள்ளக போராட்டங்களை தான் மேற்கொள்ள வேண்டியுள்ளது. இதற்கு நம் சமூக கட்டமைப்பும் ஒரு காரணம். உதாரணத்திற்கு பாலியல் கொடுமைக் குள்ளான ஒரு பெண் குழந்தை குறித்து பகிரங்க போராட்டம் நிகழ்த்த முடியுமா? நாளை அதன் எதிர்காலம் என்ன? வன்முறைக்குட்பட்ட பெண்ணை திருமணம் செய்கின்ற பக்குவம் நம் சமுதாயத்தில் எத்தனை பேருக்குண்டு? சில முகநூல் போராளிகள், அட்டைக்கத்தி போராளிகளை கொண்டு முழு பெண்ணிய அமைப்புக்களையும் பொதுமைப்படுத்திட முடியாது.



**ஆனால் இதே வலியுடனான மௌனம் என்பது நடக்கின்ற அநியாயங்களை ஆதரிப்பது போல் அமைந்துவிடும் அபாயம் என்ற ஒன்று இருக்கின்றதல்லவா?**

உண்மை. சில நேரத்து யதார்த்தமும் அது தான். ஆனால் இந்த விடயத்தில் இறந்த காலங்களை விடவும் எதிர்காலம் என்பது முக்கியமல்லவா? அதிலும் இன்னுமொருவருடைய சுயத்தினை, வலியை, உளவியல் விடயங்களை அவதானமாக கையாள வேண்டியுள்ளது. இன்னும் பல சந்தர்ப்பங்களில் காரணமான நபர்களை தெரிந்திருந்தும் அவர்களை ஏதும் செய்யமுடியாத கையகலாத தருணங்களிலும் இந்த வலியுடனான மௌனங்களைத் தான் கடக்க வேண்டியிருக்கின்றது. இது மிகப்பெரிய அபாயகரமான நிலையும் கூட. இதில் தங்கள் பதவி பலம், பணப்பலம், அரசியல் பலத்தினை உபயோகித்து பெரும்பாலானோர் தப்பித்துக்கொள்கின்றனர் என்பதையும் மறுப்பதற்கில்லை. ஆனால் போராடுகின்ற நாமும் இதே சமூகத்தில் தானே இருக்கின்றோம். சட்டம், அதிகாரங்களுக்கு அமைதல் எமக்கும் உண்டல்லவா? அபாயம் என்று தெரிந்தும் மௌனிக்க தான் வேண்டியுள்ளது.

**அண்மையில் தாயகத்தில் நடைபெற்ற சர்வதேச பிரபல பாடகரின் நிகழ்வில் ஒருசில பெண்கள் தங்கள் உள்ளாடைகளைக் கழற்றி எறிந்து தங்கள் சந்தோசத்தை வெளிப்படுத்தியதால் பெரும் சர்ச்சைகள் கிளம்பின. இதில் உங்கள் பார்வைதான் என்ன?**

என் பார்வையில் இதை பால் ரீதியில் நோக்காது யார் செய்திருந்தாலும் பிழை தான். இச்செயலை பலர் சமூக ஊடகங்களில் நியாயப்படுத்தி எழுதியிருந்ததை என்னால் ஏற்கமுடியாது. மகிழ்ச்சியை வெளிப்படுத்த உள்ளாடைகளை தான் களைந்து வீசவேண்டும் என்பதில்லை. பொது இடத்தில் எப்படி நடந்துகொள்வதென தெரியாத சிலரது பண்பற்ற செயலாகவே இதனை நான் பார்க்கின்றேன்.

**நீங்கள் கிறீஸ்தவ சமூகத்தை சேர்ந்தவர் என்று சொல்கின்றீர்கள். நீங்கள் உட்பட வேறு மதத்தவர்களில் ஒரு சிலர் தங்கள் படைப்புகளிலே குறிப்பாக கவிஞர்கள் தங்கள் சொந்தப்பெயரை அடையாளப்படுத்தாது சுத்த தமிழ் பெயரில் வருவதன் காரணம்தான் என்ன?**

என் சமயம், என் பெயர் எல்லாம் என்னவர்களால் கொடுக்கப்பட்ட அடையாளங்களே. என் புனைப்பெயர்களையாவது எனக்கு பிடித்த வகையில் தேர்ந்தெடுத்துள்ளேன். இதில் தமிழ் பெயர்கள் மட்டுமல்ல பல வேற்று மொழி பெயர்களிலும் எழுதியுள்ளேன். அடுத்த விடயம் படைப்புகளுக்கும் மதத்திற்கும் சம்பந்தமில்லையே. மதம் என்பது என்னளவில் நம்பிக்கை மட்டுமே. இதையே வேறு படைப்பாளிகளும் நினைத்திருக்க கூடும்.

**"படைப்புக்கும் மதத்துக்கும் சம்பந்தமில்லை என்று சொல்கின்றீர்கள்" ஆனால் இஸ்லாமிய அடிப்படைத்தீவிரவாதம் படைப்பாளர்களது கருத்து சுதந்திரத்துக்கு வேட்டு வைக்கின்றதே ? பல படைப்புகள் அவர்களால் தடை செய்யப்படுகின்றதே? இவற்றிற்கு பயந்து வேறு தமிழ் புனைபெயர்களில் வரலாமல்லவா ?**

நான் சொன்ன தொடர்பு படைப்பிற்கும் புனைப்பெயர்களுக்குமான தொடர்பே அன்றி மதகொள்கைகளுக்கும் படைப்புகளுக்குமான சம்பந்தத்தினை குறித்தல்ல. படைப்புக்களின் ஆரம்ப கட்டங்களே மதத்தினை அடிப்படையாக கொண்டு தானே தோற்றம் பெற்றன. நிச்சயம் புனைபெயர்கள் என்பது அச்சங்களின் அடிப்படையில் உருவானவை தான். பின்னரான காலங்களில் வேண்டுமாயின் அது விருப்பங்களின் அடிப்படையில் அல்லது அழகியலின் அடிப்படையில் அமைந்திருக்கலாம். இஸ்லாமிய அடிப்படைத்தீவிரவாதம் மட்டுமல்ல இன்னும் பல இயக்கங்கங்கள், அரசாங்கங்கள் பலரது கருத்து சுதந்திரங்களுக்கு வேட்டு வைத்துக்கொண்டு தானிருக்கின்றன. ஈரானிய கவிதைகளில் பெரும்பாலானவை இன்றும் கூட பல பெண்களால் ஆண்களின் புனைப்பெயரில் தான் எழுதப்படுகின்றன. எத்தகைய அழுத்தங்களுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளதோ அதன் பக்கம் சார்ந்து புனைப்பெயர்களை தேர்ந்தெடுக்கும் போது அழுத்தங்களை குறைக்கலாம்.

இக்கேள்வியில் தொடுக்கப்பட்டுள்ளதை போன்று அழுத்தங்களை குறைப்பதற்காக தமிழ்ப் புனைப்பெயர்களை தேர்ந்தெடுத்திருக்க கூடும். இதில் இன்னுமொரு ஆபத்தும் உள்ளது. சில தேவையற்ற பிரசாரங்களுக்கு கூட முகந்தெரியா நபர்கள் குறிப்பிட்ட சமூக, பாலின, சமய புனைப்பெயர்களை

பயன்படுத்த வாய்ப்புண்டு.

**இன்று இலக்கிய வெளியில் பல கவிதாயினிகள் வந்துவிட்டார்கள். அவர் களின் கவிதைகளின் பாடுபொருளில் ஆணியமே அதிகமாக இருக் கின்றது என்று கவிதாயினிகளே ஓர் குற்றச்சாட்டை வைக்கின்றார்கள் இதுபற்றிய உங்கள் பார்வைதான் என்ன ?**

இன்றைய போராட்டமே எமக்கான உரிமைகளை பெறுவது தானே. இன்று அதிகாரத்தில் இருப்பவர்கள், பெண்ணுக்கெதிரான வன்முறைகளை புரிபவர்களுள் பெரும்பாலானோர் ஆண்களாயிருக்கும் போது எமது போராட்டம் அவர்களை தானே சுட்டிநிற்கும். "இலக்கியம்" என்பது காலக்கண்ணாடி எனில் அதில் இன்றைய நிலையில் ஆணியம் தானே இருக்க வேண்டும். இதில் ஆச்சர்யம் எதுவுமில்லையே

**பொதுவாகவே கவிதாயினிகள் தங்கள் மீது வைக்கப்படும் விமர்சனங் களை தர்க்கபூர்வமாகவோ இல்லை உணர்வு பூர்வமாகவோ எடுக்காது வெறும் உணர்ச்சிபூர்வமாகவே அணுகுகின்றார்கள் என்றவோர் குற்றச்சாட்டு உண்டு. இதை நீங்கள் எப்படிப் பார்க்கின்றீர்கள் ?**

இந்த குற்றச்சாட்டினை நான் மறுக்கின்றேன். இன்றைய பெண் வெறும் உணர்ச்சிபூர்வமானவள் அல்ல. பரந்த அறிவும்; விமர்சனங்களை தர்க்கபூர்வமாக கையாளும் திறனும் கொண்டவள். ஆனால் அடுத்தவர் வைக்கின்ற விமர்சனங்கள் எல்லை மீறும் போதும் பொதுவெளியில் சுயங்கள் விமர்சிக்கப்படும் போதும் அது சிலவேளைகளில் உணர்ச்சிபூர்வமான கையாள்தலை ஏற்படுத்துகின்றது. ஆனால் இந்நிலை இன்று வெகு அரிதே. சில உதாரணங்களை கொண்டு ஒரு விடயத்தினை பாலின பொதுமைப்படுத்தலாக்கி விடமுடியாது.

**இன்றுள்ள ஒருசில கவிதாயினிகள் பெண் அல்லது ஆண்களினது அந்தரங்க உறுப்புகளை வைத்து கவிதைகளைப் புனைகின்றார்கள் இதில் உங்களுடைய புரிதல் எப்படியாக இருக்கின்றது ?**

பெண்ணினது அந்தரங்க உறுப்புகள் குறித்து எத்தனை செய்யுள்கள் எழுதப்பட்டிருக்கின்றன. பெண்ணினது மார்பகங்களை எத்தனை கவிஞர்கள் ஒப்பிட்டு கவி படைத்துள்ளார்கள். ஆண் படைப்பாளி பெண்ணின் அந்தரங்கங்களை வைத்து கவிதை இயற்றும் போது பெண் அதையே எதிர்பாலினரது அந்தரங்க உறுப்புக்களை வைத்து புனையும் போது என்ன தவறு?

**படைப்பிலக்கியத்திலே ஓர் பெண்ணானவள் தன்னைப்பற்றிய வெளிப்பாட்டினை வெளிப்படுத்துவதற்கும், அதே வெளிப்பாட்டை ஓர் ஆணானவன் பெண்ணைப் பற்றிய வெளிப்பாட்டினை வெளிப்படுத்த லுக்கும் ஏதாவது ஒற்றுமை வேற்றுமைகளை உணருகின்றீர்களா ?**

நிச்சயம் ஒற்றுமையை விட வேற்றுமைகள் தானதிகம். என்ன தான் ஆண் படைப்பாளி பெண் உணர்வுகளை வெளிப்படுத்தினாலும் அதில் நூறுவீத உணர்வு வெளிப்பாடு சாத்தியமிருப்பதில்லை. மென்மையான சொல்லாடலில் பெண் படைப்பாளிகள் வெளிப்படுத்தி விடுகின்ற ஆழமான கருக்களை ஒரு ஆணால் வெளிப் படுத்திட முடியாது. இது எப்படியென்றால் காயம் பட்டவர் கதறுவதற்கும் பார்த்துக்கொண்டிருப்பவர் பரிதாபப்படு வதற்குமான இடைவெளி போன்றது.

**பெண்கள் மீதான அதுவும் குறிப்பாக ஈழவிடுதலைக்காகக் களமாடிய பெண்போராளிகள் மீதான உடலரசியல் வைக்கும் ஆண் படைப்பாளிகள் பற்றிய உங்கள் மதிப்பீடு எப்படியாக இருக்கின்றது ?**

கலாசாரமாகட்டும், கற்பு என்கின்ற கற்பிதமா கட்டும், போராகட்டும் எதிலும் "பெண்ணுடல்" தான் அரசியலாகின்றது. ஒரு பெண்ணை தாக்குவதற்கு கடைப்பிடிக்கின்ற சுயம் பேசல், உடை விமர்சனம், நெருங்கிய நபருடன் இணைத்து பேசல் போன்று இந்த வரிசையிலானதொன்றே "உடலரசியல்". மற்றையவற்றினை விடவும் "உடல்" என்கின்ற புள்ளியில் தாக்கும் போது அல்லது உடலரசியல் பேசும் போது அது எல்லாவற்றினையும் விட உள, சமூக தாக்கங்களை ஏற்படுத்திவிடுகின்றது. இலகுவாக குறிப்பிட்ட பெண் மட்டுமல்ல அவள் மட்டத்து பெண்களனைவரதும் அடையாளமாகியும் போய்விடு கின்றது. இதை காலங்காலமாக பொதுதளத்திற்கு வருகின்ற பெண்கள் அனைவரும் எதிர்கொண்டுதான் வந்துள்ளார்கள். இதில் பெண் போராளிகளின் மீதான உடலரசியலில் வியர்ப்பேதுமில்லை.

எப்படி ஒரு போரில் இராணுவத்தால் பெண்ணுடல் வன்முறைக்குட்பட்டு குருதியில் தோய்க்கப்படும் போது என்னுள் கோபம் கிளர்ந்தெழுகின்றதோ அதனை விடவும் ஒருபடி அதிகமான தார்மீக கோபம் பெண் போராளிகள் மீது உடலரசியல் செய்கின்ற படைப்பாளிகள் மேலுண்டு. வன்முறை செய்கின்றவனுடைய ஆணுறுப்பிற்கும் இவர்களது கையிலுள்ள பேனாக்களுக்கும் இடையில் வித்தியாசம் ஏதுமில்லை.

**அண்மையில் அகரமுதல்வன் எழுதிய "சாகாள் " என்ற கதை சமூக வலைத்தளங்களில் கடும் சர்ச்சைக்கு உள்ளாகியிருந்தது . இதுபற்றிய உங்கள் மதிப்பீடுதான் என்ன?**

என் மதிப்பீட்டினை சொல்வதற்கு முன் அகர முதல்வன் போன்றவர்களை வளர்த்துவிட்ட இந்த சமுகம் மீது தான் என் முதல் பார்வையை வைக்க விரும்புகின்றேன். தமக்கு பிடித்த மாதிரி எழுதிய போது தலையில் வைத்தாடியவர்கள் தற்போது "பெண் உடல்"என்கின்ற போது அவரை தடால் என்று கீழே போட்டு விட்டார்கள். இது போராளிகள் மீது வைக்கப்பட்டதால் என்பதல்ல எந்த பெண் மீது வைத்தாலும் அப்படித்தான் செய்திருப்பார்கள். ஆனால் இன்று அகரமுதல் வனை விமர்சிப்பவர்கள் எல்லாம் "சாகாள்" இன் கருத்துணர்ந்து அதன் தார்ப்பரியம் உணர்ந்து தான் விமர்சிக்கின்றார்கள் என்று நினைத்தால் அதனை விட மடமை வேறில்லை. எப்படி நம் தமிழ் பெண்கள் பற்றி அதுவும் கற்பு (இதன் அர்த்தம் கூட தெரியுமோ என்னவோ) குறித்து பேசலாம் என்கின்ற ஆவேசமே தவிர வேறில்லை.

"சாகாள்" என்னளவில் அகரமுதல்வன் இதை எழுதுவதற்கும் முன்வைப்பதற்கும் என்ன அரசியலை கொண்டிருந்தாரோ தெரியாது ஆனால் அதில் வருகின்ற சிவகாமிகள் பலரை நானும் என் ஊடக அனுபவத்தில் சந்தித்திருக்கின்றேன். இத்தகைய சிவகாமிகளை விபரிப்பதை விடவும் அல்லது விபரிப்பதன் மூலம் ஒட்டுமொத்த பாலினரது எதிர்காலத்தினை கேள்வியாக்குவதை விடவும் மௌனித்திருந் திருக்கலாம். அதே போல் "சாகாள்"ஐ வாசித்து விமர்சிப்பதை விடவும் அகரமுதல்வனுடன் சொற்போர் புரிவதை விடவும் ஓரினத்திற்காக போரிட்டவர்களுக்கு நாம் ஒவ்வொருவரும் தனிப்பட்ட முறையில் என்ன செய்திருக்கின்றோம் என்று எம்மை சுயபரிசோதனை செய்துகொள்ள "சாகாள்" கேள்வி யெழுப்புவாள் எனின் அவள் என்றும் சாகாள்.

வினாவின் "சாகாள் பற்றிய மதிப்பீடு" என்பதை

விடுத்து இதை மௌனமாக தாண்டுவதுடன் "சிவகாமியை ஏற்க தயாராக இருக்கின்றோமா?" என்கின்ற வினாவினை மட்டும் ஒவ்வொரு மனதுள்ளும் எழுப்பி கடக்கின்றேன்.

**யுத்தகாலத்தின் பின்னர் தமிழர் தாயகத்தில் கலாசார சீரழிவுகள் பெருகி விட்டன என்று புலம் பெயர்ந்தவர்கள் ஓர் பாரிய குற்றச்சாட்டை தாயகத்தில் இருப்போர் மீது வைக்கின்றார்கள். இது குறித்த உங்கள் பார்வைதான் என்ன?**

இதனை நானறிந்த வகையில் எந்த புலம் பெயர்ந்தவர்களும் பகிரங்கமாக முன்வைக்கவில்லை. ஒருவேளை அவர்கள் அப்படியொரு கேள்வியெழுப்பியிருந்தால் புலம் பெயர்ந்தவர்கள் இக்குற்றச்சாட்டினை முன்வைப்பதற்கு தகுதியானவர்களா என்றதொரு கேள்வி என்னிடமிருக்கின்றது. "கலாசாரம்" என்பது காலத்திற்கு காலம் மாற்றமடைகின்ற தொன்று தானே. இங்கு வேட்டி, சேலை கட்டியவர்கள் அங்கு போயும் இதையே அணிகின்றார்களா? முன்னர் சமுதாயத்திற்காக வெளியில் தங்கள் குடும்ப பிரச்சினைகளை சகித்து வாழ்ந்தவர்கள் இன்று சிறு சிறு விடயங்களுக்கும் விவாகரத்து வாங்கவில்லையா? முன்னர் வெள்ளி தோறும் கோயில் போனவர்கள் இன்று வருஷத்தில் இரு முறைகளாவது போகின்றார்களா? இல்லையே... வேலைப்பளு, நவீன மாற்றங்கள் நமது பழக்கங்களையும், கலாச்சாரங்களையும் தீர்மானிக்கின்றன. அப்படியிருக்கும் போது யுத்தத்தின் பின்னர் ஏற்பட்டுள்ள அபிவிருத்திகள், கல்வி வளர்ச்சிகள் சிலது பழக்கங்கங்களில் மாற்றத்தினை ஏற்படுத்தியுள்ளது. அதனை "கலாசார சீரழிவு" என கொள்வது தவறு.

ஒருவேளை அவர்கள் உறவு நிலை பிறழ்வுகளை கலாச்சார சீரழிவு என மேற்கோள்காட்டின் அது இங்கு மட்டுமல்ல புலம்பெயர் சமூகத்திலும் தானுள்ளது. மற்றும் படி தாயகத்தில் வன்முறைகள் அதிகரித்துள்ளமை மறுக்க முடியாததொன்று. இதற்கு போருக்கு பின்னரான உளவியல் தாக்கங்கள், திடீரென ஏற்பட்டுள்ள கட்டுப்பாடற்ற சூழல் போன்றவற்றினை குறிப்பிடலாம். ஆனால் அதற்காக "கலாச்சார சீரழிவு" என்கின்ற சொற்றொடரை பாவிப்பது தவறு.

**ஆனால் வடக்கு கிழக்கிலேயே அதிகமான மதுபாவனை நுகர்வோர் களும் அதிக கருச்சிதைவுகளும் நடந்திருப்பதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றனவே?**

மறுக்க முடியாத உண்மை. இதில் கலாசாரம் எங்கே சீரழிகின்றது. முதலில் எம் சமுகத்தில் இவை பற்றிய பார்வை எப்படி இருக்கின்றது என்பதை தான் முதலில் ஆராய வேண்டுமே ஒழிய இவற்றை கொண்டு கலாசாரம் என்கின்ற ஒன்றினை எடைபோட்டிட முடியாது. இவை சீரழிவல்ல எம் சமுதாய வளர்ச்சியின்மை. நம் திரைப்படங்களாகட்டும், படைப்புகளாகட்டும் குடிப்பவர்களை கதாநாயகர்களாக தான் காட்டுகின்றது. போதாதற்கு உடல் வெப்ப சீர்படுத்தலுக்காக ஆரம்பிக்கப்பட்ட இந்த "மதுபாவனையை" காதல் தோல்வியின் அடையாளமாக, தாம் புரிந்த வன்முறைகளிலிருந்து தப்புவதற்கான சாட்டாக, வெற்றிக்களிப்புகளின் உச்ச வெளிப்பாடாக ஆக்கிக்கொண்டவர்கள் நாம் தானே. அதே போல் "கருச்சிதைவு" என்கின்றோமோ அந்த கரு என்கின்றதை சிதைக்காமல், கருக்கொள்ளலாமல் இருப்பதற்கான பாதுகாப்பு முறைகளை கற்பித்துக் கொடுக்காமல், அல்லது அது குறித்த விழிப்புணர்வுகளை ஏற்படுத்தாமல் "பாலியல் கல்வி" என்பதை ஏதோ பாதக செயல் போன்ற பார்வை பார்க்கின்றவர்கள் நாம். இப்படி அடிப்படையான கருத்துக்களை விதைத்து விட்டும், சரியான முறையில் இளையவர்களை வழிநடத்தாமல் விட்டுவிட்டும் இன்று அதனால் ஏற்படுகின்ற விளைவுகளை கொண்டு அதை "கலாசார சீரழிவு" என்போமாகில் நம்மை விட முட்டாள்கள் வேறில்லை. இங்கு விளைவுகளை புள்ளிவிபரங்களாக சேகரிக்க தெரிந்த நமக்கு இவற்றினை தீர்ப்பதற்கான ஆரம்ப புள்ளியை இட தெரியவில்லை என்பது தான் கசப்பான உண்மை.

**தாயகத்தில் வேலை செய்கின்ற இடங்களில் பெண்களின் நிலை எப்படியாக இருக்கின்றது?**

இங்கு நீங்கள் வினவியுள்ள "தாயகம்" என்பது ஈழத்தினை மட்டுமன்றி முழு இலங்கையையும் குறிப்பிடுவதாக கொண்டு இதற்கு விடையளிக்க விரும்புகின்றேன். அலுவலகங்களில் நடைபெறுகின்ற வன்முறைகளில் சொல்லப்பட்டவைகளை விடவும் சொல்லப்படாதவை அதிகம். பேருந்தில் ஒருவர் உரசினால் உரத்த குரலில் ஏசுவதற்கே கூசுகின்ற ஒரு சமூகத்தினை தான் நாம் உருவாக்கி வைத்துள்ளோமே. அப்படியே கத்தினாலும் உரசின வரை விட்டுவிட்டு உரசுப்பட்ட பெண்ணை பார்வைகளால் சுடுகின்றவர்கள் அல்லவா நம்மவர்கள். இந்த விடயத்திற்கே இப்படியெனும் போது அலுவலக வன்முறைகளை ஒரு பெண் வெளியில் சொன்னால் அதை எத்தகைய கண்கொண்டு பார்ப்பார்களோ என பயந்து சொல்லாமலேயே சகித்து வாழ்பவர்கள்தான் அதிகம். வெளியில் சொல்லிவிட்டாலும் அப்படியொன்றும் தண்டனைகள் விஷமிகளுக்கு கொடுக்கப்பட்டு விடுவதில்லை. ஏன் சொன்னாய் சமாளித்து போ என்கின்ற நண்பர்களும், வேலை தேவையில்லை வீட்டிலிரு என்று சொல்கின்ற குடும்பங்களும், உனக்கு குறிப்பிட்ட நபருடன் தொடர்பிருக்கின்றது அது வெளியில் தெரிந்தவுடன் நடிக்கின்றாய் என்று சொல்கின்ற மேலிடங்களும் தான் பாதிக்கப்பட்ட பெண்ணை சுற்றியுள்ள சமூகம். இதை தாண்டி ஊடகத்திற்கு போனாலும் பாதிக்கப்பட்டவள் பற்றி விரிவாகவும் வன்முறை புரிந்தவர்களை ஒரு வரியிலும் சொல்லிவிட்டுப் போகின்றவையாக தான் பெரும்பாலான ஊடகங்களிருக்கின்றன.

இவ்வளவு ஏன் "வன்முறை" குறித்து கொட்டை யெழுத்தில் முன்பக்கத்தில் பிரசுரிக்கின்ற பத்திரிகை நிறுவனங்கள், ஊடகங்களில் கூட பெண்களுக்கு வன்முறைகள் இழைக்கப்பட்டுக்கொண்டு தானிக்கின்றன.

**தாயகத்தில் உள்ள இன்றைய தலைமுறை பெண்களிடையே அடிப்படை சிந்தனைகளிலே உச்சநிலை அடைந்திருக்கின்றனவா?**

பெரும்பாலானவர்களில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன என்று தான் கூறவேண்டும். இன்றையவர்கள் தம்முடைய பிரச்சினைகளை அணுகுவதற்கான வழிமுறைகளை தெரிந்து வைத்துள்ளார்கள். அவர்களுக்குரிய போதிய விழிப்புணர்வும் வழங்கப்பட்டுக்கொண்டுதானிருக்கின்றது.

**பெண்ணுக்கு எதிரியாக யாரை அடையாளப்படுத்துகின்றீர்கள்?**

முதல் எதிரியே அவளுக்கு அவள் தான். உள ரீதியான உறுதியின்மை, எதிர்த்து போராட பயப்படுதல் அல்லது இன்னொருவர் தன்னை பாதுகாக்க கூடும் என்கின்ற

மனநிலை தன்னுள் வளர்த்துக் கொள்ளல் என்பன அவளுக்குள்ளேயே அவள் உருவாக்கி வைத்திருக்கின்ற எதிரி. இதை கட்டுடைத்து வெளிவந்தாலே போதுமானது. அடுத்தவரை குற்றஞ்சாட்ட வேண்டியதில்லை.

**இளையவரான உங்களின் பார்வையிலே பெண்ணியம் பற்றிய புரிதல்தான் என்ன ?**

"ஆதிகாலத்தில் வேட்டையாடி மனிதன் வாழும் போது மாதவிடாய் நாட்களில் பெண்ணை குகைகளில் விட்டுச் செல்வான். காரணம் குருதிப்பெருக்கின் போது வருகின்ற வாடையில் மிருகங்கள் தங்களது இருப்பிடங்களை அறிந்து கொள்ளக் கூடாது என்பதற்காகவே. வீட்டில் விடப்பட்ட பெண் குழந்தைகளை பராமரிக்க ஆரம்பித்தாள்." இப்பகுதியை எங்கோ வாசித்ததாக ஞாபகம். இது அக்காலத்தில் ஏற்றுக் கொள்ளத்தக்கதான விடயமும் கூட. பின்னர் இதன் விளக்கம் புரியாமல் அல்லது வழமையை மாற்றிக்கொள்ள முடியாமல் போனமை ஒருவேளை பெண்ணுக்கு வீடும் ஆணுக்கு வெளியும் என்று ஆகியிருக்க கூடும். ஆனால் அதுவே பெண்ணடிமைத்தனத்திற்கு வித்திட்டிருக்குமோ என எண்ணத்தலைப்படுகின்றது. இவ்வாறு பல விடயங்கள் உண்டு. இதை புரிந்து பெண்ணுக்கும் ஆணுக்கு நிகரான உரிமை உண்டு என நிலைநாட்டுவதே என்னளவில் பெண்ணியம்.

அதற்காக என்னைச் சுற்றியுள்ள ஆண்கள் செய்கின்ற தவறுகளை நானும் பெண்ணியம் என்கின்ற பெயரில் செய்துவிடக்கூடாது என்கின்ற விடயத்தில் மிகவும் உறுதியாகவிருக்கின்றேன். அடுத்த விடயம் பெண்ணியம் பேசுகின்றோம் என்கின்ற ரீதியில் ஆண் பாலினத்தவர் மீதான காழ்ப்புணர்வினை வளர்த்தலிலும் எனக்கு உடன்பாடில்லை. வாழ்க்கை என்பது தனித்திருத்தல் அல்லவே. நாம் ஏதோ வொரு வகையில் இன்னொருவரை சார்ந்திருக்கின்றோம். இச் சார்ந்திருத்தல் என்பது அடிமைப்படுத்தல் ஆகிடகூடாது. அதேபோல் ஒரு பிரச்சினையை இருபக்கத்திலிருந்தும் ஆராய்ந்து பாலின வேறுபாடின்றி அணுகவேண்டும். பெண்களில் மாற்றத்தினை ஏற்படுத்தி சீர்செய்வதும் பெண்ணியம் தான். வெறும் எதிர்பாலினர் மீதான குற்றஞ்சாட்டல் அல்ல.

**ஆனால் எதிர்பாலினர் மீதான அதிக குற்றச்சாட்டுக்கள் தானே இன்று அதிகரித்துள்ளது ?**

இதில் ஏதும் கணிப்பு தவறில்லையே... நூற்றில் தொன்னூற்றொன்பது பெண்கள் ஏதோவொரு வகையில் வன்முறைக்குட்படும் இன்றைய நிலையில் இது சாத்தியமே. வீட்டில் தொடங்கி அலுவலகம் வரை எதிர்பாலினரது வன்முறைகள் இல்லாமலில்லை. ஆனால் அவர்களை மட்டுமே வன்முறைக்கு மேற்கோள் காட்டுவதனை தான் நான் சாடுகின்றேன். எல்லாவற்றிற்குமே இரு பக்கங்கள் உள்ளன. அந்த இரு பக்கங்களையும் நோக்க வேண்டும் என்பதே வாதம்.

**மூன்றாம் பால் இனத்தவர் மீதான உங்கள் பார்வை எப்படியாக இருக்கின்றது ?**

"மூன்றாம் பால்"என்கின்ற சொற்பிரயோகமே தவறு என்பது என் வாதம். "மூன்றாம் பாலினர்"என்பது திருநங்கை, திருநம்பிகளை குறிப்பிடின் முதலாம் பாலினர் யார்? இரண்டாம் பாலினர் யார்? பால் சமத்துவத்திற்காக போராடுகின்ற இன்றைய நிலையில் பாலின தரப்படுத்தல் தேவையற்றதொன்று.

என்னளவில் இவர்கள் குறித்து விழிப்புணர்வு எம் சமூகத்திற்கு இன்னும் அதிகமாக தேவைப்படுகின்றது. இவர்களது உடல், உள மாற்றங்கள் குறித்து நாம் தெரிந்து கொள்ள வேண்டும். இவர்களும் கடவுளின் படைப்பே. இவர்கள் குறித்த தவறான பாவையினால் இவர்களை இவ்வளவு காலமும் முடக்கிவைத்து விட்டோம் என்றே எண்ணத் தோன்றுகின்றது.

**மாற்றுப்பால் திருமணத்தை நீங்கள் வரவேற்கின்றீர்களா ?**

இது குறித்தான இருவித பார்வைகள் எனக்குண்டு. விஞ்ஞான பூர்வமான பார்வையில் இது அவர்களது உள, உடல் தேவையை பொறுத்தது. ஆனால் இன்னொரு' பார்வையில் இத்தகைய திருமணங்களால் குடும்பம் என்கின்ற கட்டமைப்பு உடைபடக்கூடும்.

**இன்றுள்ள வாழ்வியலில் சட்டப்படி திருமணம் செய்யாது ஆண்களும் பெண்களும் ஒன்றாக வாழ்வது சாதாரணமாகி வருகின்றது. இதுபற்றிய உங்கள் பார்வைதான் என்ன?**

இத்தகைய வாழ்வியலில் பொருளாதார, சமூக ரீதியான அனுகூலங்கள் உண்டு. தனிமனித சுதந்திரத்திற்கும் இத்தகைய வாழ்வியலில் நிறைய சுதந்திரங்கள் உண்டு. ஆனால் என் பார்வையில் இத்தகைய சுதந்திரங்கள், சட்ட ரீதியற்ற உறவுமுறைகள் சில தாக்கங்களை பிற்காலங்களில் ஏற்படுத்துகின்ற நிலைமை காணப்படுகின்றது. இதில் மிக முக்கியமானதொரு விடயமாக குழந்தை பெறுதல் மற்றும் வளர்த்தல் தொடர்பான நடைமுறை, சட்டசிக்கல்கள் என்பவற்றினை குறிப்பிடலாம்.

**நீங்கள் ஓர் ஊடகவியலாளராக தாயகத்தில் இருக்கின்றீர்கள். உங்களால் இந்த துறையில் சுதந்திரமாக இருப்பதாக உணர முடிகின்றதா ?**

இதற்கு "இல்லை; என்று சொல்லிவிட்டால் அது என் தோல்வி என்று தான் பார்க்கின்றேன். 30 வருட போரை சந்தித்த ஒரு நாட்டில் "ஊடகசுதந்திரம்" என்பது அவ்வளவு இலகுவாக இருக்காது. ஊடகவியலாளராக பணிபுரியும் போது பலவற்றினையும் எதிர்நோக்க வேண்டும் என்று அறிந்து கொண்டு தான் இதனை நேசிக்க ஆரம்பித்தேன். ஒரு வகையில் இவ் எதிர்ப்புக்களை அடைவுகளாக கொண்டு தான் செயற்படுகின்றேன். ஆனால் நான் "பெண் ஊடகவியலாளர்" அல்லது "தமிழ் ஊடகவியலாளர்" என்கின்ற பார்வையில் தான் பல பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கின்றது.

**ஊடகவியல் துறையில் பெண் என்ற காரணத்துக்காக உங்கள் நிலைப்பாடுகள் மறுதலிக்கப்பட்டிருக்கின்றவா?**

ஆம். இதற்கு ஒரு உதாரணமாக நான் செய்தியாசிரியர் தேர்வுக்கு சென்றிருந்த போது அவர்கள் என்னை மறுத்தமையை குறிப்பிடலாம். இப்படி பல கசப்பான உதாரணங்கள் உண்டு. இரவில் பெண் பணிபுரியக்கூடாது, பாதுகாப்பு குறைவு, என பலவற்றினை காரணமாக அவர்கள் அடுக்குகின்றார்கள்.ஒரு ஊடகவியலாளருக்கு பாதுகாப்பு கொடுக்க முடியாத ஊடக நிறுவனங்கள் எப்படி நாட்டின் நாலாவது தூணாகப் போகின்றது என்கின்ற கேள்வியும் எனக்குண்டு.

**"தமிழ் ஊடகவியலாளர்" என்கின்ற பார்வையில் தான் பல பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கின்றதாக சொல்கின்றீர்கள். குறிப்பாக**

**எப்படியான பிரச்சனைகளை எதிர்கொள்கின்றீர்கள் ?**

சிறுபான்மையினரது பிரச்சினைகளை யாரெல்லாம் வெளியில் கொண்டு வருகின்றார்களோ அவர்களை தீவிரவாதிகளாக பார்க்கின்ற மனப்பாங்கு அநேகர்களிடம் இருக்கின்றது. இது இலங்கைக்கும் பொருந்தும். இந்நிலையில் அடக்கப்பட்டுக்கொண்டிருந்த தமிழினத்தின் பிரச்சினைகளை வெளிக்கொணர்கின்ற அல்லது வெளிக்கொண்டு வந்த "தமிழ் ஊடகவியலாளர்" எத்தகைய அழுத்தங்களை கடந்திருப் பார்கள் என்பது அனைவரும் புரிந்துகொள்ளக்கூடியது. அடுத்தது மொழிப் பிரச்சினை. தமிழ் மக்களுடைய பிரச்சினைகளை பெரும்பான்மையின தலைவர்கள் மற்றும் மக்களிடம் கொண்டு சேர்ப்பதும், இராணுவத்தினரிடமிருந்து தப்புவ தற்கும் மொழி தெரிந்திருக்க வேண்டும். இது அடுத்த சவால். இதனை விடவும் "தமிழ் ஊடகபெண்கள்" குறித்த சமூக பார்வை. எந்த ஈழத்தமிழ் ஊடகத்திலாவது பெண் ஆசிரியர்கள் இருக்கின்றார்களா? பொதுவெளிக்கு பெண் வந்துவிட்டாலே அவளை தாறுமாறாக விமர்சிப்பதில் எம்மவர்களது பங்கு அதிகம் என்று தான் சொல்ல வேண்டும். இந்நிலை ஆங்கில ஊடகங்களிலோ அல்லது சிங்கள ஊடகங்களிலோ ஒப்பீட்டளவில் குறைவு. ஆக "தமிழ் ஊடகவியலாளர்" என்றாலே சவாலானதொரு விடயம் தானே ?

**போர் இருந்த பொழுதும் இல்லாத பொழுதும் ஊடகசுதந்திரமானது குறிப்பிடும்படியான மாற்றங்களை கண்டுள்ளதா ?**

இன்றைய ஊடக சுதந்திரத்தின் வளர்ச்சியை காட்டுவதற்கு "புனைப்பெயர்" என்கின்ற குணங்காட்டியை குறிப்பிடலாம். முன்னர் பலர் அழுத்தங்கள் காரணமாக புனைப்பெயரில் எழுதினார்கள் இன்று அநேகர்கள் தம் சொந்தப்பெயரில் தான் எழுதுகின்றார்கள். மாற்றங்களை புரிந்துகொள்ள இதுவே போதுமானது. போர் இருந்த பொழுது ஒரு பகுதியினர் மட்டுமே வெளிக்கொணர நினைத்த விடயங்களை இன்று பலரும் பகிரங்கமாக முன் வைக்கின்ற அளவு ஊடகசுதந்திரம் மாற்றமடைந் துள்ளது. இன்னும் சொல்லப்போனால் முன்னரை விட இப்போ தெல்லாம் இருபக்க தவறுகளும் விமர்சிக்கப்படுகின்றன. உதாரணத்திற்கு போர் இருந்த போது விடுதலைப்புலிகளை விமர்சித்தவர்களுக்கும் பிரச்சினைகள் இருந்தன. அரசாங்கத்தினை விமர்சித்தவர்களுக்கும் பிரச்சினைகள் இருந்தன. ஆனால் இன்று இந்நிலை இல்லை. இதற்கு சமூக ஊடகங்களின் வளர்ச்சியுமொரு காரணம்.

**ஒரு காலகட்டத்தில் சாதீய அடக்கு முறைகளில் இருந்து மீளுவதற்காக தாழ்த்தப்பட்ட சமூகத்தில் இருந்த பலர் கிறீஸ்தவ சமயத்துக்கு மாறினார் கள். ஆனால் இன்றோ சாதிய அடக்குமுறையானது கிறீஸ்தவ சமூகத்தையும் விட்டுவைக்கவில்லை என்றவோர் குற்றச்சாட்டு உண்டு. இந்த விடயத்தை நீங்கள் எப்படியாகப் பார்க்கின்றீர்கள் ?**

"தாழ்த்தப்பட்ட சமூகம்" யார் தாழ்த்தினார்கள்? ஏன் தாழ்த்தினார்கள்? என்பதற்கே எமக்கு விடை தெரியாது. நானறிந்த வகையில் பதவிகளுக்கு ஆசைப்பட்டு தான் மதம் மாறினார்கள் என்று அறிந்திருக்கின்றேன். ஒருவேளை ஒரு சிலர் தவிர ஏனையவர்கள் பக்தியினாலும் மாறியிருக்க கூடும். இவ்வாத பிரதிவாதங்கள் எதுவுமே உறுதிப்படுத்தப்பட்டவை யல்ல. அடுத்தது கிறீஸ்தவத்தில் நம்பிக்கை அல்லது கொள்கை அடிப்படையில் தான் பிரிவுகள் உண்டே தவிர சாதியம் இருப்பதாக தெரியவில்லை.

**கிறீஸ்தவத்தில் நம்பிக்கை அல்லது கொள்கை அடிப்படையில் தான் பிரிவுகள் உண்டே தவிர சாதியம் இருப்பதாக தெரியவில்லை. என்று சொல்கின்றீர்கள் ஆனால் இதுவரையில் வடக்கிலும் சரி கிழக்கிலும் சரி ஒடுக்கப்பட்ட சாதிப்பிரிவில் இருந்து யாரும் கிறிஸ்தவ மடாலயங்களின் ஆயர்களாக வரவில்லையே ?**

இந்த வினாவிலேயே குழப்பம் இருப்பதாகபடு கின்றது. வடக்கில் இன்றும் கூட சாதிப்பிரிவினைகள் உண்டெனினும் கிழக்கில் சாதியப்பிளவுகள் இல்லை. அடிமட்டத்திலிருந்து உயர் மட்டம் வரை கிழக்கில் சாதியடிப்படையில் எதுவும் தீர்மானிக்கப்படுவதில்லை. இது முதலாவது விடயம். அடுத்தது கிறிஸ்தவத்தினை பொறுத்தளவில் இறுதி முடிவுகளை எடுப்பவர் போப் ஆண்டகை அவர்கள். இது ஆயர்களின் நியமனங்கள் உட்பட அனைத்திற்கும் பொருந்தும். அப்படியிருக்கும் போது ஆயர் தெரிவிலும் சாதியம் இருக்கின்றது என்பதை ஏற்கமுடியாது. ஆனால் சில ஆயர்கள், குருக்கள் சாதிப்பிரிவினை அடிப்படையில் இயங்குவதாக அறிந்திருக்கின்றேன். ஆதாரங்கள் இல்லை. அத்துடன் இது அவர்களது தனிப்பட்ட தீர்மானங்களின் வெளிப்பாடே தவிர கிறிஸ்தவத்தின் நிர்வாக அமைப்பின் வெளிப்பாடல்ல.

**"அண்மையில் குட்டி ரேவதி, நிர்மலா, கொற்றவை, அர்ச்சனா போன்ற பெண்ணிய எழுத்தாளர்கள் தாம் உயர்ந்த சாதியை சேர்ந்தவர்கள் ஆனால் சாதிப்படுகொலைகளை கண்டிக்கின்றோம்; என்று ஓர் நிலத்தகவலை சமூக வலைத்தளங்களில் பரவிட்டார்கள். ஆனால், இது சாதீயம் மீதான அவர்களது பார்வையை கேள்விக்குட்படுத்துகின்றதே ?**

நானும் இத்தகவலை பதிவிட்டு "எது உயர்சாதி? யார் ஆதிக்கசாதி?" என் கேட்டிருந்த போது கொற்றவை இதற்கு "இதன் முழுவிளக்கம் தெரியாமல் குறிப்பிட்ட இணையதளம் தம்மை அணுகி தங்களது பெயரையும் இணைத்து கொள்ளவா? என கேட்ட போது தாங்கள் சம்மதித்ததாகவும் அதன் பிறகு இந்நிலைத்தகவலை பார்த்ததாகவும் இது குறித்து தாங்கள் வினவியதற்கு தள பொறுப்பினர் பகிரங்க மன்னிப்பு கோரியதாகவும் அகற்றும் படியும் தெரிவித்ததுடன் ஏன் தன்னிடம் இது குறித்து வினவவில்லை" என்றும் கேட்டிருந் தார். இது குறித்த விளக்கத்தில் என்னளவில் குழப்பங்கள் பலவுண்டு.

"நான் உயர் சாதியினை அல்லது ஆதிக்க சாதியினை சேர்ந்தவள் நான் ஆணவக்கொலையை கண்டிக்கின்றேன்" என சொல்வதை விட "நான் சாதியற்றவள்..." என்று தொடங்கி முடித்திருந்திருக்கலாம். எதுவாகினும் தன்னைத் தானே உயர் அல்லது ஆதிக்கம் என முன் எது உயர்? எப்படி உயர்வாக முடியும்? என்று அலசவேண்டும். இதையும் தாண்டி அவர்கள் அப்படியொரு பதிவிற்கு சம்மதமளித்திருப்பின் அது "படிப்பது தேவாரம் இடிப்பது சிவன் கோயில்" என்கின்றதொரு விடயம் போன்றதே.

**ஈழத்து அரசியல் நிலைப்பாடுகள் பெண்விடுதலைக்கு எத்தகைய பங்களிப்பினை வழுங்கியிருக்கின்றன ?**

ஈழத்து அரசியல் ஆகட்டும் இலங்கை அரசியலா கட்டும் ஏன் எந்த நாட்டு அரசியலாகட்டும் பெண்விடுதலைக் கான பங்களிப்பிளை அதுவாக வழங்கிவிடவில்லை, வழங்கப் போவதுமில்லை. போராடித்தான் வாங்க வேண்டியுள்ளது. இந்த விடயத்தில் விடுதலைப்புலிகள் இருந்திருந்தால் ஓரளவு

சமவுரிமை அரசியலில் கிடைத்திருக்க கூடும் என்பது என் வாதம். ஆயுதப் போராட்டத்திலேயே சமவுரிமையை பெண்களுக்கு வழங்கியவர்கள் அல்லவா? ஆனால் இன்றைய அரசியல் தலைவர்கள் அப்படியொன்றும் தாமாகவே தரும் நிலைப்பாட்டில் இல்லை. இதற்கு அண்மையில் உருவாக்கப்பட்ட தமிழ்மக்கள் பேரவை நல்லதொரு உதாரணம். ஒரு பெண் பிரதிநிதி கூட அவ்வமைப்பில் இல்லை. போருக்கு பின்னர் தமிழ் சமூககட்டமைப்பினை பொறுத்தளவில் அதிகம் பெண் களே இருக்கின்ற போதும் ஒரு பிரதிநிதி இல்லை என்பதே போதுமே நம் ஈழத்து தமிழ் அரசியலில் பெண் பங்களிப்பைப் பற்றி புரிந்துகொள்வதற்கு. இதற்கு மேல் இலங்கை அரசியலை ஆராயாமலே முடிவுக்கு வரலாம்.

பிரதிநிதிகளே இல்லாத போது அல்லது மிக சொற்பமாக இருக்கும் போது இவர்களது அரசியல் அமைப்புக்கள் எப்படி பெண்விடுதலைக்கு பங்களிப்பினை வழங்கப்போகின்றது?.

**தமிழ் முஸ்லிம் முரண்கள் பற்றிய உங்கள் அவதானம் என்ன ?**

"முரண்கள்" என்று முதல் ஆராய்வதை விட முரண்களுக்கு முன்னரான நிலையை சிறிது அலச நினைக்கின்றேன். எனக்கு இரு தலைமுறைகளுக்கு முந்தின குடும்ப உறவினர்கள் பேசும் போது அவர்களுக்கு நெருங்கிய நண்படகளாக முஸ்லிம் நபர்கள் தானிருந்திருக்கின்றார்கள். அவர்களுள் தனி நபர் என்கின்றதையும் தான் குடும்ப நட்பு என்கின்ற ரீதியில் தான் உறவுகள் இருந்திருக்கின்றன. அடுத்த தலைமுறையில் இருந்து தான் பிரச்சினைகள் ஆரம்பித் திருக்கின்றன. இதையே அரசியல் ரீதியாக பார்க்கும் போது முன்னர் எமக்கு பொது எதிரி "ஆங்கிலேயர்" இக்கால கட்டத்தில் எம்முள் பிணைப்பு இருந்திருக்கின்றது. பின்னர் அதுவே நமக்குள் பிளவுகளாக வெடித்திருக்கின்றது. எனக்கு இது "அடையாளத்தினை முன்நிறுத்தல்" என்கின்ற அடிப்படையிலானதொரு பிளவாகவேபடுகின்றது.

இன்று ஏற்பட்டுள்ள தமிழ் - முஸ்லிம் பிளவுகளுக் கான கீறல்கள் எங்கு? எப்படி? உருவாகின என அடையாளப் படுத்திக் கொள்ள வேண்டிய தேவையுண்டு. சிறுபான்மை யினர் பிளவுபடும் போது அது பேரினவாதிகளுக்கு களமமைத்துக் கொடுத்துக்கொண்டிருக்கின்றது. பலர் இதை வைத்து தான் அரசியலும் செய்து கொண்டிருக்கின்றார்கள். தமிழ் - முஸ்லிம் உறவுகள் பலப்படும் போது அது தமிழ் - முஸ்லிம் - சிங்கள உறவு என விரிவடைவதற்கான வாய்ப்பு களும் உண்டு. எப்படி எமக்கு 1948 ற்கு முன் பொது எதிரி இருந்ததோ அதை போல் இன்று "பொது எதிரிகள்" காத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

**சமகாலத்தில் ஒரே தாய் மொழியை கொண்ட இந்த இரு இனங்களின் முரண்கள் எந்த அளவுக்கு நீர்த்துப் போய் உள்ளன ?**

இங்கு "ஒரே தாய்மொழி; என்பது பிழை என்றே எண்ணுகின்றேன். முஸ்லிம்கள் மத்தியகிழக்கினரின் வம்சாவழிகள் அவர்களது தாய்மொழி அரபு. ஆனால் இணைந்து வாழ்தலுக்கான பொது மொழி தான் தமிழ். ஆக "ஒரே மொழி பேசும்" என்று திருத்திக்கொள்ள வேண்டும். தமிழ் - முஸ்லிம் இன முரண்கள் பின்னரான நல்லிணக்கம் இவற்றிற்கு கிழக்கிலங்கையை உதாரணமாக கொள்ளலாம். 90 காலப்பகுதிகளில் தமிழ் - முஸ்லிம் கலவரம் வெடிப்பதற்கு முன் இரு இன வீட்டு விசேடங்களிலும் இரு பக்கத்தினரும் பங்கெடுப்பர். பொங்கலை முஸ்லீம்களும் வட்டிலப்பத்தினை தமிழர்களும் ருசித்த நாட்கள் பல இருந்தன. அயலவர்களாக இருந்தவர்கள் 90 இன் பின்னர் தனித் தீவுகளாகி விட்டிருந் தனர். மட்டக்களப்பு நகரத்தின் ஒரு பக்கத்தில் காத்தான் குடி மறு பக்கம் ஏறாவூர் நடுவில் மட்டு நகர். பிளவின் பின்னர் ஏற்பட்ட கட்டமைப்பு இது. இன்று இரு இனத்தவர்களுக்கு மிடையில் சுமுக உறவு நிலவுகின்றது. ஆனாலும் ஒருவித இடைவெளி நிலவிக்கொண்டுதானிருக்கின்றது. இது வெளிப் பார்வைக்கு தெரியாவிடினும் மனதளவில் தொடர்கின்றது.

உறவுகள் என்றும் கண்ணாடி பாத்திரம் போன்றது. கீறல் விழும் வரை உபயோகிக்கலாம். வெடிப்பு வந்த பின்னர் வேண்டுமாயின் ஒட்டி வைத்து அழகு பார்க்கலாமே தவிர மீண்டும் பாவிப்பது கடினம். இது போல் தான் இன்றும் கிழக்கில் தமிழ் - முஸ்லிம் உறவுகள் தொடர்கின்றன. சிறு அழுத்தம் கூட வெடிப்பை உருவாக்கலாம்.

**வடக்கில் இருந்து ஒரே இரவில் முஸ்லிம்களின் வெளியேற்றத்தை நீங்கள் எப்படிப் பார்க்கின்றீர்கள் ?**

இதற்கு வெளியேற்றியவர்கள், அவர்களது பிரதிநிதி கள், விமர்சகர்கள், ஆதரவாளர்கள் என பலர் பலவித வாத பிரதிவாதங்களை அன்றிலிருந்து முன்வைத்து வருகின்றனர். ஆனால் இந்த வெளியேற்றத்தினை பற்றி முஸ்லிம் குடும்பங் களுடன் சேர்ந்து பழகிய ஒரு தனி மனிதனை அல்லது மனுஷியை கேட்டுப்பாருங்கள் தங்களது கண்டனங்களை தான் தெரிவிப்பர்கள். இதையே தான் ஒரு மனுஷி என்கின்ற ரீதியில் நானும் பார்க்கின்றேன். ஆயிரம் காரணங்கள் இருக்கட்டும் ஒரு தனிமனிதனை கூட அவன் பரம்பரையாக வாழ்ந்த இடத்திலிருந்து வெளியேற்றியது அதுவும் ஆயுத முனையில் வெளியேற்றியது மகாதவறு. இதை யாரும் நியாயப்படுத்தினால் நானும் அவர்களிடம் தமிழர்களை இராணுவம் வெளியேற்றியதும் சரி என்று தான் வாதிடுவேன். இன்று காணிப்பிரச்சினைகள், நில அபகரிப்புக்கள் குறித்து எழுதும் போது நானும் என்னை கேட்டு சுயபரிசோதனை செய்து கொள்கின்றேன். இது குறித்த போராட்டங்களை அரசுக்கெதிராக முன்னெடுத்து "எம் காணிகளை விடுவி யுங்கள்" என்கின்ற பதாகைகளை காணும் போது நானும் என்னுள் சிரித்து கடக்கின்றேன் என்று வடக்கில் முஸ்லிம் களது காணிகளை திருப்பி கொடுக்க போகின்றோம் என்று நினைத்தபடி....

**தமிழ் இலக்கியப் பெருவெளியில் உங்கள் பேனாவுக்கென்று தனிப்பட்ட மொழி ஏதாவது இருக்கின்றதா ?**

நண்பர்கள், சக எழுத்தாளர்கள் என்னிடம் பேசிய மட்டில் என் எழுத்துக்கள் காரமானதாகவும் நிர்வாண மானதாகவும் இருப்பதாக பல முறை கூறியிருக்கின்றார்கள். என் னளவில் எதையும் இணைக்காமல் அதனதன் உள்ளடக்கங்களுடன் எழுதுகின்றேன். என்னுடைய அம்மா அடிக்கடி என்னிடம் ஒரு சம்பவம் முடிந்தவுடன் அது குறித்து கோபத்துடன் எழுதாமல் ஆறஅமர எழுதும் படி கூறுவார். காரணம் எழுத்து காரமாக இருக்கின்றதாம். ஆனால் எனக்கும் நினைத்ததை எழுதுகின்றேன் என்கின்ற திருப்தி மட்டும் என்றும் உண்டு. எழுதி முடித்த பின் இதை விட மென்மையாக எழுதியிருக்கலாம் அல்லது சில சொற்களை தவிர்த்திருக்கலாம் என்று வருந்திய நாட்கள் அதிகம். ●

## ஆதங்கம்

தொட வளர்ந்த மரங்களிடையே
மனமெல்லாம் உன் நினைவாய் நானே!
உலவுகின்றேன் உனை நாடியே ,
நிலாக்கரைகளிலும் அதை தேடியே!

வண்ண வண்ண மலர்களாய் வழிநெடுக,
சொரிந்து வரும் இலைகளின் இடைவெளியில்,
தேடுகிறேன் உன் வரவை எண்ணி,
ஓடுகிறேன் உன் பெயர் சொல்லி.

விவாதத்தில் வென்றிடவே,
விதண்டாவாதம் புரிந்தேன்.
விரோதியாக உனை எண்ணி,
வீறாப்பாய் பேசி நொந்தேன்.

வினாக்களுக்கு விடை தெரிந்தும்,
வேண்டுமென்று போர் தொடுத்தேன்.
வேடிக்கையான உன் பதிலுக்கெல்லாம்,
விசமத்தனமாய் நகைத்தும் கொண்டேன்.

விரும்பியே ரசித்தேன் உனது,
விறு விறுப்பான விமர்சனத்தை.
வெறுப்பது போல நடித்தேன்,
வேண்டாதவன் நீதானென்று.

மோதலில் ஏற்பட்ட காதலடா இது,
மோகத்தினால் வந்ததல்ல.
அன்பினால் இணைந்தோமடா
ஆயுள் முழுக்க நீ வேண்டும்.

கை கோர்த்து கதை பேச,
கண்ணா நானுன் மீராவாய்.
தோளுக்குள் புதைந்துருக
தோழமையாய் உன்னோடு.

கொஞ்சிப் பேசும் மழலையாய்,
கூடவே வரும் உன் தேவியாய்,
அரவணைக்கும் அன்னையாய்,
ஆதரிக்கும் இனிய ஆசானாய்.

இன்னுமின்னும் சொல்வேனடா!
எந்தன் அன்புக்குரியவனே!
உந்தன் காதல் நிறைவேறுமா?
எந்தன் ஆசையும் கைகூடுமா?

இரண்டுமே நிறைந்து விட்டால்,
இருவரும் அதிஷ்டசாலிகளே!

- மஞ்சு -



## காலம் பிழைத்த காட்சிகளில்

மண்ணுக்குள்
பெண் இன்று
மகத்துவங்கள்
புரிந்தாலும்
கண்ணுக்கு முன்னே
இன்னமும் சில
காட்சிகளில்
மாற்றமில்லை
பெண்ணை
வெறும் உடலாய்
தோலுரித்துக் காட்டும்
வக்கிரத்தின் வெளி
இன்னமும்
வலிமையாகிவிட
மறுபுறமோ
ஆடைகுறைப்பு
அலங்காரம் என
பெண்ணும்
இதற்கு உடந்தையாகி விட
எவரில் பிழை சொல்ல
காலம்
பிழைத்த காட்சிகளில்
நின்றழுகிறது
மனம்

- புலோலியூர் வேல்நந்தன் -

## எவன் மனிதமுக மிருகன்

காமுகன் வெறியாட்டம்
தொடருது தொடருது
கன்னியர் அவலச் சாவும்
தொடருது தொடருது
துன்பமும் துயரமும்
மண் மூடிப் பரவுது
சட்டமே தூங்குது
ஆட்சியோ பம்முது
சனங்களே ஏங்குது
அழுகுது பதறுது

பயிரை விளைவித்தவனும்
மேய்கிறான்
பக்கத்து வீட்டுக்காரனும்
மேய்கிறான்
பரப்புக் கடந்து வந்தவனும்
மேய்கிறான் மொத்தத்தில்
விளைநிலங்கள்
சிதைந்தழிகின்றன.

வடக்குப் பரப்புக்குள்
துட்டத் தனங்களை
விதைத்தவன் யார்?
முட்டும் பகைவனா?
முக்காடு போட்ட
நம்மவனா?

பகுத்தறிய
முடியவில்லையே
பக்கத்தில் நிற்பவனை
பகுத்துறங்க முடியவில்லை
உறவு சொல்லி
உள் வருபவனால்

காவி உடுத்தவனை
கற்கை நெறி ஊட்டுபவனை
கடை உரிமையாளனை
இப்படியே நீளும் பட்டியலுடன்
எவன் மனிதன்
எவன் மனிதமுக மிருகன்
என கணித்தறிய முடியவில்லை
பாவம் பெண்ணினம்
பரிதவிப்பும் பதட்டமும் மனம்சூழ
நெறி காத்து வாழ முடியாமல்
வெறி நாய்களுக்கு இரையாகி
சாகும் நிலைதான்
விதியோ?

- அல்வாயூர் சிவ.சிவநேசன்

அலெக்ஸ் பரந்தாமன்

# மத்தேயு 24:4

"வருத்தப்பட்டுப்பாரம் சுமப்பவர்களே! நீங்கள் எல்லோரும் என்னிடத்தில் வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். (மத்தேயு 11:28)" எனும் வாசகம் தாங்கிய பெரியதொரு பதாகை அந்த வேத சபையின் முன்வாசலின் மேல் பொருத்தப்பட்டிருந்தது.

அவன் தினமும் அந்தப்பிரதான வீதியால் வேலைக்குச்சென்று வரும்போது அவ்வேத வாசகங்கள் அவனது பார்வையில் தென்படும். அவன் அவற்றை தன் மனதுக்குள் வாசித்துக்கொண்டே செல்வான்.

வசனத்தின் உட்கருத்து அவனுக்கு ஓரளவு விளங்கிக் கொண்ட நிலையிலும், அதைக்குறித்து மேற்கொண்டு ஆராயவோ அன்றி அந்த வேதசபையுடன் தொடர்பு கொண்டு, அறியமுற்படவோ அவன் விரும்பியதில்லை.

ஆனால்... இப்பொழுது அந்த வேதவசனம்... அவனுள் பலவாறான சிந்தனைகளைக் கிளறிவிட்டிருந்தது. "வருத்தப்பட்டு பாரம் சுமப்பவர்கள்" அதற்கான "இளைப் பாறுதல்" என்ற வார்த்தைகளைத்தேடி.... அவனது மனம் ஆவல்கொள்ளத் தொடங்கியது.

காரணம் -

அவன் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்ந்து கொண்டிருந்தான்.

பட்டணத்தில் உள்ள ஒரு மொத்த சில்லறை பல் பொருள் வாணிப நிலையமொன்றில் விற்பனைப் பணி யாளனாகக் கடமையாற்றிக் கொண்டிருந்தான். வாழ்வின் பிற்காலத்தேவைக்கு மிச்சம் மீதியில்லாத, மட்டுப்படுத்தப் பட்ட மாதவருமானத்தோடு, அவனது குடும்ப வாழ்க்கை நகர்ந்து கொண்டிருந்தது மிகவும் நெருக்கடிமிக்கதாக.

மனைவி மற்றும் இரண்டு பிள்ளைகளுடன் வருத்தப்பட்டுப் பாரம் சுமக்கும் அவனுக்கு, அவசியமானதும் அவசரமானதுமான மனதுக்கிதம் தரும் இளைப் பாறுதல் தேவைப்பட்டது.

சாதியப்பிரச்சினை காரணமாக அவனதும் அவளதும் பெற்றோர்கள் அவர்கள் இருவரையும் தங்களிடமிருந்து, ஒதுக்கிவிட்ட பின்பு, சமூகத்தில் வருத்தப்பட்டு பாரம் சுமப்பதே அந்த இருவரினதும் வாழ்வாகிப்போனது

சில நாட்களில், விடுமுறை தினமான ஞாயிற்றுக் கிழமைகளில் வாணிப நிலையத்தில் உள்ள பொருட்களை "இருப்பு" எடுப்பதற்காக அவன் அங்கு செல்லும் போது, அந்த வேதசபையில் வெள்ளை நிற உடுப்புக்களுடன் பலர் நிற்பதையும், ஆராதனை மற்றும் ஜெபவழிபாடுகள் என்பன அங்கு நடைபெறுவதையும் அவன் கண்டு கொள்வான்.

ஒரு நாள் ஞாயிற்றுக்கிழமை வாணிபக்கடையில் ஏதோ வேலையிருப்பதாக தன் மனைவியிடம் பொய்கூறி விட்டு, அவன் அந்த வேதசபைக்குச் சென்றிருந்தான். நெற்றியில் விபூதிப்பூச்சுடன் சென்றிருந்த அவனை அங்கு நின்ற பலர் உன்னிப்பாகப் பார்த்தனர்.

"சபைக்கு புதிசு போலக்கிடக்குது. ஒரு ஆத்மா மேலதிகமாகக் கிடைச்சிருக்கு"!

வெண்சீலை அணிந்த ஒரு இளம் பெண் தனக்குப் பக்கத்தில் நின்ற ஒரு நடுத்தர வயதானவரிடம் கூறுவதை அவன் செவிகள் உள்வாங்கிக்கொள்கின்றன.

அவன் திரும்பி அப்பெண்ணைப் பார்த்தான். பெண்ணுக்குப் பக்கத்தில் நின்றவர், அவனைப் பார்த்து மெலிதாக முறுவலித்துவிட்டு அவனருகில் வந்தார்.

"தம்பி! நீர் இண்டைக்குத்தான் இஞ்சை வந்திருக்கிறீரோ....?"

"ஓமோம்..."

"எங்கையிருந்து வாறீர்...?"

அவன், தான் இருக்கும் இடத்தைக்கூறினான்.

"அப்ப கனதூரமில்லை.."

"ஓமோம்...."

"ஆண்டவர் இண்டைக்கு உம்மை இஞ்சை அழைத்தமைக்காக அவருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம்..." எனக்கூறிய அவர், தனது கரத்தில் இருந்த பரிசுத்த வேதாகமத்தை விரித்து, அதில் உள்ள சில வசனங்களைக் கூறிவிட்டு, அவனுக்கு அவ்வசனங்கள் கூறும் அர்த்தத்தைப் போதிக்கத் தொடங்கினார்.

அவனும் அவர் கூறுவதை பொறுமையாகக் கேட்டுக்கொண்டிருந்தான். அவர்கள் இருவரையும் புதினம் பார்க்கும் விழிகளுடன் அவர்களைச் சுற்றி வேறு சிலர் நிற்க... நேரம் நகர்ந்து ஒன்பது மணியாகியது

அவனுக்கு வேதவசனத்தைப் போதித்துக் கொண்டிருந்தவர், தன் போதனையை அவசரமாய் முடித்துவிட்டு, அவனைப் பார்த்துக்கூறினார்.

"ஆராதனைக்கு நேரமாகிவிட்டுது. மணியடிச்சிட்டுது. வாரும் மண்டபத்துக்குள்ள போவம்..." என அவனையும் அழைத்துக்கொண்டு மண்டபத்துக்குள் சென்றார்.

மண்டபத்துக்குள் ஆண்கள் ஒரு புறமாகவும் பெண்கள் இன்னொரு புறமாகவும் அமர்ந்திருந்தார்கள். கீழே உட்கார முடியாத முதியவர்களுக்கு ஓரிடத்தில் ஆசனம் ஒதுக்கப்பட்டிருந்தது. மண்டபத்தினுள் நிலவிய குளிர்மையான காற்றும் அமைதியான சூழ்நிலை அவன் மனதை வெகுவாக ஈர்த்துக்கொண்டது.

ஆரம்பமாகிறது ஆராதனை!

எல்லோரும் கண்களை மூடிக்கொண்டார்கள்.

மண்டபத்துள் உட்கார்ந்திருப்பவர்களுக்கு எதிரே, இரண்டடி உயரமான மேடையில் சில போதகர்கள் கண்களை மூடிய நிலையில் ஜெபம் செய்யத் தொடங்கினார்கள்.

ஆரம்பத்தில் சபைக்காகவும் நாட்டுக்காகவும் பலரது வேண்டுதல்களுக்காகவும் ஜெபம் செய்யப்பட்ட பின், சில பாடல்கள் தமிழ், ஆங்கில மொழிகளில் பாடப்பட்டன. அதன்பின்பு, அங்குள்ள தலைமைப் போதகரால் சுவிஷேசம் பிரசங்கிக்கப்பட்டது மனம் திரும்புங்கள் (மத்தேயு -3:2) எனும் தலைப்

பில் புறஜாதியர் (இரட்சிக்கப்படாதவர்கள்) ஆண்டவரை இரட்சகராக ஏற்றுக்கொண்டு..... பாவ அறிக்கையிட்டு, மனம் திரும்பி ( திருந்தி) புது மனிதனாக வாழ வேண்டிய அவசியத்தை வேதாகம வசனங்களூடாக போதகர் உரையாற்றி முடித்தார்.

அவரது போதனை உரை அவனுக்கு பிடித் திருந்தது. அடுத்த ஞாயிற்றுக்கிழமையும் வரவேண்டும்... என அவன் தனக்குள் தீர்மானித்துக்கொண்டான். ஞாயிறு தினங்கள் நான்கு சென்றுவிட்டன. சபையில் . இப்போது அவன் பலரது கவனத்திற்கும் ஆளாகியிருந்தான் தலைமைப் போதகரின் பார்வைக்கும் உட்படுத்தப்பட்டான்

அவனுக்கு இங்குள்ளவர்களின் பேச்சு பிடித் திருந்தது... மண்டபத்தினுள் நிலவும் குளிர்மை பிடித் திருந்தது.... இவற்றைவிட அவனுக்கு இயேசுவைப் பிடித்திருந்தது.

அவனது மனம் வேதவசனங்களின் பின் மெல்ல மெல்ல திரும்பிக்கொண்டிருந்த வேளை, அவன் குடும்பத் தினுள் பெரும் பிரளயமும் வெடிக்கத் தொடங்கியது.

அவன் பாதை மாறிச்செல்கிறான்... மதம் மாறப்போகிறான்... என்பதை அவனது மனைவி அறிந்து கொண்டதும், அழுது குளறத்தொடங்கினாள்.

"இஞ்சருங்கோ உங்களுக்கு இயேசுவைப் பிடிச்சிருந்தால் அதை உங்களோடை வைச்சு மனசால கும்பிடுங்கோ. ஆனால் மதம் மாறாதையுங்கோ. நான் உங்களோடை வந்தாப்பிறகு, உங்கட இனம் சனம் சாதி குறைஞ்சவளோடை ஓடிப்போனதெண்டு ஒண்டுமே எங்களை நாடுதில்லை. இந்தநிலையில் நீங்கள் மதம் மாறிப்போனதெண்டு அறிஞ்சால், கதைக்கிற ஆட்களும் எங்களோடை கதைக்காமல் போயிடுவினம். ஐயோ! மதம் மாறாதையுங்கோ... எல்லாம் அங்கை கொஞ்ச நாளைக்குத் தான் பிறகு சீ.... எண்டு போயிடும்..."

அவள் அவனது கால்கள் இரண்டையும் கட்டிப்பிடித்தபடி.... அழுது கொண்டிருந்தாள்.

அவனுக்கோ மனைவியின் வார்த்தைகள் செவிகளில் ஏறவில்லை. அவள் கண்களில் இருந்து வழிந்த கண்ணீரோ அவன் பார்வைக்குப் புலப்படவில்லை. வாழ்க்கையில் வருத்தப்பட்டு, பாரம் சுமந்து நிற்கும் அவனுக்கு, ஏதொவொரு இளைப்பாறுதல் அங்கு கிடைப்பதாகவே தென்பட்டது.

அதன் நிமித்தம் அவன் தன் மனைவியின் கருத்துக் களை அலட்சியம் செய்துவிட்டு, "ஞானஸ்ஞானமுழுக்கு" பெற்றுக்கொண்டான். பிறப்பிலிருந்து வழங்கப்பட்டு வந்த அவனது இந்துப்பெயருக்குப் பதிலாக, இப்பொழுது அந்தச்சபையில் உள்ள எல்லோரும் அவனை ஒரு கிறிஸ்தவப்பெயரால் அழைக்கத் தொடங்கியிருந்தார்கள்

அவன் ஒழுங்காக ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை களிலும் அந்த வேதசபைக்குப் போய்வந்து கொண்டிருந்தான்.

சுமார் இரண்டரை வருடங்களுக்குப் பிறகு "மாயை... மாயை... எல்லாம் மாயை (பிரசங்கி 1:2)" என்று பழைய ஏற்பாட்டுக்காலத்தில் "பிரசங்கி" கூறியதைப்போன்று, அவனது மனம் இப்போது புலம்பிக்கொண்டிருந்தது.

ஞானஸ்ஞான முழுக்கு பெற்ற நாளில் இருந்து, இது வரைக்கும் பெற்றுக்கொண்ட அனுபவங்கள்... கண்ட காட்சிகள்... எல்லாம் இக்கரைக்கு அக்கரை பச்சையாக அவனுக்கு தோற்றம் காட்டிக் கொண்டிருந்தன.

ஞானஸ்ஞான முழுக்குப்பெறும் வரைக்கும் வேதசபையில் அவனுக்கு எல்லாம் புது உலகமாகவே தெரிந்தது. நாட்கள் செல்லச்செல்ல... அதற்குள் புதைந்து வேரூன்றியிருக்கும் பாகுபாடான தன்மைகள்.. பக்கசார் பான செயற்பாடுகள்... முகம்பார்த்து பணிபுரியும் போதகர்களின் ஊழியம்... அணிந்திருக்கும் வெள்ளை உடைக்கும் மனதில் உள்ள தூய்மைக்கு சம்பமிந்த மில்லாத இடைவெளிகள்.... உழைக்கும் வருவாயில் பத்தில் ஒருபங்கான "தசமபாகம்" சபைக்குச் செலுத்தாவிடில் காட்டும் பாரபட்சம்... "வேதக்காரனாக" மாறியதில் தாம்பத்திய உறவினில் ஏற்பட்ட விரிசல்... குடும்பத்துள் நிலவும் கொந்தளிப்பு....

அவன் மிகவும் மனம்குழம்பிப் போயிருந்தான்.

ஆரம்பத்தில் மனைவி கூறிய வார்த்தைகளை நினைத்துப் பார்க்கிறான் அவன்.

"எல்லாம் கொஞ்ச நாளைக்குத்தான். பிறகு சீ... எண்டு போயிடும்..."

மனைவியின் கலங்கிய கண்கள் இப்போது அவன் மனத்திரையில் நிழலாடத்தொடங்கின.

ஒவ்வொரு வருடத்தின் தொடக்கத்தில் சபையின் மேலிடம் கிளைச் சபைகளுக்கு போதகர்களை மாற்றுவது வழக்கம். அந்தவகையில்... அவன் சென்றுவரும் வேதசபை யின் போதகரும் மாற்றப்பட்டு, வேறு ஒருவர் புதிதாக வந்து சேர்ந்தார். அவர் வந்த நாளில் இருந்து அவரது சுவிஷேச ஊழியம் குறித்து, அச்சபையில் மறைமுகமாக மற்றும் காரசாரமான கருத்துக்கள் எழத்தொடங்கின

அவரின் ஏழை பணக்காரன்... என்ற பாரபட்சமான செயற்பாட்டு ஊழியத்தால், அவன் அந்தச்சபைக்குப் போவதை மெல்ல நிறுத்திக்கொள்ள ஆரம்பித்தான். இப்போது அங்குள்ள எவரும் அவனைத் தங்கள் பார்வை களில் கணக்கெடுப்பதில்லை. பொருளாதார மேம்பாட்டில் கனதியுள்ளவர்கள் மட்டும் அங்கு நெடுங்காலமாக காலூன்றி நிற்பதை அவனால் கண்டு கொள்ள முடிந்தது.

வாழ்க்கையில் வருத்தப்பட்டு பாரம் சுமப்பவர்கள் பலரும், ஒரு இளைப்பாறுதல்களுக்காக அங்குவந்து, மேட்டிமையான மனிதர்களால் இடறப்பட்டு, இருந்த இடத்தையும் வெறுத்து, வந்த இடத்தையும் தொலைத்து விட்டு, தனிமைப்படுத்தப்பட்டவர்களாக மேலும் வருத்தப் பட்டு பாரம் சுமப்பதை அவன் கண்டான். கடந்து வந்த பாதை அனைத்தும் கானல் நீராகவே தெரிந்தது அவனுக்கு.

அவன் இப்போது எந்த ஆலயங்களுக்கும் செல்வ தில்லை. மதக்கொள்கைகள் மீது அவன் கொண்டிருந்த நம்பிக்கை, விசுவாசம் அனைத்தும் மதமாற்றத்தின் பின் சிதிலமாகிப் போய்விட்டன.


இப்பொழுதெல்லாம் அவன் அந்தப்பிரதான வீதி யால் வணிக நிலையத்திற்கு வேலைக்குப் போய் வரு கின்றான். சபைக்குச் செல்வதுமில்லை; சபையைத் திரும்பி பார்ப்பதுமில்லை.


ஆனால்,

அந்த வேதசபையின் முன்னால் உள்ள பதாகையில் எழுதப்பட்டுள்ள "வருத்தப்பட்டு பாரம் சுமப்பவர்களே! நீங்கள் எல்லோரும் என்னிடத்தில் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்..." என்ற வசனம் மட்டும் அவனைப் பார்த்தபடி.....

ஒருவனும் உங்களை வஞ்சியாதபடிக்கு எச்சரிக்கையாக இருங்கள் (மத்தேயு 24:4)

ஏ.எச்.எம்.நவாஷ்



# புன்னியாமீன் என்னும் எழுத்தாளுமை

எழுதிக்கொண்டே இருத்தல் வேண்டும் என்ற உணர்வு புன்னியாமீன் என்ற ஆளுமையின் இரத்தத்தில் ஊறியிருத்தல் வேண்டும். அதனால் தான் அவர் இருக்கின்ற காலமெல்லாம் எழுதினார். இறப்பு உயிர்மூச்சை கவர்ந்து போகும் வரையில் எழுதினார். அவரது எழுத்துலகம் பரந்து விரிந்து, கடலின் ஆழத்தையும் வானத்தின் விசாலத்தையும் தொட்டது. மலையளவில் அவர் எழுதிக் குவித்தவைகள் இவைகள்:

**சிறுகதை நூல்கள்**

- தேவைகள் (1979)
- நிழலின் அருமை (1986)
- கரு (1990)
- நெருடல்கள் (1990)
- அந்தநிலை (1990)
- இனி இதற்குப் பிறகு (2003)
- யாரோ எவரோ எம்மை ஆள (1996)

(சப்ரகமுவ பல்கலைக்கழகத் தமிழ்த்துறை சிறப்புக் கற்கை மாணவி எம்.ஐ.எப். நப்லா இவரது சிறுகதைகளை 2010 ஆம் ஆண்டில் ஆய்வுசெய்துள்ளார்.)

**புதினம்**

- அடிவானத்து ஒளிர்வுகள் (1987)

**கவிதைத் தொகுப்புகள்**

- புதிய மொட்டுக்கள் (1990)
- அரும்புகள் (1990)
- பாலங்கள் (1996)

**அரசியல் ஆய்வு நூல்கள்**

- இலங்கையின் தேர்தல்கள் (அன்றும், இன்றும்) (1994)
- 94 பொதுத் தேர்தலும் சிறுபான்மையினங்களும் (1994)
- 94 ஜனாதிபதித் தேர்தலும் சிறுபான்மையினங்களும் (1994)
- 21ஆம் நூற்றாண்டில் இலங்கைத் தலைமைத்துவம் (2000)
- பாராளுமன்றத் தேர்தலும் சிறுபான்மை சமூகத்தினரும் (2000)
- "சிறுபான்மை பிரதிநிதித்துவ விகிதாசாரம் பேணும் 12வது பாராளுமன்றம் (2002)
- "மத்திய மாகாண சபையில் முஸ்லிம் அமைச்சுப் பதவிக்கு சாவுமணி (2000)

**அரசறிவியல் நூல்கள்**

- அரசறிவியல் மூலதத்துவங்கள் (பகுதி 01) (1990)
- அரசறிவியல் மூலதத்துவங்கள் (பகுதி 02) (1990)
- அரசறிவியல் கோட்பாடுகள் (1992)
- இலங்கையின் அரசியல் நிகழ்கால நிகழ்வுகள் 1995 (1995)
- பிரித்தானியாவின் அரசியல் முறை (1988)
- அரசறிவியல் கோட்பாடுகளும், எண்ணக்கருக்களும். (Political Science Supplimentary Series - 01) (1992)
- இலங்கையில் அரசியல் திட்ட வளர்ச்சி. (Political Science Supplimentary Series – 02) (1993)
- தெரிவு செய்யப்பட்ட நாடுகள் (Political Science Supplimentary Series - 03) (1993)

·உள்ளூராட்சி முறையும், கட்சி முறையும், வெளி நாட்டுக் கொள்கைகளும் (Political Science Supplimentary Series – 04) (1991)
·பல்தேர்வு மாதிரி வினா, விடைத் தொகுதி 01 (1997)
·பரீட்சை மாதிரி வினா, விடை (1998)
·B.A.. அரசறிவியல் (பொதுக் கலைத் தேர்வு) (1999)
·G.A.Q.. அரசறிவியல் (முதல் கலைத் தேர்வு) (1999)
·அரசறிவியல் (2003)

**இலக்கிய மற்றும் இலக்கிய திறனாய்வு நூல்கள்**

·இலக்கிய விருந்து (1987)
·இலக்கிய உலா (1987)
·நூல்தேட்டம் இலங்கையின் தேசிய நீரோட்டத்தில் சங்கமிக்க வேண்டியதொரு பெரு நதி (2007)
·இலங்கை முஸ்லிம், எழுத்தாளர்கள், ஊடகவிய லாளர்கள், கலைஞர்களின் விபரத்திரட்டு (2004 –2009 வரையில் 15 தொகுதிகள்)

**பொது அறிவு நூல்கள்**

·பொது அறிவுச்சரம் (6 தொகுதிகள்)
·பொது அறிவு நிகழ்காலத் தகவல்கள் (2006)
·சர்வதேச நினைவு தினங்கள் (3 பாகங்கள்) (2010)

**பல்துறை நூல்கள்**

·கிராமத்தின் ஒரு தீபம் (1978)
·எம்.வை. அப்துல் ஹமீத் (2004)
·ஆப்கான் மீது அமெரிக்கத் தாக்குதல் (2001)
·Wills Wolrd Cup 96 நினைவுகள் (1996)
·தமிழ் – முஸ்லிம் இன உறவு (2006)

**பாடவழிகாட்டி நூல்கள்**


·க.பொ.த.சாதாரண தர மாணவர்களுக்கான வரலாறும், சமூகக்கல்வியும் பாடம் தொடர்பான நூல்கள் மொத்தம் 08
·தனது மனைவி மஸீதா புன்னியாமீனுடன் இணைந்து எழுதிய தரம் 05 புலமைப்பரிசில் மாணவர்களுக்கான நூல்கள் மொத்தம் 93

பீ.எம்.புன்னியாமீன் பல்துறைச்சார்ந்த பெருந் தொகை தமிழ்நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். அவற்றின் தொகை 176. இவரின் வெளியீட்டுப் பணியக மான சிந்தனை வட்டம் 340 நூல்களை வெளியிட்டு உள்ளது. கலை, கல்வி, விளையாட்டு, அரசியல், சமூகவியல் என்று தொடரும் துறைகள் சார்ந்து 15000க்கும் மேற்பட்ட கட்டுரைகளை எழுதியுள்ளார். ஆரம்ப காலங்களில் இலங்கை, இந்தியா மற்றும் புலம்பெயர் தமிழர்கள் வாழும் நாடுகளில் வெளிவரும் தமிழ் இதழ்களிலும், பத்திரிகைகளிலும் எழுதிய இவர் அண்மைக்காலமாக இலத்திரனியல் ஊடகங்களில் அதிகமாக எழுதினார். லண்டனிலிருந்து வெளிவரும் தேசம்– இணையத்திலும், பிரான்ஸிலிருந்து வெளிவரும் இலங்கை நெற் இணையத்திலும், இந்தியாவிலிருந்து வெளிவரும் முன்னணி இணையத்தளமான தட்ஸ்தமிழ் (வன் இந்தியா) இணையத்தளத்திலும் இவரது பல அரிய கட்டுரைகளும் அரசியல் ஆய்வுகளும் களமாகியுள்ளன.

சப்பிரகமுவ பல்கலைக்கழக தமிழ்த்துறையின் இறுதியாண்டு மாணவியான செல்வி எம்.ஐ.எப் நபீலா என்பவர் "இலங்கையில் தமிழ் எழுத்தாளர்களும் இணையப் பாவனையும்" எனும் தலைப்பில் தமிழ் ஜேர்னலிஸ்ட் எனும் இணையத்தில் 2010இல் எழுதிய ஆய்வுக் கட்டுரையில் உலகளாவிய ரீதியில் செயல்படும் 183 இணையத் தளங்களில் பீ.எம்.புன்னியாமீனின் ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளதைச் ஆதாரங்களுடன் எடுத்துக்காட்டியுள்ளார்.. மேலும் புன்னியாமீனின் கட்டுரைகள் இடம்பெற்றுள்ள 183 இணையத்தளங் களின் முகவரிகளையும் ஆங்கில அகரவரிசைப்படி பதிகை செய்துள்ளார். நபீலா தனது ஆய்வில் இவ்வாறு எழுதியுள்ளார்: "இவரின் ஆக்கங்கள் இலங்கை, இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், பிரித்தானியா, நோர்வே, சுவிச்சர்லாந்து, பிரான்ஸ், அவுஸ்திரேலியா, ஜேர்மனி, ஐக்கிய அமெரிக்கா, கனடா, தென் ஆபிரிக்கா, மொரிசியஸ் தீவுகள் போன்ற நாடுகளை தளமமைத்துக் கொண்டு இயங்கும் நூற்றுக்கணக்கான இணையத் தளங்களில் இவருடைய பல ஆக்கங்கள் வெளிவந்த வண்ணமே உள்ளன. கூகூல் http://www.google.lk, Yahoo http://www.yahoo.com, எம்.எஸ்.என்.http://www.msn.com திரட்டி களிலிருந்து இணையத்தள தேடல்களின் அடிப்படை யில் இதுவரை 183 இணையத்தளங்களில் இவரின் ஆக்கங்களையும், இவர்பற்றிய ஆக்கங்களையும் காணமுடிகின்றது." (மேலதிக தகவலுக்காக பார்க்க, <http://www.ilankainet.com/2010/10/blog-post_09.html>)

உலகளாவிய ரீதியில் விக்கிப்பீடியா (Wikipedia) 282 மொழிகளில் வெளிவருவதும், அதிக வாசகர்களால் வாசிக்கப்படும் இணையத் தளங்களின் வரிசையில் 5வது இடத்திலிருப்பதும் நாம் அறிந்த விடயமாகும். புன்னியா மீன் விக்கிப்பீடியா குழுமத்தில் இணைந்து (2010), தமிழ் விக்கிப்பீடியாவில் இலங்கை எழுத்தாளர்கள், ஊடகவிய லாளர்கள், கலைஞர்கள் மற்றும் வரலாற்று அறிஞர்கள் ஆகியோரை ஆரம்பத்தில் அறிமுகம் செய்தார். பின்னர் தொடர்ந்து இலங்கை அரசியல், பொருளாதாரம், வரலாறு, கலைத்துவ அம்சங்கள் மற்றும் இலங்கை எழுத்தாளர்களின் நூல்கள் ஆகியவற்றை பதிவு செய்ததுடன், அண்மைக்காலங்களில் உலகளாவிய ரீதியில் கிரிக்கெட் வீரர்களைப் பற்றியும் எழுதினார். மேலும் இலங்கையில் மட்டுமல்லாமல் இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், பர்மா (மியன்மார்) போன்ற நாடு களில் உள்ள தமிழ் முஸ்லிம் எழுத்தாளர்கள், பற்றியும் தமிழ்பேசும் முஸ்லிம்களால் வெளியிடப்பட்ட சிற்றிதழ் கள் பற்றியும் தொடர்ச்சியாக எழுதினார்.

தமிழ் விக்கிப்பீடியாவில் புன்னியாமீனின் கட்டுரையாக்கம் தொடர்பான பதிவில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. நவம்பர் 14, 2010 முதல் மார்ச் 16, 2011 வரையிலான காலகட்டத்தில் இவர் முதலில் 500 கட்டுரைகளையும் எழுதியுள்ளார். தொடர்ந்து இவரால் நவும்பர் 14, 2010 முதல் ஏப்ரல் 5, 2011 வரையிலான















காலப்பகுதியில் 1000 கட்டுரைகளும், ஏப்ரல் 6, 2011 முதல் மே 5, 2011 வரையிலான காலப்பகுதியில் 2000 கட்டுரைகளும், மே 6, 2011 முதல் ஜூன் 22, 2011 வரையிலான காலப்பகுதியில் 3000 கட்டுரைகளும், ஜூன் 23, 2011 முதல் ஓகஸ்ட் 22 2011 வரையிலான காலப்பகுதியில் 4000 கட்டுரைகளும், ஓகஸ்ட் 23, 2011 முதல் செப்டம்பர் 30 2011 வரையிலான காலப்பகுதியில் 5000 கட்டுரைகளும், அக்டோபர் 1, 2011 முதல் அக்டோபர் 19 2011 வரையிலான காலப்பகுதியில் 6000 கட்டுரைகளும் அக்டோபர் 20 2011 முதல் நவம்பர் 6 2011 வரையிலான காலப்பகுதியில் 7000 கட்டுரைகளும் நவம்பர் 07, 2011 முதல் நவம்பர் 13, 2011 வரையிலான காலப்பகுதியில் 7500 கட்டுரைகளும் எழுதப்பட்டுள்ளன. இணையத்தளங்களின் ஊடாக தன்னுடைய எழுத் தாக்கங்களை முன்வைப்பதில் புன்னியாமீனின் பங்களிப்பு விசாலத்துவமிக்கதாக அமைகின்றது. இவரது ஆக்கங்கள் சர்வதேச ரீதியிலான இணையத் தளங்களில் வெளிவந்துள்ளன. இதனால் சர்வதேச ரீதியில் தமிழ் இணையத்தள வாசகர்களுக்கு நன்கு பரீட்சயமான ஒரு பெயராகவே இவரின் பெயர் பிரபல்யம் பெற்றுள்ளது. அண்மையில் புன்னியாமீன் இணையத்தளங்களில் பிரசுரமான 70 கட்டுரைகளை தொகுத்து "சர்வதேச நினைவு தினங்கள்" (2010) எனும் பெயரில் 03 பாகங்களை வெளியிட்டிருந்தார். இம்முயற்சி பற்றி இந்தியாவில் புதுச்சேரியைச் சேர்ந்த தமிழ் பேராசிரியர் முனைவர் மு. இளங்கோவன் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார். "இலங்கை மத்திய மலைநாட்டில் தலைநகர் கண்டி மாநகருக்கு அண்மை யில் அமைந்துள்ள சிற்றூரில் பிறந்து வாழ்ந்துவரும் கலாபூசணம் புன்னியாமீன் அவர்கள் என் நெஞ்சங் கவர்ந்த எழுத்தாளர். உலக அளவில் நினைவுகூரப்பட வேண்டிய செய்திகளை இவர் இணையதளங்களில் எழுதியமை கண்டு வியந்துபோனேன்.இணையத்தால் இணைந்தவர்கள் நாங்கள்."

நூலகவியலாளர் (லண்டன்) என். செல்வ ராஜா புன்னியாமீன் பற்றி பின்வருமாறு குறிப்பிட்டு உள்ளார். "எம்மவரது பணிகள் வரலாற்றில் அழியாது நினைவுகூரப்பட இவர் ஆற்றியுள்ள சுயநல நோக் கற்ற உதவி எம்மவரால் மறக்கப்படக்கூடாததாகும். எதிர் காலத்தில் பீ.எம். புன்னியாமீன் அவர்களது பெயரை அவர் நல்நோக்கத்துடன் வெளியிட்டுவரும் இவ்வா வணங்கள் தமிழ்படைப்புலக வரலாற்றில் அழிக்கப்பட முடியாதவாறு பொறித்துவைக்கும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை."

பீர் முகம்மது புன்னியாமீன் (நவம்பர் 11, 1960 – 10 மார்ச் 2016) மத்திய மலைநாட்டின் தலைநகர் கண்டி மாநகருக்கு அருகேயுள்ள உடதலவின்ன எனும் ஊரைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவர், கண்டி உடதலவின்ன ஜாமியுல் அஸ்ஹர் மத்திய கல்லூரி கண்டி மடவளை மதீனா தேசியக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவர். பேராதனைப் பல்கலைக்கழக இளங்கலைப் பட்டதாரி யான இவர், ஊடகத்துறையில் துறையில் டிப்ளோமா பட்டத்தினைப் பெற்றார். மாணவப் பருவத்திலிருந்தே வாசிப்புத்துறையில் தீவிர ஆர்வம் காட்டி வந்த இவரின் சுய ஆக்கமான முதல் உருவகக் கதை "அரியணை ஏறிய அரசமரம்" எனும் தலைப்பில் 1978 ஜூலை 2ஆம் திகதி தினகரன் வாரமஞ்சரியில் பிரசுரமானது. இவரது ஆக்கங்கள் இந்தியாவில் கலை மகள், தீபம், தாமரை உட்பட பல புலம்பெயர் இலக்கிய சஞ்சிகைகளிலும், ஈழத்து தேசிய பத்திரிகைகள், சஞ்சிகைகளிலும் பிரசுரமாகின. இவரின் முதலாவது நூல் 1979 ஆம் ஆண்டில் "தேவைகள்" எனும் தலைப்பில் வெளிவந்தது. தொழில் ரீதியாக 1983ஆம் ஆண்டில் இலங்கை ஆசிரியர் சேவையில் இணைந்த புன்னியா மீன், பின்பு கல்லூரி அதிபராகவும், மத்திய மாகாண சபையின் கல்வி, கலாசார அமைச்சின் இணைப்பதிகாரியாகவும், மத்திய மாகாண கலாசார அமைச்சின் உதவிப் பணிப்பாளராகவும் சேவையாற்றி 2004ஆம் ஆண்டில் சுயவிருப்பின் பேரில் ஓய்வுபெற்றார்.

தொண்ணூறுகளின் நடுக்கூற்றில் கண்டியில் தனியார் கல்வி நிறுவனமொன்றில் வகுப்புகளை நடத்து கின்ற சந்தர்ப்பத்தில்தான் புன்னியமீனை நான் சந்தித்தேன். நாங்கள் இருவரும் அக்கால பகுதியில் அந்நிறுவனத்தில் வகுப்புகளை நடத்தியிருக்கிறோம். பொதுநலம் சார்ந்த விடயங்கள் பற்றி பேசியிருக்கிறோம். படைப்புத்துறைச்சார்ந்து நாங்கள் பேசியதில்லை. அவருடைய சில நூல்களை பார்த்திருக்கிறேன். மேலோட்டமான பார்வைதான்! நுண்ணயத்தேடலோடு படித்ததில்லை. ஆனால் இணையங்களில் வெளியான அவரது சில கட்டுரைகளை விருப்பத்துடன் வாசித்திருக் கிறேன். முகநூல், தொலைபேசி என்று எங்களது உரை யாடல் தொடர்ந்திருந்தது. அதனால்தான் அவரது இறப்பு எனக்குள் வலித்தது. அவரது ஜீவன் இணைய எழுத்துக் களில் உலாவருவதை உணர்கின்றேன். அதனை அறிந்து தான் ஜீவநதியில் அவர் பற்றி எழுதச் சொன்னாரா பரணீதரன்?.

# நிழல்கள் - 4



## சொரயாவுக்குக் கல்லெறிதல்
## (116 நிமிடம், பாரசீக மொழி - 2008 )

அ. யேசுராசா

படத்தின் தொடக்கத்தில் பின்வரும் வரிகள் காட்டப்படுகின்றன.


**"குர் ஆனின் வரிகளை உரத்து மேற்கோள் காட்டுவதன் மூலம், தனது ஏமாற்றுத் தந்திரங்களை மறைத்துவிடலாமென நம்பும் வெளிவேடக்காரன் போல், நடக்கவேண்டாம்."**

**- ஹஃவேஸ், *14ஆம் நூற்றாண்டு ஈரானியக் கவிஞன்.***

இது ஓர் உண்மைக்கதை. பிரெஞ்சு - ஈரானிய பத்திரிகையாளனான

ஃவிரேய்டோன் சஹேப்ஜாம் எழுதிய நூலை அடிப்படையாகக் கொண்டு படமாக்கப்பட்டது.

ஆரம்பத்தில் ஒரு நடுத்தர வயதுப் பெண் ஸஹ்ரா, ஆற்றங்கரையில் மண்ணைக் கிளறிச் சில எலும்புகளை எடுத்துக் கழுவுகிறாள்; பக்கத்தில் வைக்கிறாள். காரில் ஃவிரேய்டோன் சஹேப்ஜாம் என்ற பத்திரிகையாளன் வருகிறான்; அவனது கார் பழுதாகிறது. அவன் வேறு வாகனத்தில் வந்து ஹஷெம் என்ற மெக்கானிக்கை ஒழுங்குசெய்கிறான். அந்நியனான பத்திரிகையாளனைத் தெருவில் தொடர்புகொள்ள ஸஹ்ரா முயல்கிறாள். முல்லா ஷேக் ஹசனும் மேயர் இப்ராஹிமும் அங்கு வருகின்றனர். ஸஹ்ராவை முதிய பைத்தியம் என்று அவனிடம் கூறி, அவளைக் கலைக்கின்றனர். பின் சிறிய கடையில் அவன் தேநீர் அருந்தும் போது, தனது வீட்டுக் குறிப்பை அவனிடம் ஸஹ்ரா சேர்ப்பிக்கிறாள். அவன் அங்கு செல்கிறான்; அவள் நடந்த கதையை விபரமாகக் கூற, காட்சிகளாகப் படம் விரிகிறது!




சிறைக்காவலனான அலி, மனைவி சொரயாவை மணவிலக்குச் செய்துவிட்டு, பதினான்கு வயதான மெஹ்ரியை மணம்புரிய விரும்புகிறான்; மரணதண்டனையிலிருந்து தன்னைக் காப்பாற்றினால், மெஹ்ரியை மணம் செய்து தருவதாக - சிறையிலுள்ள அவளின் தகப்பன், அலியிடம் கூறியுள்ளான். அலி சொரயாவை மணவிலக்குக்கு வற்புறுத்துகிறான்; அடித்தும் பார்க் கிறான். தனது நான்கு பிள்ளைகளின் (இரண்டு ஆண்கள், இரண்டு சிறுமிகள்) எதிர்காலப் பாதுகாப்பையும் நலனை யும் கருதி அவள் மறுக்கிறாள். அலி, முல்லா ஷேக் ஹசனை சொரயாவிடம் கதைத்து வற்புறுத்துமாறும் செய் கிறான். அப்போதும் அவள் மறுக்கிறாள். இஸ்லாமியச் சட்டம் அனுமதிக்கும் தற்காலிக மனைவியாக (சிக்ஹெஹ்) தன்னுடன் இருக்கும்படியும், அவளையும் பிள்ளைகளை யும் தான் பாதுகாப்பதாகவும் ஷேக் ஹசனும் முயல்கிறான். அவ்வேளை அங்கு வரும் - சொரயாவின் மாமி முறையான ஸஹ்ரா, "வெளியே போ... நீ கொண்டுதிரிகிற புனித நூலை அவமதிக்கிறாய்" என்று ஏசி அவனைக் கலைக்கிறாள். அவன், "உனது வெறுப்பு விஷமாக உனக்குத் திரும்பி வரும்" என்று கூறி சொரயாவிடம், "உனக்கும்தான்.... இருவரும் பார்ப்பீர்கள்" எனச் சொல்லி வெளியேறுகிறான். அலி தாக்கியதில், சிறுமிகள் இருவரையும் அழைத்துக் கொண்டு சென்று ஸஹ்ராவின் வீட்டில் சொரயா தங்குகிறாள். ஹஷெமின் மனைவி இறந்துவிடு கிறாள்; அவனும் மனவளர்ச்சி குன்றிய மகனும் தனித்து விடுகின்றனர். உணவு சமைத்தும் வீட்டைத் துப்புரவு செய்தும் அவனுக்கு உதவும்படி - அலியின் தூண்டுதலினால் - முல்லா ஷேக் ஹசனும், மேயர் இப்ராஹிமும் சொரயாவிடம் வற்புறுத்துகின்றனர். ஹஷெமின் மனைவியில் பற்றுக் கொண்டிருந்த சொரயா அதற்குச் சம்மதிக்கிறாள்; வேலைக்காக அவளுக்குச் சிறுதொகைப் பணமும் கிடைக்கிறது. மணவிலக்குப் பெறுவ தற்கு அலிக்கு இன்னொரு சாட்சி தேவைப்படுவதால், ஹஷெமை அச்சுறுத்தி தனக்குச் சார்பாக்கு கிறான். சிறையில் முன்பு தண்டனை அனுபவித்த விபரத்தைக் கூறி வெருட்டியே, முல்லா ஹசனையும் அவன் தனக்குச் சார்பாக்கினான்.

ஹஷெமுக்கும் சொரயாவுக்கு மிடையில் தொடர்பு இருப்பதாக,



அலியும் முல்லாவும் ஊரில் வதந்தியைப் பரப்புகின்றனர். ஒருநாள் வீதியில் வைத்து சொரயாவை அடிக்கும் அலி, இவள் எனக்குத் துரோகம் இழைத்துவிட்டாள் எனக் கத்துகிறான்.

"எனது மனைவி விபச்சாரி. நீ விபச்சாரி" என்றபடி சொரயாவை இழுத்து அடிக்கிறான். "எனக்கு எந்தக் கௌரவத்தையும் இவள் விடவில்லை."

"எனக்கு உதவுங்கள்" என்று சொரயா அலறுகிறாள். அங்கு வரும் ஸஹ்ரா சொரயாவை மீட்டுக் கொண்டு செல்கிறாள். இப்ராஹிமைத் தனது வீட்டுக்கு வருமாறு சொல்லும்படி ஒரு பெண்ணிடமும் தெரிவிக்கிறாள்.

இப்ராஹிமும், முல்லாவும், அலியும், ஹஷெமும் ஸஹ்ராவின் வீட்டுக்கு வருகின்றனர்; ஹஷெமை பலவிதங்களில் மிரட்டி விசாரிக்கின்றனர். சொரயா அவனது வீட்டில் தங்குகிறாளா, படுக்கையில் படுக்கிறாளா எனவெல்லாம் கேட்கின்றனர். முதலில் குழப்பம் அடையாவிட்டாலும், பிறகு அச்சத்தில் அவர்களிற்கு ஹஷெம் பணிகிறான். "எனது வீட்டில் இரவில் தங்கினாள்; கணவனிடம் மட்டும் சொல்லக்கூடியவற்றையும் என்னிடம் சொன்னாள்; எனது கட்டிலில் படுத்தாள்" எனவெல்லாம் கூறினான்.

அங்கு சொரயாவும் இருக்கிறாள். "பொய்! ஒரு நிமிடம்கூட அதிகம் ,அங்கு தங்கவில்லை. கதவு எப்போதும் திறந்து இருந்தது. நான் சத்தியம் செய்கிறேன்."

சொரயா ஹஷெமைப் பார்த்து, "ஏன் இப்படிச் சொல்கிறாய்? நான் உனது மனைவியிடம் அன்பாயிருந்தேன். உனது மகனிடமும் அன்பு பாராட்டினேன். இவர்கள்தான் - முல்லா ஹசனும், இப்ராஹிமும் - உனக்கு உதவக் கேட்டார்கள்."

"இரண்டு ஆண்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். உனது குற்றமற்ற தன்மையை நீ நிரூபிக்க வேண்டும்." - இப்ராஹிம்.

"நான் ஏன் நிரூபிக்க வேண்டும்? குற்றஞ் சாட்டுவோர்தான் நிரூபிக்க வேண்டும்." - சொரயா.

"கணவன் மனைவியைக் குற்றஞ்சாட்டும்போது அவள், தான் நிரபராதியென நிரூபிக்க வேண்டும்; அது சட்டம். மறுவளமாக கணவனை மனைவி குற்றஞ் சாட்டும் போதும் அவள்தான் நிரூபிக்கவேண்டும்." - இப்ராஹிம்.

"இப்போது எல்லாம் தெளிவாகிவிட்டது. எல்லாப் பெண்களும் எப்போதும் குற்றவாளிகள். எல்லா ஆண்களும் அப்பாவிகள்." - ஸஹ்ரா.

"உனது பெரிய வாயை மூடு....!" - சொல்லியபடியே அலி போகிறான்.

"தொலைந்துபோ .... அருவருப்பு!" - ஸஹ்ரா

இப்ராஹிம் போகும்போது ஸஹ்ரா அவனை மறித்துச் சொல்கிறாள்: "நாங்கள் நீண்ட காலமாய்ப் பழக்கம் (அவளின் கணவன் முன்பு இறந்தபின், அவளை மணக்க இப்ராஹிம் விரும்பினான்). உண்மையைச் சொல். இது ஒரு சதி! அவன் இளம் பெண்ணை மணக்க முயல்கிறான்; அதற்காக...."

"இல்லை. இது ஒரு குற்றம்... கணவனுக்கு எதிராக, இரு மகன்களுக்கெதிராக, இக்கிராமத்துக்கெதிராக...., இஸ்லாத்துக் கெதிராக...." - இப்ராஹிம்.

முல்லா, மேயர் இப்ராஹிம், சொரயாவின் தந்தை மற்றும் சிலர் கூடி, அவளுக்கு மரண தண்டனை வழங்கி - கல்லெறிந்து அதனை நிறைவேற்றுவதாக முடிவெடுக்கின்றனர்; ஒரு சிறுமியின்மூலம் முடிவினையும் எழுத்தில் சொரயாவுக்கு வழங்குகின்றனர். ஸஹ்ரா சொரயாவை வெளியே கொண்டு சென்று பாதுகாக்க முயல்கிறாள். ஆனால், வீட்டைச் சுற்றி புரட்சிக் காவலர்கள் நிற்பதால் இயலவில்லை.

"இறுதியில் அவன் (கணவன்) செய்து முடித்து விட்டான்." - சொரயா.

தனது இரண்டு சிறிய மகள்களை ஸஹ்ராவிடம் சொரயா ஒப்படைக்கிறாள். ஒரு மகளுக்கு தனது சங்கிலியை அணிவிக்கிறாள்; மற்றவளுக்கு மோதிரத்தை அணிவிக்கிறாள்.

"இது எனது அம்மா தந்தது. நீயும் உனது மூத்த மகளுக்குக் கொடு."

ஸஹ்ராவும் சொரயாவும் வெளியில் வருகின்றனர். ஆண்கள் கத்துகின்றனர்; நெருக்குகின்றனர். "கண்ணியமாக நடந்து கொள்ளுங்கள்" எனக் கூறியபடி, ஒருவனை ஸஹ்ரா தள்ளுகிறாள். "கடவுளின் பெயரால் நடவுங்கள்" என ஒரு முதாட்டியும் கூறுகிறாள்.

கற்களைத் தட்டி சிறுவர்கள் சத்தமெழுப்புகின்றனர்.

தண்டனை வழங்கவேண்டிய இடத்தில் இப்ராஹிம் முன்னுக்கு வந்து, "இது ஏகமனதான முடிவு. தீர்ப்பு மரண தண்டனை." எனச் சொல்கிறான்.

"மரணம்... மரணம்... மரணம்..." எனக் கும்பல் கத்துகிறது.

முல்லா ஹசன் முன்வந்து கூறுகிறான் : "நீதி கோருகிறது." சொரயாவை நோக்கி, "நீ கொல்லப்படுவாய். இந்தப் பெண் எங்கள் கிராமத்தைக் களங்கப்படுத்தினாள். தனது பாவங்களுக்கு அவள் விலை கொடுக்கவேண்டும். நீங்கள் எறியும் ஒவ்வொரு கல்லுக்கும் உங்கள் கௌரவம் மீட்கப்படும்."

"நான் அழப்போவதில்லை. நீயும் அப்படி யில்லையா?" - சொரயா.

"உன் பலத்துடன் பிரார்த்தனை செய். இறைவனும் சொர்க்கமும் உனக்காகக் காத்திருக்கின்றனர். எங்களுக்காகவும் பிரார்த்தனை செய்." - ஸஹ்ரா.

"உனக்குச் சொல்ல ஏதும் இருந்தால் இதுதான்

நேரம். இது உனக்குக் கடைசிச் சந்தர்ப்பம்." - இப்ராஹிம்.

சொரயா முக்காட்டுத் துணியை எடுத்து வீசுகிறாள். அது நிலத்தில் விழுகிறது.

"எப்படி இதைச் செய்ய முடியும்?" ஒருவர்.

"என்னை யாரென்று உங்களுக்குத் தெரிய வில்லை எனத் தோன்றுகிறது. நான் சொரயா. உங்கள் வீடுகளுக்கு வந்துள்ளேன். உங்கள் உணவுகளைப் பகிர்ந்துள்ளேன். நாங்கள் நண்பர்கள். எப்படி இதனை நீங்கள் எனக்குச் செய்ய இயலும்? நான் உங்கள் அயலவள். (மகன்களைப் பார்த்து) உங்களின் தாய். (தகப்பனைப் பார்த்து) மகள். (அலியைப் பார்த்து) மனைவி. யாருக்கானாலும் எப்படி இதைச் செய்யலாம்?"

"இது கடவுளின் சட்டம். கடவுள் பெரியவன்." ஒருவர்.

"கடவுள் பெரியவன். கடவுள் பெரியவன்." - கூச்சல்.

சொரயாவைப் பள்ளத்தில் இறக்கி, இடுப்புவரை மண்ணை மூடுகின்றனர்.

சொரயாவின் தகப்பனிடம், "சொல்ல ஏதும் இருக்கிறதா?" என இப்ராஹிம் கேட்கிறான்.

"அவள் இனி என் மகள் இல்லை. நான் அவளின் தகப்பனும் அல்ல."

தகப்பன் முதலாவது கல்லை வீச முயல, ஸஹ்ரா குறுக்கே வந்து, "வேண்டாம் வேண்டாம்" என்கிறாள். அவளை அகலச் சொல்கின்றனர். தான் சொரயாவின் இடத்தில் இருப்பதாகவும், குழந்தைகளுக் காக சொரயாவை விடும்படியும் கேட்கிறாள். கெஞ்சு கிறாள்.

"இன்னொரு கல்லைத் தாருங்கள். கடவுளே இந்த விபச்சாரியைக் கொல்ல எனக்கு உதவு." - தகப்பன்.

அவர் சில கற்களை வீச அவை சொரயாமீது படவில்லை.

"இப்ராஹிம்! இது அடையாளம். எறிந்த கற்கள் அவள்மீது படவில்லை. ஏனென்றால், அவள் குற்ற மற்றவள் எனக் கடவுள் அறிவார்."- ஒரு முதிய பெண்.

"நான் எறிகிறேன்" எனக் கூறி அலி கல்லை எறிகிறான்; அது சொரயாவின் நெற்றியில் படுகிறது.

"வேசி மகன்! கொலைகாரர்கள்" என ஸஹ்ரா கத்துகிறாள். அலி தொடர்ந்து கற்களை எறிகிறான்; சொரயா சரய்கிறாள். நெற்றியில் இரத்தம் வடிகிறது. ஸஹ்ரா நிலத்தில் வீழ்ந்து அழுகிறாள். சொரயாவும் கதறி அழுகிறாள்.

முல்லா ஹசன் எறிகிறான்; படுகிறது. "அல்லாஹூ அக்பர்" எனக் கத்துகிறான். அலி, மகன்களிடம் கற்களைக் கொடுக்கிறான்; சின்னவன் தயங்கி அழுகிறான். "எறியுங்கள்.... கடவுளுக்காக" என முல்லா ஹசன் சொல் கிறான். மூத்தவன் தம்பியைப் பார்த்து, எறியவேண்டுமெனத் தலையாட்டுகிறான். பிறகு இருவரும் சேர்ந்து எறிய, அவை தாயின் முகத்தில் படுகின்றன. ஹஷெமிடமும் கல்லைக் கொடுத்து எறியச் சொல்கிறான் அலி. ஹஷெ மின் மகன் தந்தையை அணைத்து அழுகிறான்; ஹஷெம் கல்லை எறியாது மகனுடன் செல்கிறான். கூட்டம் மாறிமாறி எறிகிறது. முகத்திலும் - உடலெங்கும் இரத்தம்; வேதனையில் சொரயா கதறுகிறாள். சில பெண்கள் தம்மைக் கட்டி அணைத்து அழுகின்றனர். இரத்தக் கூடாகக் கிடக்கும் சொரயாவை அண்மித்து, நிலத்தில் பதிந்து நோக்குகிறான் அலி. கண் மெல்ல அசைகிறது. "அவள் இன்னும் உயிரோடு!" எனக் கத்துகிறான். கூட்டம் சேர்ந்து எறிகிறது; பின்னர் கலைந்து செல்கிறது.

"எல்லாம் வல்ல இறைவன், இன்று நீ செய்த வற்றை மன்னிக்கட்டும்." - ஸஹ்ரா இப்ராஹிமிடம்.

பெண்கள் சேர்ந்து சடலத்தைக் கொண்டுவந்து, ஆற்றங்கரையில் புதைக்கின்றனர்.

**

வெளியேற முயலும் பத்திரிகையாளனை முல்லாவும் புரட்சிகரக் காவலரும் தடுக்கின்றனர்; அவனது பொருள் களைச் சோதனையிட்டு ஒலி நாடாக்களை அழிக்கின் றனர். ஆயினும் அவன் சிறிது தூரம் செல்கையில், மூல ஒலி நாடாவை ஸஹ்ரா இடைவழியில் அவனிடம் தருகிறாள்; முல்லா வும் காவலரும் துரத்தியும் பத்திரிகையாளனைப் பிடிக்க முடியவில்லை. அவன் காரில் தப்பிச் சென்று விடுகிறான்.

ஸஹ்ரா சொல்கிறாள் : "ஏன் பயம்? நான் வணங்கும் கடவுள் பெரியவன். அல்லாஹூ அக்பர்! எங்கள் கிராமம் நாட்டின் ஏனைய பகுதிகளுக்கு உதாரண மாகிறது. இப்போது முழு உலகமும் அறியும் இங்கு என்ன நடந்ததென. ஆம், உலகம் அறியும்!"

கல்லெறிந்து கொல்லும் தண்டனை முறை மிகவும் கொடுமையானது. இங்கு ஓர் அப்பாவிப் பெண் அந்தத் தண்டனைக்குள்ளாகிறாள். பார்ப்பவரின் மனச் சாட்சியை உலுக்குவதாகப் படம் அமைந்திருக்கிறது. கடவுளின் பெயராலும் மதச் சட்டங்களின் பெயராலும் சக மானுடஜீவிக்கு விளைவிக்கப்படும் அநீதி, யாரையும் வெட்கமடையச் செய்யும்! சொரயா, அலி, முல்லா, ஸஹ்ரா, இப்ராஹிம் ஆகிய பாத்திரங்கள் சிறப்பாக உருவாக்கப்பட்டுள்ளன. ஆரம்பத்திலிருந்தே மெல்லிய துயர இசை படம் முழுவதும் பரவி, காட்சிச் சூழலுக்கு வலுவூட்டுகிறது.


சைரஸ் நொவ்ரஸ்தெஹ் நெறியாள்கை செய்த இத்திரைப்படம், 2008 இல், ரொறொன்ரோ உலகத் திரைப் பட விழாவில் முதலில் திரையிடப்பட்டது. அங்கு நெறி யாளர் தெரிவு விருதை வென்றமையும் குறிக்கத் தக்கது.

- 25. 03. 2016



இ.சு.முரளிதரன்

# உ.நிசாரின் ஒரே பூமியில் நீயும் நானும்




பல்வகைமை உருக்காட்டியுள் வார்த்தைகள் அலாதிகரமாகத் தெரிவதாகவே கவிதை அனுபவம் உணரப்படுகின்றது. சமூகதரிசனம்-படைப்பு மனம் கட்டிறுக்கமான மொழி நயாதீனமான உள்ளடக்கம் – தீவிர வாசிப்பு போன்ற பன்முகப் பரிமாணங்களை வெளிப்படுத்துபவனே இலக்கிய ஆளுமையாக விதந்துரைக்கப்படுகின்றான். குட்டிகளை வாயிற் கவ்வும் பூனை ஒன்றின் பிரியத்தோடு தான் ஒவ்வொரு படைப்பினையும் வாசிக்கத் தொடங்குகின்றோம். ஆனாலும் மொழியின் சாத்தியப்பாடுகளை அகலப்படுத்தி அற்புத அனுபவத் தொற்றலை அனைத்துப்படைப்புகளும் நிகழ்த்தி விடுவதில்லை. மாயாஜாலத் தொடுகையினை தகவமைக்கும் பிரதிகளை எவருமே கொண்டாடத் தவறுவதுமில்லை. இந்த மெய்ம்மையினை மனங்கொண்டே உ.நிசாரின் "ஒரே பூமியில் நீயும் நானும்" என்ற பிரதி குறித்த எனது கருத்துக்களைப் பதிவு செய்கின்றேன்.

கனவுப்பூக்கள் (2005), ஓயாத அலைகள் (2007), திராட்சை ரசம் (2009) ஆகிய கவிதைத் தொகுப்புகளோடு, சிறுகதைகள், சிறுவர் பாடல்கள், சிறுவர் கதைகள் அடங்கிய தனித்தனித் தொகுப்புக்களை உ.நிசார் படைத்தளித்துள்ளார். எழுபதுகளின் முடிவில் இலக்கிய உலகினுள் பிரவேசித்து இன்று வரை தொடர் செயற்பாட்டாளராக காணப்படுவது அவரது சிறப்புக்களில் முதன்மையானது. "போலச் செய்தலில்" முகிழ்த்து தற்புதுமையில் நிலைகொண்டிருக்கிறார் என்பதை படைப்புக்களின் வீச்செல்லை புலப்படுத்துகிறது.

பானு வெளியீடாக எழுபது கவிதைகளை உள்ளடக்கி நூலுருப் பெற்றுள்ள தொகுதியின் முன்னுரையில் "நாயும் சிங்கமுமாகலாம்" "ஏமாற்றம்" ஆகிய கவிதைகள் அருட்டுணர்வின் பிரதிபலிப்பால் செதுக்கப்பட்டவையென வாக்கு மூலம் தந்துள்ளார். இவ்வாக்கு மூலம் பல கவிதைகளோடு பொருந்திப்போவது இத்தொகுப்பின் பலவீனமென றேபடுகிறது. "நம்பிக்கை" கவிதை வைரமுத்துவின் சாயலோடு தெரிய "நீ அலை நான் கரை" என்னும் பிறிதொரு கவிதை வரிகள் வைரமுத்துவின் வரிகளாகவே வந்து விழுந்துள்ளன. "கொன்ட்கிறீட் பூதங்கள்" போன்ற வினோதமான சொற்கட்டுமானங்களை உருவாக்கிய உ.நிசார் அருட்டுணர்வு வரிகளைத் தவிர்த்திருந்தால் இத்தொகுப்பு மேலும் மெருகேறி யிருக்கும் என்பது எனது நம்பிக்கை.

இயற்கை குறித்த நேசமும், அஃறிணைகளோடான பாசமும், தாய்மையின் வெகுமதியும் தொகுதியெங்கும் விரவிக்கிடப்பினும் ஏக்கத்தின் நிழல் கவிந்த வரிகளிலேயே கவித்துவம் விஞ்சி மிளிர்கின்றது.

"மழைபெய்து
ஓய்ந்த வானமாய்
வெறிச்சோடிக்கிடக்கிறது"

என்றும்

"நீ ஏந்திய
பிச்சைப்பாத்திரத்துக்குள்
ஒலிக்கிறது உனது பசி"

என்றும் எழுதுகோல் அசையும் போதுதான் வார்த்தைகள் வீரியம் பெறுகின்றன. வாழ்க்கை பற்றிய விசாரணைகள் தேறிய பெறுமானங் கொள்கின்றன. சொற்களின் ஆழ் துணையுள் உள் நீரோட்டச்சலசலப்பினை உணர முடிகின்றது. இப்பண்புகளே கவித்துவத்தின் குறிகாட்டிகளென நான் கருதுகிறேன்.

"காட்டிலே ஒரு காட்சி", "வெற்றி", "எங்களூர் ஓடை" போன்ற இசைப்பாடலின் சாயலோடு எழுதப் பட்டுள்ளன. மரங்களுக்கும் கொடிகளுக்குமான தொடர்பிலே பேரரசியலை பேசும் தருணத்திலே சிந்திக்க வைக்கிறார். மைக்கல் H.ஹார்ட் பற்றிய பதிவிலும், யாழ்ப்பாணத்திலிருந்து இஸ்லாமிய சகோதரர் வலிந்து விரட்டப்பட்ட பதிவிலும் உணர்வின் எழுச்சியைக் காணமுடிகின்றது. சுடுகுழல்களைத் தட்டிக் கேட்கும் திராணியற்று முஸ்லீம் சகோதரர்களுக்கு நிகழ்ந்த வன்மத்தின் போது வேடிக்கை பார்த்திருந்த செயல் பற்றிய குற்ற உணர்வும், மனவுறுத்தலும் அனைத்துத் தமிழர்களுக்கும் உண்டு என்பதை இவ்விடத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன். முள்ளிவாய்க்கால் நிகழ்வு பற்றி எவ்வித உறுத்தலுமின்றி பெரும்பான்மை மக்கள் இருந்துவிட்டதைப் போல, யாழ்ப்பாணத் தமிழர்கள் கல்லாகிவிடாமல் தங்கள் படைப்புக்களில் தெளிவுபட உணர்வுகளைக் கொட்டித்தீர்த்துள்ளனர்.

"கல்தோன்றி
மண் தோன்றாக் காலத்துக்கு
முன்தோன்றிய மூத்த தமிழர்கள்"

மட்டுமல்ல சுடுகுழலின் முன்னே இலங்கையின் அனைத்துப் பிரஜைகளுமே மௌனிகளாகி வன்முறைக்களானதே வரலாறாக விரிந்துள்ளது. உ.நிசாரின் சமூகக் கோபத்திற்கு தலைவணங்குகிறோம். இத்தகைய பிரக்ஞை பூர்வமான (சற்றே எள்ளல் ததும்பும்) சொற்கட்டமைப்பையே தொடர்ந்தும் எதிர்ப்பார்க்கின்றோம். "ஒரே பூமியின் நீயும் நானும்" என்ற தொகுதியை தூக்கி நிறுத்துவதே இவ்வகைப்பட்ட கவிதைகள் தான் எனக் கூறி நிறைவு செய்கின்றேன். ●

உங்கள் இல்லங்களில் நடைபெற
இருக்கும் மங்களகரமான
நிகழ்வுகளுக்கு...

# மதி கலர்ஸ்








**WEDDING CARD SHOW ROOM**

No.10, Murugesar Lane, Nallur, Jaffna.

T.P: 021 2229285, 077 7222259


இச் சஞ்சிகை அல்வாய் கலையகம் வெளியீட்டு உரிமையாளர் கலாநிதி த. கலாமணி அவர்களால் மதி கலர்ஸ் நிறுவனத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.